# புதிய ஜனநாயகம்

அக். 2009
ரூ. 7.00



## பிரிக்கால் தொழிலாளர் போராட்டம்:

# வன்முறையாளர்கள் பயங்கரவாதிகள் யார்?



செல்லம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர்

# “ஊழல் பெருச்சாளி ரமாராணியை கல்லூரியை விட்டே விரட்டுவோம்!”

## — மாணவிகளின் போர்க்கோலம்!

சென்னை - கிண்டி அருகே செயல்பட்டு வருகிறது, செல்லம்மாள் மகளிர் கல்லூரி. பச்சையப்பன் அறக்கட்டளைக் குட்பட்ட இக்கல்லூரியில், சுமார் மூவாயிரம் மாணவிகள் பயின்று வருகின்றனர்.

கடந்த ஆகஸ்டு 26-ஆம் தேதியன்று துவங்கி, வகுப்பு புறக்கணிப்பு, அரசியல் கட்சி பிரமுகர்களை சந்தித்து மனு கொடுப்பது, கல்வி இயக்குனரிடம் முறையிடுவது, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது- என பல கட்டங்களை கடந்த பின்னரும் தொடர்ந்து வருகிறது, இக்கல்லூரி மாணவிகளின் போராட்டம்!

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, கடந்த 10 மாதங்களுக்கு முன்பாக வேறு கல்லூரிக்கு மாற்றப்பட்டிருந்த செல்லம்மாள் கல்லூரியின் முன்னாள் முதல்வர், 'ஊழல்ராணி' ரமாராணியை மீண்டும் இதே கல்லூரிக்கு முதல்வராக நியமித்திருக்கிறது, பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகம்.

நன்கொடை என்ற பெயரில் கட்டில், மெத்தை, பீரோ, மின் விசிறி என்று (தாய்வீட்டு சீதனத்தை!) மாணவிகளிடம் மிரட்டிப் பறித்து, தன் வீட்டிற்கு எடுத்து செல்வது; இவரது இலஞ்ச ஊழலை எதிர்க்கும் மாணவிகளை மிரட்டுவது, பழிவாங்குவது - என கல்லூரிக்குள் காட்டுத் தர்பாரே நடத்தியவர்தான், இந்த ரமாராணி!

தனியாருக்கு நிகராக அரசு உதவிபெறும் கல்லூரிகளில் நடக்கும் அட்டூழியங்கள், அடக்குமுறைகள், பகற்கொள்ளை-வழிப்பறிகளுக்கு ஒரு வகைமாதிரிதான் இக்கல்லூரியும் அதன் ஊழல் முதல்வரும்!

ஆக, இத்தகைய ஊழல் பேர்வழி ரமாராணியை தமது கல்லூரியின் முதல்வராக நியமிக்கக் கூடாது; இலஞ்ச ஊழலும் கட்டாய நன்கொடையும் எந்தக் கல்லூரியிலும் தொடரக்கூடாது என்பதுதான் போராடும் மாணவிகளின் கோரிக்கை.

இம்மாணவிகளின் போராட்டத்தின் நியாயத்தையும், இவர்கள் காட்டும் முன்முயற்சியையும் முனைப்பையும் உணர்ந்து, களமிறங்கியது புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி. கல்லூரி வளாகத்துக்குள்ளே முடங்கிக் கிடந்த இப்பிரச்சினையை வீதிக்கு கொண்டு வந்தது. ''ஊழல் பெருச்சாளி ரமாராணியை கல்லூரியை விட்டே விரட்டியடிப்போம்!'' என்ற தலைப்பிட்ட சுவரொட்டிகள் நகரெங்கும் பளிச்சிட்டன.

பச்சையப்பன் கல்லூரியில் செயல்படும் பு.மா.இ.மு.வின் கிளை சார்பில், இம்மாணவிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக அக்கல்லூரி மாணவர்களை அணிதிரட்டி செப்-3 அன்று மறியல் போராட்டத்தை நடத்தினர்.

இதனைச் சற்றும் எதிர்பார்க்காத போலீசு, ஆத்திரமுற்று தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தது. போராட்டத்தை முன்னின்று நடத்திய பு.மா.இ.மு.வின் பச்சையப்பன் கல்லூரி கிளைச் செயலர் ஏழுமலை உள்ளிட்ட இருவரைக் கைது செய்து சிறையிலடைக்க எத்தனித்தது!

இத்தகவல் அறிந்த நூற்றுக்கு மேற்பட்ட செல்லம்மாள் கல்லூரி மாணவிகள், வகுப்புகளை புறக்கணித்துவிட்டு, போலீசு நிலையம் முன்பு குவிந்தனர். ''எமக்காகப் போராடிய மாணவர்களை விடுதலை செய்! இல்லையேல் எம்மையும் கைது செய்!'' எனக் கோரி போலீசு நிலையத்தை முற்றுகையிட்டனர். வேறுவழியின்றி, அம்மாணவர்களை அன்று மாலையே விடுதலை செய்தது போலீசு!

நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும், இம்மாணவிகளுக்கு ஆதரவாக பச்சையப்பன் கல்லூரி மாணவர்களின் மறியல் போராட்டத்தையும் கண்டு அதிர்ச்சியுற்ற மாவட்ட நிர்வாகம், கல்லூரி முன்பு போலீசுப் படையைக்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்





2-ஆம் பக்கத் தொடர்ச்சி

குவித்தது. குற்றவாளிகளைப் போல் மாணவிகளைக் கண்காணித்தது. கல்லூரி நிர்வாகமோ, போராட்டத்தைத் தூண்டும் 'அன்னிய சக்திகளை' அடையாளம் காட்டும்படி மாணவிகளை மிரட்டியது!

இத்தகைய மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சாத முன்னணியாளர்கள், பு.மா.இ.மு.வின் வழிகாட்டலில், அனைத்து மாணவிகளிடமும் தொடர்ந்து சந்தித்து பேசி நம்பிக்கையூட்டினர். அடுத்தகட்டப் போராட்டம் குறித்து விவாதித்தனர்.

இதனைதொடர்ந்து, செப்-8 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகளை அணிதிரட்டிக் கொண்டு கல்லூரி கல்வி இயக்குனரை சந்தித்து முறையிடச் சென்றனர். பெருந்திரளாக மாணவிகள் திரண்டு வருவதைக் கண்டு அரண்டுபோன கல்லூரி கல்வி இயக்குனர், அலுவலகக் கோப்புகளை அப்படியே போட்டுவிட்டு பின்வாசல் வழியே அப்போதுதான் ஓடியிருந்தார். அவரைச் சந்திக்காமல், இங்கிருந்து செல்வதில்லை என உறுதியாய் நின்றனர் மாணவிகள். வேறுவழியின்றி, அவருக்குப் பதிலாக நிதித்துறை இணை இயக்குனர் மனுவைப் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக எழுதிக் கொடுத்தார்.

இம்மனு மீதான விசாரணைக்காக ஒருவாரம் காத்திருந்தனர். நடவடிக்கை எதுவுமில்லை. வீதியில் இறங்காமல் இதற்கோர் விடிவுப் பிறக்காது என்பதையுணர்ந்த மாணவிகள், கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிட்டனர்.

அதன்படி, செப்-16 அன்று மெமோரியல் அரங்கம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாய் நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தனர். இதனைக் கண்டு பீதியடைந்த கல்லூரி நிர்வாகம், செப். 15-ந் தேதி மாலை 5மணியளவில் திடீரென்று நாளை அனைவருக்கும் "செமினார்" என்றும், அதில் கலந்து கொள்ளாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மிரட்டியது!


கல்லூரிக்கு முன் முகாமிட்டிருந்த போலீசும் தன்பங்குக்கு கல்லூரியிலிருந்து ஆர்ப்பாட்டத்துக்குக் கிளம்பிய மாணவிகளைத் தடுத்து நிறுத்த முனைந்தது. மாணவிகளோ "போலீசு கமிசனரிடம் அனுமதி வாங்கி ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம். இதனைத் தடுக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை" என பதிலடி கொடுத்து விட்டு அணிஅணியாய் கிளம்பினர், ஆர்ப்பாட்டத்திற்கு!

சென்னை பு.மா.இ.மு. மாவட்டச் செயலர் தோழர் வ.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், பு.மா.இ.மு.வின் மாவட்ட இணைச்செயலர் தோழர் த.கணேசன் மற்றும் போராட்டத்தை முன்னின்று நடத்திய முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர். பச்சையப்பன் கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி மாணவர்கள் உள்ளிட்டு எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அணிதிரண்டு கண்டன முழக்கமிட்டு நகரையே அதிர வைத்தனர்.

"ஊழல்பெருச்சாளி ரமாராணியை கல்லூரியை விட்டு விரட்டும் வரை தமது போராட்டம் தொடரும்" என அறிவித்துள்ள இம்மாணவிகள், அடுத்தக் கட்டப் போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

— பு.ஜ.செய்தியாளர், சென்னை


## தற்போது விற்பனையில்...



ஈழத்தின் மீதான
இந்திய மேலாதிக்கப் போருக்கு
பதிலடி கொடுப்போம்!
தேர்தலைப் புறக்கணிப்போம்!

மே நாள் 2009, தஞ்சை
பேரணி காட்சி– பொதுக்கூட்ட உரை

வெளியீடு:
ம.க.இ.க, வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு.

DVD விலை: ரூ.50.00




ம.க.இ.க.வின்
பதினொன்றாவது பாடல் ஒலிக்குறுந்தகடு

நான்
உலகம்

இந்திய அரசின் வல்லரசுக் கனவைக்
கலைக்கும் பாடல்கள்

வெளியீடு:
மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.

MP3 விலை: ரூ.30.00



நேபாள புதிய ஜனநாயகப் புரட்சி
எதிர்கொள்ளும் சவால்கள்!

சென்னையில் 19.09.200 அன்று
நடைபெற்ற அரங்கக்கூட்ட உரை

அறிமுக உரை:
தோழர் மருதையன்,
பொதுச் செயலாளர்,
ம.க.இ.க., தமிழ்நாடு.

சிறப்புரை:
தோழர் பசந்தா,
அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்,
நேபாள ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி
(மாவோயிஸ்ட்).

வெளியீடு:
இந்திய -நேபாள மக்கள் ஒற்றுமை அரங்கம்.

DVD விலை: ரூ.50.00

கிடைக்குமிடங்கள்

புதிய கலாச்சாரம்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, (15-வது தெரு அருகில்),
அசோக் நகர், சென்னை-600 083.
தொலைபேசி: 044-2371 8706

அஞ்சலில் பெற,
கூரியர் கட்டணம் ரூ.30
சேர்த்து அனுப்புக.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு,
எல்லீசு சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 044-2841 2367

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 12**

அக்டோபர் 2009

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.7.00**
**ஆண்டுசந்தா: ரூ.90.00**

*வெளிநாடுகள்*
(வான் அஞ்சலில்)
**ஆண்டு சந்தா: US$ 20**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


**பிரிக்கால் தொழிலாளர் போராட்டம்:**

## வன்முறையாளர்கள், பயங்கரவாதிகள் யார்?

கடந்த செப்டம்பர் 21-ஆம் தேதியன்று கோவை பிரிக்கால் ஆலையின் மனிதவள மேம்பாட்டு அதிகாரியான ராய் ஜே.ஜார்ஜ், தொழிலாளர்களால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் மாண்டு போயுள்ளான். இதைக் கண்டு முதலாளிகள் சங்கம் 'வன்முறை' , 'பேராபத்து' என்று அலறுகிறது. தொழிலாளர்களை வன்முறையாளர்களாகவும் பயங்கரவாதிகளாகவும் முதலாளித்துவ ஊடகங்கள் சித்தரிக்கின்றன. அமைச்சர்களோ, தொழிலாளர்களின் வன்முறைப்போக்கை நசுக்கப் போவதாக முதலாளிகளின் அடியாட்களைப் போலப் பேசுகின்றனர். வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டதாக பிரிக்கால் தொழிற்சங்க முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டுள்ளனர். கோவை நகரமே கலவர பூமி போல போலீசின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது.

பிரிக்கால் ஆலையைப் பன்னாட்டு ஏகபோக நிறுவனமாக விரிவாக்கி வளர்க்கும் நோக்கத்தோடு, அதீத உற்பத்தி இலக்கு வைத்து தொழிலாளர்கள் கசக்கிப் பிழியப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு அடக்கப்பட்டனர். இந்த ஆலையில் ஏற்கெனவே ஐந்து தொழிற்சங்கங்கள் இருந்தும், அவை துரோகத்தனத்தில் இறங்கி, முதலாளி விஜய் மோகனின் அடக்குமுறைகளுக்குப் பணிந்து போயின. எனவே, கடந்த 2007-ஆம் ஆண்டில் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து புதிய தொழிற்சங்கத்தைத் தொடங்கினர். அன்று முதல் தொழிலாளர்கள் மீது அதிகரித்து வரும் கொடுமைகள்-அடக்குமுறைகள்-பழிவாங்கும் நடவடிக்கைகள் கொஞ்சநஞ்சமல்ல. கொத்துக் கொத்தாக வேலை நீக்கம், பணியிட மாற்றம் என்று தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். தொழிலாளர்களின் புதிய தொழிற்சங்கத்தை கடந்த மூன்றாண்டுகளாக அங்கீகரிக்க மறுத்ததோடு, தொழிலாளர் ஆணையர் முதல் உயர்நீதி மன்றமும் உச்ச நீதி மன்றமும் போட்ட எல்லா உத்தரவுகளையும் ஆலை நிர்வாகம் குப்பைக் கூடையில் வீசியெறிந்தது.

தொழிலாளர்களையும் சங்க முன்னணியாளர்களையும் மிரட்டுவது; அடியாட்களை வைத்துத் தாக்குவது; கருங்காலிகளை உருவாக்கி, தொழிலாளர் ஒற்றுமையைச் சீர்குலைப்பது; வேலைநீக்கம் செய்தும் சம்பளத்தை மறுத்தும் தொழிலாளர்களைப் பட்டினி போட்டுப் பணிய வைப்பது; உற்பத்தியைப் பெருக்க பெண் தொழிலாளிகளை மிரட்டி கட்டாயமாக ஓவர்டைம் செய்ய வைப்பது; 14 ஆண்டுகளாக இந்த ஆலையில் பணியாற்றிவரும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்காமல் தினக்கூலிகளாக வைத்துச் சுரண்டுவது; தொழிலாளர் ஆணையர் உத்தரவுகளை அலட்சியப்படுத்திவிட்டு அடக்குமுறைகளைத் தொடருவது - எனக் கணக்கற்ற அட்டூழியங்களைச் செய்து வந்த பிரிக்கால் நிர்வாகத்தின் கொடூரங்களைத் தாங்க முடியாமல் தொழிலாளர்கள் திருப்பித் தாக்கிவிட்டனர். இதில் முதலாளியின் அடியாளாகச் செயல்பட்ட மனிதவள மேம்பாட்டு அதிகாரியான ராய் ஜே.ஜார்ஜ் மாண்டு போயுள்ளான். இதற்காக வருத்தப்படவோ, அனுதாபப்படவோ, அச்சப்படவோ ஏதுமில்லை.

தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படுவதும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படுவதும் பிரிக்கால் ஆலையில் மட்டும் நடக்கும் அதிசயம் அல்ல. தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தரவேண்டும் என்ற கட்டுப்பாடு ஏதும் கூடாது என்பதிலிருந்து, தொழிற்சங்கமே இருக்கக் கூடாது என்பது வரை தொழிற்சங்க உரிமைகள் அனைத்தையும் பறிக்கக் கோருகிறது உலகமயமாக்கம். இதற்கு ஏற்றாற்போல தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்படுகின்றன. தொழிற்சங்கமே அமைக்க முடியாதபடி சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

உலகமயமாக்கம் என்ற பெயரில், நாட்டின் தொழிலையும் வர்த்தகத்தையும் வளர்ப்பது என்ற பெயரில் எல்லா ஓட்டுக் கட்சிகளின் ஆதரவோடு இத்தகைய முதலாளித்துவ பயங்கரவாதம் கோரத் தாண்டவமாடுகிறது. கடந்த மாதத்தில் தொழிற்சங்கம் தொடங்கியதற்காக இரு விமானிகளை வேலை நீக்கம் செய்ததை எதிர்த்து ஜெட் ஏர்வேஸ் விமான ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் செய்தனர். அந்நிறுவனத்தின் முதலாளியான நரேஷ் கோயல், மேலும் சில ஊழியர்களை வேலைநீக்கம் செய்து எச்சரித்ததோடு, தொழிலாளர்களைப் ''பயங்கரவாதிகள்'' என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினான். தொழிற்சங்கம் தொடங்கியதற்காக 188 தொழிலாளர்களை வேலையிலிருந்து வீசியெறிந்தது, ஹூண்டாய் நிறுவனம். சென்னை அருகே, நெல்காஸ்ட் ஆலையில் விபத்தில் மாண்டுபோன ஒரிசா மாநிலத் தொழிலாளியை அனாதைப்

பிணமாக தெருவில் வீசியெறிந்ததை எதிர்த்துப் போராடிய குற்றத்திற்காக 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்து மிரட்டியது ஆலை நிர்வாகம். பொன்னேரியிலுள்ள கெம்பிளாஸ்ட் சன்மார் ஆலையில் தொழிற்சங்கம் தொடங்கியதற்காக 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்துள்ளது, அந்த ஆலை நிர்வாகம். கோவையில் உள்ள சீரீராம் கோகுல் டெக்ஸ்டைல்ஸ் ஆலையில் பீகாரைச் சேர்ந்த 22 தொழிலாளர்கள் எவ்வித உரிமையுன்றி கொத்தடிமைகளாக அடைத்து வைத்து சித்திரவதை செய்யப்பட்ட கொடுமை, கடந்த செப்.28-ஆம் தேதி வெளிவந்து நாடே அதிர்ச்சியடைந்தது.



**பிரிக்கால் நிர்வாகத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக, அவ்வாலை வாயிலின் முன் பிரிக்கால் தொழிலாளர்கள் நடத்திய மறியல் போராட்டம்.** (கோப்புப் படம்)

தமிழகம் மட்டுமல்ல, நாடெங்கும் உலகெங்கும் ஏகாதிபத்திய உலகமயமாக்கம் தொழிலாளர் வர்க்கத்தை கசக்கிப் பிழிவதும், பொருளாதாரச் சரிவைக் காரணம் காட்டிப் பல்லாயிரக்கணக்கானோரை வேலைநீக்கம் செய்து பட்டினிச் சாவுக்குத் தள்ளுவதும் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. இவற்றுக்கெதிரான தொழிலாளர் போராட்டங்கள், குர்கான் வழியில் மிருகத்தனமாக ஒடுக்கப்படுகின்றன. பாசிச அடக்குமுறைச் சட்டங்கள் ஏவிவிடப்படுகின்றன. உலகமயமாக்கத்தின்கீழ் எங்கெல்லாம் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு அடக்குமுறைகள் ஏவப்படுகின்றனவோ, அங்கெல்லாம் குமுறும் தொழிலாளர்கள், சட்டரீதியான வாய்ப்புகள் அனைத்தும் அடைக்கப்பட்ட நிலையில் தன்னெழுச்சியாக எதிர்த்தாக்குதல்களை நடத்துகின்றனர்.

கடந்த ஆண்டு செப்டம்பர் 23-ஆம் தேதியன்று நொய்டாவிலுள்ள இத்தாலியைச் சேர்ந்த கிராசியானோ எனும் கார் உதிரிப்பாக உற்பத்திக் கூடத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தொழிலாளர்களால் அடித்தே கொல்லப்பட்டான். உலகின் மிகப் பெரிய இரும்பு-எஃகு நிறுவனமான அர்சிலர் மித்தல் நிறுவனத்தின் லக்சம்பர்க் தலைமை நிர்வாக அலுவலகத்தை

**பிரிக்கால் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து சென்னை-அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 01.10.09 அன்று புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி நடத்திய தெருமுனைக்கூட்டம்.**




ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் முற்றுகையிட்டு கடந்த மே 12-ஆம் தேதியன்று அடித்து நொறுக்கி நாசப்படுத்தினர். பிரான்சு நாட்டின் டவுலோசிலுள்ள மோலெக்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் அதன் தலைமை நிர்வாக இயக்குனரை நடுத்தெருவில் ஓட ஓட அடித்துத் துவைத்துள்ளனர். கடந்த ஜூலை 28-ஆம் தேதியன்று சீனாவின் ஜிலின் நகரிலுள்ள டோங்குவா இரும்பு-எஃகு ஆலையின் நிர்வாக அதிகாரி தொழிலாளர்களால் அடித்தே கொல்லப்பட்டான். அன்றாடம் தொழிலாளர்கள் மீது முதலாளித்துவ பயங்கரவாதம் ஏவி வரும் கொடூரங்களின் எதிர்விளைவுகள்தாம் இவை.

இந்நிலையில், முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிரான பிரிக்கால் தொழிலாளர்களின் நியாயமான போராட்டம் ஒடுக்கப்பட்டால், இனி வரும் நாட்களில் எந்தவொரு தொழிலாளர் போராட்டமும் மிருகத்தனமாக நசுக்கப்படும். எனவே, பிரிக்கால் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரிப்பது தொழிலாளர்களின் - உழைக்கும் மக்களின் உடனடிக் கடமை. ஆனால் போலி கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கங்களோ, முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து கொண்டு பிரிக்கால் தொழிலாளர்களின் எதிர்த்தாக்குதலை ''வன்முறை'' என்று ஊளையிடுகின்றன. தர்ணா, மறியல், மொட்டையடித்து நாமம் போட்டு ஊர்வலம் என்ற வழக்கமான தொழிற்சங்க செக்குமாட்டுப் பாதையில், 'அமைதியான-ஜனநாயக வழியில்' போராடச் சொல்லி தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்கின்றன. இத்தகைய துரோகத் தொழிற்சங்கங்களை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், முதலாளித்துவ பயங்கரத்தை வீழ்த்தும் ஆற்றல் பெற்ற புதிய, புரட்சிகரமான சங்கத்தைக் கட்டியமைத்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் முடியாது.

இன்றைய உலகமயமாக்க சூழலில், முதலாளித்துவ பயங்கரவாதம் தலைவிரித்தாடும் சூழலில், வர்க்கம் என்ற முறையில் தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு போராடினால்தான், இதர பிரிவு உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போராடினால்தான், தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படுவதையும் முதலாளித்துவ பயங்கரவாதத்தையும் தடுத்து நிறுத்த முடியும். உலகமயச் சூழலில் இத்தகைய தொழிலாளர் வர்க்க ஒற்றுமையையும், மாறிய சூழலுக்கு ஏற்ப புதிய போராட்ட முறைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும். குறுகிய தொழிற்சங்கவாத வட்டத்திற்குள் முடங்கி விடாமல், இத்தகைய அடக்குமுறை-உரிமை பறிப்புகளுக்கு அடிப்படையாக உள்ள மறுகாலனியாக்கத்தை எதிர்த்து அரசியல் போராட்டங்களைக் கட்டியமைப்பதே, இன்று தொழிலாளர் இயக்கத்தின் முன்னுள்ள உடனடிப் பணி. •

# மாவட்ட ஆட்சியரை நடுத்தெருவுக்கு இழுத்து வந்த மாணவர் போராட்டம்!

பாழடைந்து சிதலமடைந்த கட்டிடம், சுற்றிலும் முட்புதர்கள், ஆங்காங்கே துருத்திக் கொண்டு நிற்கும் கம்பிகள், உள்ளே நுழையும் முன்பே குடலைப் புரட்டியெடுக்கும் துர்நாற்றம் - இவை ஏதோ பராமரிப்பின்றிக் கிடக்கும் பேருந்து நிலைய இலவசக் கழிப்பிடங்களின் அவலநிலை அல்ல!

திருச்சி-மன்னார்புரம் அருகே உள்ள டாக்டர் அம்பேத்கர் ஆதிதிராவிடர் மாணவர்கள் நல விடுதியின் 'உண்மை' நிலை இது! ஏறத்தாழ தமிழகம் முழுவதுமுள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதிகளின் 'முகவரி'யும் இதுதான்!

பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியிருக்கும் இவ்விடுதி கட்டப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. இவ்விடுதியில் குடிநீர், கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதையும் எதிர்பார்க்க முடியாது! இங்கு வழங்கப்படும் உணவின் தரத்தை பற்றி 'வார்த்தைகளில்' சொல்லிவிடவும் முடியாது!

இவ்விடுதியில் 2005-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி அடிப்படை வசதிகள் செய்துத் தரக்கோரியும், சுகாதாரமான முறையில் உணவு வழங்கக் கோரியும் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறது. இதன் விளைவாக சமீபத்தில் 26 கழிப்பறைகள் கட்டித் தரப்பட்டுள்ளது. சுகாதாரமான உணவு வழங்குவதையும் உத்திரவாதப்படுத்தியிருக்கிறது.

இந்நிலையில்தான் கடந்த 23.9.09 அன்று அதிகாலை விடுதியின் அறையொன்றில் தூங்கிக் கொண்டிருந்த 3 மாணவர்கள் மீது மேற்கூரை இடிந்து விழுந்து, ஆபத்தான நிலையில் மேல்சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



இதனைக் கண்டு கொதித்தெழுந்த மாணவர்கள் தங்கள் உயிருக்குப் பாதுகாப்புக் கோரியும், விடுதிக் கட்டிடத்தை மாற்றக் கோரியும் பு.மா.இ.மு.வின் விடுதி கிளைச் செயலர் தோழர் சங்கத் தமிழன் தலைமையில் அணிதிரண்டு டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் மறியலில் ஈடுபட்டனர்.

கோரிக்கை என்ன என்பதைக் கூட கேட்காமல், உதவி கமிசனர் ராஜேந்திரன், போலீசு ஆய்வாளர் கோடிலிங்கம் தலைமையிலான போலீசு கும்பல், காட்டுமிராண்டித்தனமாக மாணவர்களை தாக்கியது. தாக்குதல் தொடர்ந்த போதும் 'மாவட்ட ஆட்சியர்' உள்ளிட்ட உயரதிகாரிகள் வரும்வரை இங்கிருந்து கலையப் போவதில்லை என மாணவர்கள் உறுதியாய் நின்றனர். நிலைமை கைமீறிப் போனதையடுத்து, அலறியடித்து ஓடிவந்த மாவட்ட ஆட்சியரை, ''நாங்கள் அனுபவிக்கும் அத்தனை கொடுமைகளையும் நீங்கள் நேரில் வந்து அனுபவியுங்கள்'' என மாணவர்கள் இழுத்து சென்றனர். ''இடிந்து விழும் இக்கட்டிடத்திற்கு மாற்றாக புதிய கட்டிடம் கட்டுவதற்கான'' உத்திரவை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெற்ற பின்னரே, அவர் விடுவிக்கப்பட்டார்.

மூன்றுநபர் கொண்ட மாணவர் குழுவின் நேரடிப் பார்வையின் கீழ் புதிய விடுதிக்கான கட்டுமானப் பணிகள் தற்போது விரைவாக நடந்து வருகின்றன. பு.மா.இ.மு.வின் முன்முயற்சியால் கிடைக்கப் பெற்ற இத்தொடர் வெற்றிகள், அனைத்து மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும், வழங்கியிருப்பது மாத்திரமல்ல, வீதியிலிறங்கிப் போராடுவதன் வலிமையையும் உணர்த்தியிருக்கிறது!

— பு.ஜ. செய்தியாளர், திருச்சி.

---

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே!**

**இந்த இதழோடு உங்களது ''புதிய ஜனநாயகம்'' இதழ் 24-வது ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த 24 ஆண்டுகளாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவர பல்வேறு வழிகளிலும் உதவிய உங்கள் அனைவருக்கும், விற்பனையை விரிவுபடுத்தி புதிய வாசகர்களிடம் புரட்சிகர அரசியலைக் கொண்டு சென்ற முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது ஊக்கமான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு 25-வது ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.**

— ஆசிரியர் குழு

# “குடியாட்சியின் உயரதிகாரத்தை நிறுவுவதே எமது முக்கிய கடமை!”

**நேபாளத்தில் எழுந்துள்ள புதிய நிலைமைகள் குறித்து, ஐக்கிய நேபாளப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)-யின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பசந்தா அளித்த நேர்காணல்.**

*இந்திய-நேபாள மக்கள் ஒற்றுமை அரங்கம், கடந்த 19.09.2009 அன்று சென்னையில் நடத்திய ‘‘நேபாளப் புதிய ஜனநாயகப் புரட்சி எதிர்கொள்ளும் சவால்கள்’’ என்ற அரங்குக் கூட்டத்தில் உரையாற்ற வந்திருந்த ஐக்கிய நேபாளப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)-யின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரான தோழர் பசந்தா, ‘‘புதிய ஜனநாயகம்’’ இதழுக்கு நேர்காணல் தரவும் இசைவு அளித்திருந்தார். பக்க வரம்பின் காரணமாக, நேர்காணலின் பொழுது கேட்கப்பட்ட கேள்விகளுள் முக்கியமானவை மட்டும் தொகுக்கப்பட்டு, அதற்கு அவர் அளித்திருந்த பதில்கள் சுருக்கப்பட்ட வடிவில், இங்கே வெளியிடப்பட்டுள்ளது.*

*பு.ஜ. வாசகர்களும், தமிழக மக்களும் நேபாள நாட்டில் தற்பொழுது நிலவும் அரசியல் சூழ்நிலையையும், அதனையொட்டி ஐக்கிய நேபாளப் பொதுவுடமை கட்சி (மாவோயிஸ்ட்) எடுத்திருக்கும் முடிவுகளையும், அம்முடிவுகளின் அடிப்படையில் அமைந்த அக்கட்சியின் நடைமுறையையும், அதற்கு நேபாள உழைக்கும் மக்கள் அளித்து வரும் ஆதரவையும் புரிந்து கொள்ள, தோழர் பசந்தாவின் நேர்காணல் பெருமளவில் உதவும் என நம்புகிறோம்.*

*தனது இடையறாத பணிகளுக்கு இடையேயும் நேரம் ஒதுக்கி இந்த நேர்காணலைத் தந்தமைக்காக தோழர் பசந்தாவிற்கும், இந்திய-நேபாள மக்கள் ஒற்றுமை அரங்கத்திற்கும் ஆசிரியர் குழு மற்றும் பு.ஜ.வாசகர்களின் சார்பாக நமது நன்றியையும், புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*— ஆசிரியர் குழு.*

**புதிய ஜனநாயகம்:** *உங்கள் கட்சியின் தலைமையிலான அரசாங்கம், அமைதி ஒப்பந்தத்துக்கு எதிராகக் குடிமக்கள் உயரதிகாரத்தைக் கீழறுக்கும் சதிகளைக் காரணம் காட்டி பதவி விலகியுள்ளது. இப்பதவி விலகல் தவிர, வேறு மாற்று வாய்ப்புகள் பற்றி உங்கள் கட்சியில் விவாதிக்கப்பட்டதா? பதவி விலகல் மட்டுமே ஒரே சரியான தீர்வு என்பதை நீங்கள் எப்படி நியாயப்படுத்துகிறீர்கள்?*

**தோழர் பசந்தா:** குடிமக்கள் உயரதிகாரம் என்பது நேபாளத்தில் எல்லாவற்றுக்கும் மேலான மிக முக்கியமான விசயமாகும். நேபாள இராணுவம், முன்பு நாட்டின் முதன்மை எதிரியான மன்னராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தது. மக்களின் பேரெழுச்சியில் மன்னராட்சி வீழ்த்தப்பட்ட பின்னரும், இன்னமும் நேபாள இராணுவம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

1950-களில் நேபாள மக்கள் மன்னராட்சிக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்காகவும் போராடியதன் விளைவாக, நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு, நேபாள காங்கிரசு கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. ஆனால், பின்னர் இராணுவத்தின் துணையுடன் மன்னர் இந்த நாடாளுமன்றத்தையும், நேபாள காங்கிரசு அரசாங்கத்தையும் கவிழ்த்தார். ஈராண்டுகளுக்கு முன்பு நடந்த மக்கள் எழுச்சிக் காலத்தில் நீடித்த நாடாளுமன்றத்தையும் இதேபோல இராணுவத்தின் துணையுடன் மன்னர் கவிழ்த்தார். இராணுவத்தின் துணையுடன்தான் ஒவ்வொரு முறையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களைக் கலைப்பதும் கவிழ்ப்பதும் நடந்துள்ளது. எனவேதான், நேபாள மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்ட, குடிமக்களின் உயரதிகாரத்தை நிலைநாட்டுவதே முதன்மையான, முக்கியமான கடமையாக உள்ளது. நேபாள இராணுவம் குடியாட்சிக்குக் கீழ்படிந்து கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்.



தோழர் பசந்தா

எனவே தான், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் பெரிய கட்சியாக உள்ள நாங்கள், குடியாட்சியின் உயரதிகாரத்தை நிறுவுவதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளோம். இதனால்தான், மன்னராட்சியின் கீழிருந்த நேபாள இராணுவத் தலைமைத் தளபதியின் பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்கக் கூடாது என்றும், அவருக்குப் பதிலாக வேறொருவரைத் தலைமைத் தளபதியாக நியமிக்க வேண்டும் என்றும் எங்கள் கட்சியில் முடிவு செய்தோம்.

ஆனால், இதற்கு இந்திய ஆளும் வர்க்கங்களும் அமெரிக்க வல்லரசும், உலகெங்குமுள்ள பிற்போக்கு-எதிர்ப்புரட்சிவாதி

களும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து நிர்ப்பந்தங்கள் கொடுத்தார்கள். அவர்கள் குடியாட்சியின் உயரதிகாரத்தை எதிர்த்தார்கள். இராணுவத்தின் உயரதிகாரத்தை மறைமுகமாக ஆதரித்தார்கள். நேபாள இராணுவத்தில் தமது சித்தாந்தத்தைத் திணிக்க மாவோயிஸ்டுகள் முயற்சிப்பதாக அவதூறு பிரச்சாரம் செய்தார்கள். ஒன்று, அவர்களது கட்டளைகளுக்கு நாங்கள் அடிபணிய வேண்டும்; அல்லது, நாங்கள் பதவி விலக வேண்டும் என்ற நிர்பந்தமான நிலை ஏற்பட்டது. நாங்கள் மக்களுக்காகப் போராடுபவர்கள்; நேபாளத்தில் குடியாட்சியின் உயரதிகாரத்துக்காகப் போராடுபவர்கள்; நேபாள சமுதாயத்தில் ஜனநாயகத்தை நிறுவப் போராடுபவர்கள். எனவேதான், நாங்கள் அன்னிய சக்திகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியவில்லை. எங்கள் கட்சியின் தலைமையிலான அரசாங்கம் பதவி விலகி, அரசாங்கத்துக்கு வெளியே மக்களைத் திரட்டிப் போராடுவதன் மூலமே குடியாட்சியின் உயரதிகாரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் நிலைநாட்ட முடியும் என்று எமது கட்சி இதனாலேயே இச்சரியான முடிவை எடுத்தது.



**நேபாள இராணுவத் தளபதி கட்வால் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டதைக் கண்டித்து, நேபாள மாவோயிசக் கட்சி ஆதரவாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்ட பேரணி.**

***பு.ஜ:* *உங்கள் கட்சி அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலிலும் போட்டியிட்டது. இந்தியாவின் இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளோ, நீங்கள் ஆயுதப் போராட்டம் இனி பலன் தராது என்று தீர்மானித்து விட்டதாகவும், அவர்களைப் போலவே 'ஜனநாயக நீரோட்டத்தில்' சங்கமித்து விட்டதாகவும் உங்களைப் பாராட்டுகிறார்கள். அதே சமயம் இந்திய மாவோயிஸ்டு கட்சியினரோ, நீங்கள் புரட்சிக்குத் துரோகமிழைத்து விட்டதாக உங்களை விமர்சிக்கிறார்கள். இவ்விரு கண்ணோட்டங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?***

**தோழர் பசந்தா:** நேபாளத்தில் நாங்கள் மேற்கொண்டுவரும் புரட்சிகர வழிமுறை பற்றி இந்திய இடது, வலது கம்யூனிஸ்ட் கட்சியினரும், மாவோயிஸ்டு கட்சித் தோழர்களும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. இப்புரட்சிகர வழிமுறையை நாங்கள் வழமையான பாரம்பரிய முறையில் நடைமுறைப் படுத்தவில்லை. இன்றைய சூழ்நிலையில், புரட்சியை முன்னெடுத்துச் செல்லவும் புரட்சியைச் சாதிக்கவும் பாரம்பரிய முறையில் போராடுவதென்பது பொருந்தக் கூடியதாக இல்லை என்றே நாங்கள் கருதுகிறோம். ஏனெனில், உலகின் புறநிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. இம்மாற்றங்களினால் ஏற்படும் புதிய நிலைமைகளையும் புதிய முரண்பாடுகளையும் ஒவ்வொரு நாடும் மக்களும் எதிர்கொள்கின்றனர். இம்மாற்றங்களுக்கு ஏற்ப பொருத்தமான செயல் தந்திரங்களை வகுத்து, புரட்சியைச் சாதிக்க நாங்கள் விழைகிறோம். இதைப் பார்த்து, இந்தப் பிராந்தியத்துக்கேற்ற பாணியில் - அதாவது, நாடாளுமன்ற ஜனநாயகப் பாதையில் நாங்கள் பயணிப்பதாக ஒருதலைப்பட்சமாக இடது, வலது கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறுகின்றனர்.

அவர்கள் அப்படிக் கூறிக் கொண்டாலும், உண்மை என்னவென்றால், நாங்கள் புரட்சியைக் கைகழுவி விடவில்லை. ஆயுதப் போராட்டம் மட்டுமே புரட்சியின் ஒரே அங்கம் என்றும் நாங்கள் கருதவுமில்லை. புரட்சியின் வளர்ச்சிப் போக்கில், ஆயுதப் போராட்டமும் இதர அரசியல் போராட்டங்களும் பல்வேறு போராட்ட வடிவங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். இவையனைத்தும் சேர்ந்துதான் புரட்சிகர வழிமுறையை உருவாக்குகின்றன.

தற்போதைய நேபாளப் புரட்சியின் வளர்ச்சிப் போக்கானது, அவர்களது கூற்றுக்கு உதவுபவையாக உள்ளன. எனவேதான் அவர்கள், நேபாள மாவோயிஸ்டுகள் ஆயுதப் போராட்டப் பாதையில் களைப்படைந்து விட்டார்கள் என்றும், ஆயுதப் போராட்டம் இனி பொருத்தப்பாடு உடையதல்ல என்று தீர்மானித்து விட்டார்கள் என்றும், பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்கு வந்து விட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். இவையெல்லாம் அவர்களது குறுகிய நலன்களுக்கு மட்டுமே பயன்படும்.

மறுபுறம், இந்திய மாவோயிஸ்டு கட்சித் தோழர்களும் எங்களை விமர்சிக்கிறார்கள். புரட்சியின் இடைக்கட்டத்தில், வேறுபட்ட போராட்ட வடிவங்களை மேற்கொள்வதன் மூலமே புரட்சியைத் தலைமையேற்று முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். எங்களது மக்கள் யுத்தம் குறிப்பிட்ட கட்டத்தை எட்டிய நிலையில், தற்போது எங்களது புரட்சிப் போரை அமைதியான முறையில் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளதை நாங்கள் பார்க்கிறோம். எனவேதான், புரட்சியின் தேவையை ஈடுசெய்ய, இந்தச் சூழலை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள நாங்கள் முயற்சிக்கிறோம்.

இந்திய மாவோயிஸ்டு கட்சித் தோழர்கள், நாங்கள் தீர்மானித்துள்ள செயல்தந்திரத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். இதனால்தான் அவர்கள் எங்களது புரட்சிகர வழிமுறையை, புரட்சி பற்றிய பாரம்பரிய கண்ணோட்டத்தில் விமர்சிக்கின்றனர்.

***பு.ஜ:* *தற்போதைய நாடாளுமன்ற முட்டுக்கட்டை நிலையை உடைக்கவும், புரட்சியை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்லவும் உங்கள் கட்சி என்ன திட்டம் வைத்துள்ளது?***

**தோழர் பசந்தா:** இப்போது நாங்கள் அமைதிவழிப்பட்ட செயல்முறையில் உள்ளோம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு புரட்சியை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்ல, அரசியல் நிர்ணய சபையில் புரட்சிகரமான-மக்கள்

> உலகின் புறநிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. இம்மாற்றங்களினால் ஏற்படும் புதிய முரண்பாடுகளை ஒவ்வொரு நாடும் மக்களும் எதிர்கொள்கின்றனர். இம்மாற்றங்களுக்கு ஏற்ப பொருத்தமான செயல் தந்திரங்களை வகுத்து, புரட்சியைச் சாதிக்க நாங்கள் விழைகிறோம்.

நலனுக்கான சட்டங்களை இயற்ற கடுமையாக முயற்சித்து வருகிறோம். இச்சட்டங்கள் மூலம்தான் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நாட்டின் சுயாதிபத்திய உரிமையைப் பாதுகாக்கவும் முடியும்.

நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் செல்வாக்கைக் கண்டு, மக்களுக்கான புரட்சிகர சட்டங்களை இயற்றுவதில் உறுதியாக நிற்பதைக் கண்டு அஞ்சும் உலகெங்குமுள்ள எதிர்ப்புரட்சிவாதிகள், இந்த வழிமுறையைச் சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள். அரசியல் நிர்ணய சபையைக் கலைத்து, அரசுத் தலைவர் ஆட்சியை நிறுவி, பழைய சட்டங்களையே மீண்டும் நிலைநாட்டத் துடிக்கிறார்கள். இதை எதிர்த்து நாங்கள் கடுமையாகப் போராடி, மக்களுக்கான சட்டங்களை இயற்ற முயற்சித்து வருகிறோம். உள்நாட்டு-வெளிநாட்டு எதிர்ப்புரட்சிவாதிகள் இந்த அமைதிவழியிலான வளர்ச்சிப் போக்கை சீர்குலைத்தால், நேபாள மக்கள் இதற்கெதிராக மீண்டும் ஒரு பேரெழுச்சியில் இறங்குவார்கள். நாங்கள் அந்த எழுச்சியை வெற்றியை நோக்கி வழிநடத்துவோம்.

***பு.ஜ:*** *தற்போது நேபாளம் கூட்டுத்துவ (சமஷ்டி) குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் உங்களது ஐக்கிய மாவோயிஸ்டு கட்சியானது, தேசிய கூட்டுத்துவ ஜனநாயக மக்கள் குடியரசு என பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என உறுதியாகக் கோருகிறது. இது சில சொற்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையா? அல்லது வர்க்கக் கண்ணோட்டத்தில் இதற்கு தனிச்சிறப்பான முக்கியத்துவம் உள்ளதா?*

**தோழர் பசந்தா:** கூட்டுத்துவ குடியரசுக்கும் தேசிய ஜனநாயக மக்கள் குடியரசுக்கும் பண்பு ரீதியாக வேறுபாடு உள்ளது. கூட்டுத்துவ குடியரசு தற்போது நேபாளத்தில் வென்றெடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தற்போதுள்ள இக்கூட்டுத்துவ குடியரசில் நிலப்பிரபுத்துவம் இன்னமும் நீடிக்கிறது. எங்கள் நாடு இக்குடியரசின் கீழ் இன்னமும் அரைக் காலனிய-அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாகவே நீடிக்கிறது. நாங்கள் அரைக்காலனிய நேபாளத்தை சுதந்திரமான-சுயாதிபத்திய உரிமைபெற்ற நாடாகவும், அரைநிலப்பிரபுத்துவ நேபாளத்தை ஜனநாயக நாடாகவும் மாற்றியமைக்க விழைகிறோம். ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் கொண்ட கட்டமைப்புடன் உள்ள தேசிய-ஜனநாயக கூட்டுத்துவ மக்கள் குடியரசை நிறுவ விழைகிறோம். தற்போதைய குடியரசுக்கும் நாங்கள் நிறுவ விழையும் குடியரசுக்கும் பண்பு ரீதியாகப் பெருத்த வேறுபாடு உள்ளது.

***பு.ஜ:*** *நேபாளத்தில் மன்னராட்சி முறை தூக்கியெறியப்பட்ட பின்னர், நேபாள அரசின் வர்க்கத் தன்மை மாறியுள்ளதா? குடியாட்சி நிறுவப்பட்ட போதிலும், நேபாள சமுதாயத்தின் அடிப்படைகள்-அதாவது, உற்பத்தி உறவுகள் மாறவில்லையே, அது ஏன்? ஏனிந்த முரண் நிலை?*

**தோழர் பசந்தா:** நிலப்பிரபுத்துவத்தின் முதன்மைப் பிரதிநிதியாகத் திகழ்ந்த மன்னர், மக்களின் பேரெழுச்சியில் தூக்கியெறிப்பட்டுள்ளார். இதனால், நிலப்பிரபுத்துவம் இன்று நேபாளத்தில் பலவீனப்பட்டுக் கிடக்கிறது. அரசு அதிகாரத்தை முன்பு ஏந்திச் சுழற்றிய நிலப்பிரபுத்துவத்துக்குப் பதிலாக, அரசு எந்திரத்தில் இப்போது தரகு முதலாளித்துவம் முன்னணிக்கு வந்துள்ளது. மக்களின் பேரெழுச்சியால், இந்த மாற்றம் மட்டுமே நடந்தேறியுள்ளது. சமூக-பொருளாதார உறவுகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. எந்த வர்க்கமும் தூக்கியெறியப்படாததால், எந்த சமுதாய மாற்றமும் நிகழவில்லை. இதற்கு முன்பு மன்னர், தரகு முதலாளித்துவ வர்க்கத்தை தலைமையேற்று வழிநடத்தினார். இப்போது தரகு முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவத்துக்குத் தலைமை தாங்கி வழிநடத்துகிறது. இதனால் வர்க்க உறவுகளில் எந்த மாற்றமும் நேரவில்லை. வர்க்கப் போராட்டமும் மாறிவிடவில்லை.

***பு.ஜ:*** *மன்னராட்சியின் கீழிருந்த நேபாள இராணுவப் படையும், மாவோயிஸ்டுகளின் செம்படையும் தாமதமின்றி இணைக்கப்பட வேண்டும் என்று உங்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது. அமைதி ஒப்பந்தத்திலும் இந்தக் கோரிக்கையை உங்கள் கட்சி சேர்த்துள்ளது. எந்த வகையில் இரு வேறு படைகளையும் ஒன்றிணைக்கப்பட முடியும்? இந்த ஒன்றிணைவின் மூலம் உங்கள் கட்சியும் நேபாள புரட்சிகர மக்களும் பெறப்போவது என்ன?*

**தோழர் பசந்தா:** தற்போதைய அமைதி வழியிலான வளர்ச்சிப் போக்கில், நாங்கள் ஒட்டு மொத்த சமுதாயக் கட்டமைப்பையும், ஒட்டுமொத்த அரசு எந்திரத்தையும் மாற்றியமைக்கக் கடுமையாகப் போராடி வருகிறோம். தற்போது நிலவும் கட்டமைப்பின் மூலம் நேபாளத்தின் பிரச்சினைகளையோ, மக்களின் பிரச்சினைகளையோ ஒருக்காலும் தீர்க்க முடியாது. எனவேதான் நேபாள சமுதாயத்தையும், அரசு எந்திரம், அதிகார வர்க்கம், நீதித்துறை, போலீசு-இராணுவம் உள்ளிட்ட அனைத்தையும் புரட்சிகரமான முறையில் மறுவார்ப்பு செய்து மாற்றியமைக்க விழைகிறோம்.

இதனடிப்படையிலேயே இடைக்கால சட்டத்தில், இவ்விரு இராணுவப் படைகளையும் ஒருங்கிணைத்து புதிய நேபாள தேசிய இராணுவத்தைக் கட்டியமைப்பதென முடிவாகியது. இந்த புதிய தேசிய இராணுவம், குடியாட்சிக்குக் கட்டுப்பட்டதாக இருக்கும். இப்புதிய தேசிய இராணுவம் என்பது, முந்தைய நேபாள இராணுவப் படையாகவோ அல்லது செம்படையாகவோ இருக்காது. ஒட்டுமொத்த கட்டுமான மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் அமையும் புதிய தேசிய இராணுவமாக, இது இரு வேறுபட்ட இராணுவப்படைகளிலிருந்து உருவாக்கப்படும்.

***பு.ஜ:*** *நேபாளத்தின் பசுபதிநாதர் கோயில் பூசாரி நியமன விவகாரத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், இந்திய ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்க-விரிவாக்கத்தின் ஓர் அடையாளமாகவும் நேபாள மக்கள்-குறிப்பாக, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் கருதுகிறார்களா?*

**தோழர் பசந்தா:** எல்லாவற்றுக்கும் மேலாக, பசுபதிநாதர் கோயில் என்பது நேபாள இந்துத்துவ மேலாதிக்கத்தின் அடையாளச் சின்னம். இந்துத்துவ மேலாதிக்கத்தால் ஒடுக்கப்படும்

சாதியினர் பசுபதிநாதர் கோயில் பூசாரி விவ கார அரசியலாலும் ஒடுக்கப்படுகிறார்கள். மத ரீதியாக அரசியல் ஆதிக்கம் செய்யும் ஆளும் வர்க்கங்களை இந்த விவகாரத்தினூடாக நேபாள மக்களும் ஒடுக்கப்பட்ட சாதியினரும் காண்கிறார்கள். எனவேதான் அவர்கள், பசுபதி நாதர் கோயில் விவகாரத்தை தேசிய முக்கியத் துவம் வாய்ந்ததாகக் கருதிப் போராடுகிறார் கள்.

அதே நேரத்தில், நேபாளத்தில் உள்ள பசு பதிநாதர் கோயிலில் ஒரு பூசாரி இருக்கிறார் என்றால், அவர் ஒரு நேபாளியாகத்தான் இருக்க வேண்டும். எதற்காக ஒரு வெளிநாட் டுக்காரர் அங்கே பூசாரியாக இருக்க வேண் டும்? நேபாள மக்கள் நேபாளத்திலுள்ள கோயி லில் நேபாள பூசாரியை நியமிக்கவே விரும்பு கிறார்கள். இது அவர்களின் அடிப்படை உரிமை. இது எங்கள் உள்நாட்டு விவகாரம், எமது மக்கள் தீர்மானிக்க வேண்டிய விவகாரம், இதில் அன்னியர்கள் தலை யிடக் கூடாது என்றே நேபாள ஒடுக்கப்பட்ட சாதியினரும், இந்து மதத்தின் மேலாதிக்கத்தால் ஒடுக்கப்படும் நேபாள மக்களும் கருதுகின்றனர். நேபாள பசுபதி நாதர் கோயில் பூசா ரியாக யாரை நியமிப்பது என்பதை நேபாள மக்கள்தான் தீர் மானிக்க முடியும். எனவேதான், இந்த விவகாரத்தில் இந்திய ஆளும் வர்க்கங்கள் தலையீடு செய்வதை எமது மக்கள் மிக முக்கியமான பிரச்சினையாகக் கருதுகிறார்கள். இந்தியாவின் இத்தகைய தலையீட்டையும் மேலாதிக்கத்தையும் எதிர்க் கிறார்கள்.

***பு.ஜ:* நேபாள மாவோயிஸ்டுகள் இந்தியாவை எதிர்ப்பவர் கள்; சீனாவை ஆதரிப்பவர்கள் என்று இந்திய முதலாளித் துவ ஊடகங்கள் சித்தரித்து வருகின்றன. இந்தியாவின் விரிவாக்க-மேலாதிக்கத்தை விட, 'கம்யூனிச' சீனா ஒப்பீட்டளவில் குறைவான கேடு விளைவிக்கக் கூடியது என்று உங்கள் கட்சி கருதுகிறதா?**

**தோழர் பசந்தா:** நாங்கள் சுதந்திரமான, சுயாதிபத்திய நாடாக நேபாளம் நீடிக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். ஆனால், இந்திய ஆளும் வர்க்கங்களோ, நேபாள மக்களை இந்தியா வின் எதிரியாகவும் சீனாவின் நண்பர்களாகவும் தவறாகச் சித்தரித்து குற்றம் சாட்டுகின்றன. இந்த ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்கத்துக்கு அடிபணியாமல், நேபாள மக்கள் தமது சொந்தக் காலில் எழுந்து நிற்க விரும்புவதாலேயே, இப்படி அவதூறு செய்து அவை குற்றம் சாட்டுகின்றன.

நேபாள நாடும் மக்களும் இந்தியாவின் கைப்பாவையாக இருக்க வேண்டும் என்று இந்திய ஆளும் வர்க்கங்கள் விரும் புகின்றன. இந்தியாவின் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திரமான நாடாக மாற்றியமைக்க நேபாள மக்கள் விரும்பினால், சீனா வின் ஆதரவாளர்கள் என்றும், பாகிஸ்தானின் பங்காளிகள் என் றும், இன்னும் இதே போன்ற குற்றச்சாட்டுகளை வாரியிறைக் கின்றனர்; பழிசுமத்துகின்றனர். இந்திய ஆளும் வர்க்கங்களின் பிடியில் நேபாள நாடும் மக்களும் இருக்க வேண்டும் என்ப தற்காகவே இப்படி அவதூறு பிரச்சாரம் செய்கின்றன.

நாங்கள் சுதந்திரமான, சுயாதிபத்திய உரிமை கொண்ட நாடாக எமது சொந்தக் காலில் நிற்கவே விரும்புகிறோம். எந்த வொரு அன்னிய நாட்டின் கைப்பாவையாக இருக்க நாங்கள்



**பசுபதிநாதர் ஆலயத்தின் பூசாரிகளாக தென்னிந்தியப் பார்ப்பனர்கள் நியமிக்கப்படும் இந்தியத் தலையீட்டை மாற்றக் கோரி நேபாள மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணி**

விரும்பவில்லை. இந்தியா, சீனா, பாகிஸ்தான், பூடான் முதலான அண்டை நாடுகளுடனும், அமெரிக்கா மற்றும் பிற உலக நாடுகளுடனும் நாங்கள் சமத்துவமான உறவைப் பேணவே விழைகிறோம். எனவே, இந்த ஆளும் வர்க்கங் களின் தீய நோக்கம் கொண்ட பொய்ப் பிரச்சாரங்களை நம்ப வேண்டாம், குழப்பமடைய வேண்டாம் என்று இந்திய மக்க ளிடம் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

***பு.ஜ:* பிராந்திய மேலாதிக்க வல்லரசான இந்தியாவும் உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவும் நேபாளத்தின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் அதீத அக்கறை காட்டி தலையீடு செய்வது ஏன்? நேபாளத்தில் அவற்றின் போர்த் தந்திர நோக்கங்கள் என்ன?**

**தோழர் பசந்தா:** எல்லாவற்றுக்கும் முதன்மையாக, கம்யூனிச சித்தாந்தத்தின் வெற்றியைக் கண்டு அவை அஞ்சுகின்றன. தற்போதைய நிலையில், எங்கள் கட்சி நேபாளப் புரட்சியைத் தலைமை தாங்கி வழிநடத்துகிறது. நேபாளத்தில் எங்களது ஐக்கியப் பொதுவுடமைக் கட்சியே நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்ற வலுவான கட்சியாக உள்ளது. எங்களது கட்சியும் கம்யூனிச சித்தாந்தமும் உலகெங்குமுள்ள ஒடுக்கப் பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்டி, மாற்று வழியை - விடு தலைக்கான பாதையைக் காட்டி முன்னுதாரணமாகத் திகழ் கிறது. எனவே இந்திய, அமெரிக்க பிற்போக்கு-எதிர்ப்புரட்சி வாதிகளும் மக்கள் விரோத சக்திகளும் நேபாளத்திலிருந்து இப்புரட்சிகர சித்தாந்தம் காட்டுத் தீயாகப் பரவி வருவதைத் தடுத்து நிறுத்தத் துடிக்கின்றன. நேபாள உள் விவகாரங்களில் அதீத அக்கறை காட்டி தலையீடு செய்வதற்கு இது முதன்மை யான காரணமாகும்.

இரண்டாவதாக, இந்தியாவும் அமெரிக்காவும் நேபாளத்தை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, சீனா வைச் சுற்றி வளைத்து அச்சுறுத்திப் பணிய வைக்கும் தமது போர்த்தந்திர நோக்கத்துடன் காய்களை நகர்த்துகின்றன. அமெ ரிக்காவுக்குப் போட்டியாக இப்பிராந்தியத்தில் வளர்ந்துவரும் சக்தியாக சீனா இருப்பதால், அதைக் கட்டுப்படுத்தவும், சீனா வைச் சுற்றி வளைத்து மிரட்டிப் பணிய வைக்கவும், நேபாளத்தை இதற்கான தளமாகப் பயன்படுத்தவும் அவை முயற்சிக்கின்றன. அமெரிக்கா மற்றும் இந்திய ஆளும் வர்க் கங்களின் நலன்களுக்கானதாக இப்போர்தந்திரத் திட்டம் அமைந்துள்ளதால், அவை நேபாள உள் விவகாரங்களில் தலை யீடு செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. •

# போலி மோதல் கொலைகள்: அரசு பயங்கரவாதமே!

**போலீசும் இராணுவமும் நாடெங்கும் நடத்தியுள்ள 'மோதல்' கொலைகள் அனைத்தையும் விசாரணைக்குட்படுத்த வேண்டிய தருணமிது!**

ஐந்து ஆண்டுகளுக்கு முன், ஜூன் 15, 2004 அன்று அதிகாலையில், குஜராத் தலைநகர் அகமதாபாத்திற்கு அருகே மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த 19 வயதான கல்லூரி மாணவி இஷ்ரத் ஜஹன், ஜாவேத் ஷேக் உள்ளிட்ட நான்கு முசுலீம்கள் போலீசாருடன் நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாக குஜராத் அரசு அறிவித்தது. ''அந்த நான்கு பேரும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்கள்; குஜராத் முதல்வர் நரேந்திர மோடியைக் கொல்லும் திட்டத்துடன் வந்த அவர்களை வழிமறித்தபொழுது, நெடுஞ்சாலையில் நடந்த மோதலில் அவர்கள் கொல்லப்பட்டதாக'' குஜராத் போலீசு இம்'மோதல்' பற்றி தம்பட்டம் அடித்துக்கொண்டது.

இந்த 'மோதல்' கொலை பற்றி அப்பொழுதே பல்வேறு சந்தேகங்களும் விமர்சனங்களும் மனித உரிமை அமைப்புகளாலும் முசுலீம் மக்களாலும் எழுப்பப்பட்டன. 'மோதலில்' கொல்லப்பட்ட இஷ்ரத் ஜஹனின் தாயாரும், ஜாவேத் ஷேக்கின் தந்தையும் இம்'மோதல்' கொலை பற்றி விசாரிக்கக் கோரி குஜராத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். குஜராத் அரசும் தன்னை நியாயவானாகக் காட்டிக் கொள்ள இம்'மோதல்' கொலை பற்றி போலீசு விசாரணையும், துணை கோட்ட நடுவர் விசாரணையும் நடத்த உத்தரவிட்டது.

தனது அரசு நிர்வாகத்தின் கீழ் வரும் போலீசும், துணைக் கோட்ட நடுவரும் (Sub Divisional Magistrate) தனக்கு எதிராகத் தீர்ப்பெழுத மாட்டார்கள் என்ற திமிரில்தான் நரேந்திர மோடி இந்த விசாரணை நாடகத்திற்கு உத்தரவிட்டார். எனினும், குஜராத் நிர்வாகத்தைச் சேர்ந்த எந்தவொரு அதிகாரியும் இந்த விசாரணையை நடத்த ஒப்புக் கொள்ளாதது, மோடிக்கு இன்னும் வசதியாகப் போனது.


இதனிடையே, சந்தேகத்திற்குரிய மரணங்களை இனி துணைக் கோட்ட நடுவர் விசாரிக்கக் கூடாது; குற்றவியல் நடுவர் மன்றங்களைச் சேர்ந்த நீதிபதிகள்தான் விசாரிக்க வேண்டும் என மைய அரசு குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தது. இதன் அடிப்படையில் அகமதாபாத் பெருநகர நடுவர் மன்றத் தலைமை நீதிபதி இம்'மோதல்' கொலை பற்றிய விசாரணையை எஸ்.பி.தமங் என்ற அகமதாபாத் பெருநகர நீதிபதியிடம் ஆகஸ்டு 12, 2009 அன்று ஒப்படைத்தார்.

இம்'மோதல்' பற்றிய விசாரணையை 25 நாட்களுக்குள் நடத்தி முடித்த நீதிபதி எஸ்.பி.தமங், தனது அறிக்கையில், ''இம்மோதல் போலியானது; இப்போலி மோதலில் கொல்லப்பட்ட இஷ்ரத் ஜஹனும், ஜாவேத் ஷேக்கும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் கிடையாது; இப்போலி மோதலில் சம்மந்தப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நால்வரும் ஜூன் 15, 2004 அன்று அதிகாலை 4 மணிக்கு நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாக போலீசார் முதல் தகவல் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அந்த நால்வரின் உடல்களும் அன்று மதியம் 3.40 மணிக்குப் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அந்த நால்வரின் உடல்களும் அதிக விறைப்புத் தன்மையுடன் காணப்பட்டதாகப் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்து போன ஒருவரின் உடல் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கழித்துத்தான் விறைக்கத் தொடங்கும். இந்த அறிவியல் உண்மையின் அடிப்படையில் பிரேதப் பரிசோதனை அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதி, போலீசார் கூறுகிறபடி அவர்கள் அதிகாலை 4 மணிக்கு இறந்து போயிருந்தால்,

**குஜராத் போலீசு நடத்திய போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட இஷ்ரத் ஜஹன் உள்ளிட்ட நான்கு முசுலீம்கள் (கோப்புப் படம்). (உள்படம்) இஷ்ரத் ஜஹன்**



பிரேதப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு உடல் விறைத்துப் போயிருக்காது; எனவே, அந்த நால்வரும் அதிகாலை 4 மணிக்கு முன்பே இறந்து போயிருக்க வேண்டும்.

அந்த நால்வரின் உடல்களிலும் துப்பாக்கிக் குண்டுகள் உள்ளே நுழைந்தபொழுது ஏற்படுத்திய வடுக்களின் அளவை விட வெளியேறியபொழுது ஏற்படுத்திய வடுக்களின் அளவு பெரிதாக இருப்பதாகப் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனவே அந்த நால்வரும் மிகவும் அருகாமையில் இருந்தே சுடப்பட்டிருக்க வேண்டும்; மேலும், அவர்கள் உட்கார்ந்த நிலையிலேயே சுடப்பட்டிருக்க வேண்டும்.

இறந்து போன நால்வரில் ஜிஷன் ஜோஹரும், அம்ஜத்அலி ரானாவும் பாகிஸ்தானியர்கள் என்றும் அதற்கு ஆதாரமாக அவர்களது அடையாள அட்டைகளும் போலீசாரால் காட்டப்பட்டுள்ளன. அவர்கள் பாகிஸ்தானியர்களாக இருந்தால், அடையாள அட்டைகளில் காணப்படும் அவர்களது பெயர்கள் உருது மொழியில் இருந்திருக்க வேண்டும்; மாறாக, அப்பெயர்கள் ஆங்கில மொழியில் காணப்படுகின்றன. எனவே, இந்த அடையாள அட்டைகள் போலியானவை என்று ஏன் சொல்ல முடியாது?

- இப்படிபட்ட முரண்பாடுகளைத் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் நீதிபதி தமங், இந்த நால்வரின் சாவு பற்றிய பிரேதப் பரிசோதனை அறிக்கை மற்றும் சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில்தான் இது போலி மோதல் கொலை என்றும், அந்த நால்வரும் **திட்டமிடப்பட்ட முறையில், இரத்தத்தை உறைய வைக்கும் இரக்கமில்லா வகையில், கொடூரமாகக் கொல்லப்பட்டிருப்பதாகக்** குறிப்பிடுகிறார்.

•••

நரேந்திர மோடியைப் பொருத்தவரையில் இந்த விசாரணை அறிக்கை கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை போலாகிவிட்டது. அதனால், ''நீதிபதி தனது வரம்புகளை மீறிச் செயல்பட்டுள்ளார்; இச்சம்பவத்தோடு தொடர்புடைய போலீசு அதிகாரிகள், தங்கள் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லும் வாய்ப்பை வழங்க நீதிபதி மறுத்துவிட்டார்; நீதிபதியால் 25 நாட்களுக்குள் எப்படி விசாரணையை நடத்தி முடிக்க முடிந்தது? அரசின் ஒப்புதல் இன்றி விசாரணை அறிக்கை எப்படி வெளியானது? நீதிபதி விசாரணை அறிக்கையைத் தட்டச்சு செய்யாமல், கையால் எழுதியது ஏன்?'' என்பன போன்ற குதர்க்கமான கேள்விகளை எழுப்பி, இந்த விசாரணையின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்த முயல்வதோடு, குஜராத் உயர்நீதி மன்றத்தின் மூலம் இந்த அறிக்கைக்குத் தடையும் பெற்றுவிட்டார், மோடி. இஷ்ரத் ஜஹனின் தாயாரும், ஜாவேத் ஷேக்கின் தந்தையும் இத்தடையை நீக்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர்.

**நீதிபதி தமங்கின் அறிக்கையை வெளியிடக் கோரி நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில், கண் கலங்கிய படியே தனது துயரக் கதையைக் கூறும் இஷ்ரத் ஜஹனின் தாயார் கௌசர்.**



விசாரணை அறிக்கையினைத் தடை செய்ததோடு மட்டுமின்றி, நீதிபதி தமங்கின் நடத்தையையும் விசாரிக்குமாறு உத்தரவிட்டுள்ளது, குஜராத் மாநில உயர்நீதி மன்றம். மோடியே மறு அவதாரம் எடுத்து நீதிபதியாக உட்கார்ந்திருப்பார் போலும்!

குஜராத் அரசு கேட்டுக்கொண்டபடி இந்த விசாரணை அறிக்கையினைத் தடை செய்ததோடு மட்டுமின்றி, இவ்விசாரணை தொடர்பாக நீதிபதி தமங்கின் நடத்தையையும் விசாரிக்குமாறு உத்தரவிட்டுள்ளது, குஜராத் மாநில உயர்நீதி மன்றம். மோடியே மறு அவதாரம் எடுத்து நீதிபதியாக உட்கார்ந்திருப்பார் போலும்! கடந்த ஐந்தாண்டுகளாக இப்போலி மோதல் கொலை பற்றி விசாரணை நடத்தாமல் இழுத்தடிந்து வந்த மோடியின் நடத்தையைப் பற்றி சந்தேகிக்காத நீதிமன்றம், இவ்விசாரணையைத் துணிந்து நடத்திய நீதிபதி தமங்கின் நடத்தையைச் சந்தேகிப்பது வினோதமானது.

25 நாட்களுக்குள் எப்படி விசாரணை நடத்தி முடிக்கலாம்? என்ற கேள்வியின் பின்னுள்ள தீய நோக்கத்தை புளி போட்டு விளக்கத் தேவையில்லை.

எந்தவிதமான விசாரணையும் நடத்தாமல் பத்தொன்பதே வயதான இஷ்ரத் ஜஹனையும், மற்ற மூவரையும் சுட்டுத் தள்ளிக் கொன்ற போலீசு அதிகாரிகள், தங்கள் தரப்பு நியாயங்களை நீதிபதி தமங் கேட்கவில்லை எனக் குற்றம் சுமத்துவது வேடிக்கையானது மட்டுமல்ல, வக்கிரமானதும்கூட!

அரசின் ஒப்பதல் இன்றி விசாரணை அறிக்கை கள்ளத்தனமாக வெளியிடப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தும் மோடி அரசு, இதற்கு நீதிபதி தமங்கும் உடந்தையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கிறது. தமக்கும் அறிக்கை வெளியானதற்கும் தொடர்பு கிடையாது எனத் தெளிவுபடுத்தியிருக்கிறார், நீதிபதி தமங். அப்படியே அவருக்கு அறிக்கை வெளியானதில் தொடர்பு இருந்தால்கூட, அதனைக் குற்றமாக நாம் பார்க்க முடியாது. ஏனென்றால், இப்படிபட்ட அறிக்கைகளுக்கு அரசு என்ன மரியாதை தரும் என்பது இந்திய மக்களாகிய நாம் அறியாத ஒன்றல்ல!

குஜராத் உயர்நீதி மன்றம் இக்கொலைகள் பற்றி விசாரிக்க மூன்று போலீசு அதிகாரிகளைக் கொண்ட ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை நியமித்து, அக்குழு நவம்பர் மாதத்திற்குள்

தனது விசாரணை அறிக்கையை அளிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டிருக்கும்பொழுது, நீதிபதி தமங் ஏன் வேகவேகமாக விசாரணை நடத்தி முடிக்கவேண்டும் என்ற கேள்வியை இந்து மதவெறிக் கும்பல் எழுப்பி வருகிறது.

நீதிபதி தமங் இப்படுகொலைகள் பற்றிய விசாரணையை யாருக்கு தெரியாமல் இரகசியமாக நடத்தவில்லை. குஜராத் உயர்நீதி மன்றத்திற்கும் தெரிந்துதான் இவ்விசாரணையை அவர் நடத்தி வந்தார். இன்னும் சொல்லப் போனால், உயர்நீதி மன்றம் சிறப்பு விசாரணைக் குழுவை நியமிக்க என்றைக்கு உத்தர விட்டதோ, அன்றுதான் நீதிபதி தமங் தனது விசாரணையைத் தொடங்கினார். அப்பொழுதே அவ்விசாரணையைத் தடுக்காத நீதிபதிகள், மோடிக்கு விசுவாசமான போலீசு அதிகாரிகளைக் குற்றம் சுமத்தி விசாரணை அறிக்கை வெளிவந்த பிறகு அதற்குத் தடை விதிக்கிறார்கள் என்றால், தங்களது வறட்டுக் கௌரவத்திற்காக நீதி கிடைப்பதைத் தாமதப்படுத்துகிறார்கள் என்றுதான் எடுத்துக் கொள்ள முடியும்!



தமங்கின் அறிக்கை வெளியான பின், பீகார் தலைநகர் பாட்னாவில் மோடியின் உருவ பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் முசுலீம் ஐக்கிய முன்னணியினர்.

நீதிபதி தமங் மோடிக்கு எதிரானவர் என்ற சித்திரத்தை உருவாக்குவதன் மூலம், அவரது விசாரணையின் முடிவுகளைக் கட்டுக்கதை என நிரூபித்துவிட முயலுகிறது, இந்து மதவெறிக் கும்பல். நீதிபதி தமங் பற்றிய இந்து மத வெறிக் கும்பலின் அவதூறு உண்மையாகவே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், இந்து மதவெறிக் கும்பலின் சித்தாந்தத்திற்கு அனுசரணையாக பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வருகிறாரே பிரவீண் சுவாமி என்ற பத்திரிகையாளர், அவர் கூட இம்மோதல் கொலை பற்றிய உண்மைகளைப் புட்டு வைத்திருக்கிறார்.

''மோடியைக் கொல்ல சில முசுலீம் தீவிரவாதிகள் முயலுகிறார்கள் என்ற இந்த நாடகத்தையே மைய அரசின் புலனாய்வுப் பிரிவு போலீசார்தான் உருவாக்கியதாகவும்; இந் நாடகத்திற்கு லஷ்கர்-இ-தொய்பாவிற்கு ஆதரவாக இருந்துவரும் அகமதாபாத்தைச் சேர்ந்த ஒரு வழக்குரைஞரைப் புலனாய்வுப் பிரிவு பயன்படுத்திக் கொண்டதாகவும், அந்த வழக்குரைஞர் மூலம்தான் புனேயைச் சேர்ந்த ஜாவேத் ஷேக்கை அகமதாபாத்திற்கு வரவழைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும்'' பிரவீண் சுவாமி 2004 ஆம் ஆண்டு ஃபிரெண்ட் லைன் ஏட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியாக, மோடியின் போலீசு நடத்திய இந்தக் கொலையில் காங்கிரசுபங்காளியாக இருந்துள்ளது. ஆனால், தமங்கின் அறிக்கை வெளியானவுடன், தனது 'மதச்சார்பின்மை' கபட வேடத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தனக்கும் அப்படு கொலைகளுக்கும் சம்மந்தமில்லை என முதலைக் கண்ணீர் வடிக்கிறது, காங்கிரசு. இன்னொருபுறம், காங். கூட்டணி அரசு அந்த நால்வரையும் லஷ்கர்-இ-தொய்பா ஆதரவாளர்கள் எனக் குற்றஞ்சுமத்தி குஜராத் உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்து, மோடிக்கு முட்டுக் கொடுக்கிறது.

இஷ்ரத் ஜஹன், ஜாவேத் ஷேக் உள்ளிட்ட நால்வரும் மும்பய் நகரில் இருந்து குஜராத்திற்குக் கடத்தி வரப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம்; இப்படுகொலையில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போலீசாருக்குப் பங்குண்டு எனப் பல்வேறு அமைப்புகளும் சுட்டிக் காட்டி வருவதோடு, இதற்கு ஆதாரமாகப் பல சான்றுகளை முன்வைத்து வருகின்றனர்.

சோராபுதீன் என்ற முசுலீமை ஹைதராபாத் நகரில் இருந்து கடத்தி வந்து, போலி மோதலில் சுட்டுக் கொன்றுவிட்டு, தீவிரவாதியை மோதலில் சுட்டுக் கொன்றுவிட்டதாக நாடகமாடிய, மோடிக்கு நெருக்கமான வன்சாரா என்ற போலீசு அதிகாரிதான் இந்தக் கொலையிலும் முக்கியப் பங்காற்றி இருக்கிறார். எனவே, சோராபுதீன் படுகொலையைப் போலவே இதுவும் போலி மோதல் கொலையாகத்தான் இருக்கக்கூடும் என நம்புவதற்கு இடமுண்டு.

•••

**த**னக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் குஜராத் இந்துக்களுக்கு எதிரான குற்றச்சாட்டாக ஊதிப் பெருக்கி வரும் மோடி, அந்த விஷமத்தனத்தை இந்த வழக்கிலும் கையாண்டு வருகிறார். எல்லா மாநிலங்களிலும் போலி மோதல் கொலைகள் நடந்துவரும்பொழுது, குஜராத் மட்டுமே குறி வைத்துத் தாக்கப்படுவதாக இந்தக் குள்ளநரி ஊளையிட்டு வருகிறது. அம்மாநிலத்தைச் சேர்ந்த பலரையும் மோடியின் இந்த விஷமத்தனம் பிடித்தாட்டி வருகிறது. ஆனால், இஷ்ரத் ஜஹன் உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு கடந்த ஐந்தாண்டுகளாக விசாரணை என்ற கட்டத்தைத் தாண்டாமலேயே வைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையில் இருந்தே, மோடியும் அவரது குஜராத்தும் குறிவைத்து வேட்டையாடப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

குஜராத்தில் மட்டுமல்ல, இந்தியாவின் எந்தவொரு பகுதியில் மோதல் கொலை நடந்தாலும், அது பற்றி நீதிமன்றங்களோ, தேசிய மனித உரிமை கமிசனோ ரொம்பவும் அலட்டிக் கொள்வதில்லை என்பதுதான் உண்மை. 1993 ஆம் ஆண்டு தேசிய மனித உரிமை கமிசன் உருவாக்கப்பட்ட பிறகு, அக்கமிசனிடம் 1,262 போலி மோதல் கொலைகள் நடந்திருப்பதாக பொதுமக்களும் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் புகார் அளித்துள்ளன. போலீசு நிலையத்தில் நடக்கும் கொட்டடிக் கொலைகள் இந்தக் கணக்கில் வராது என்பதை இங்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த 1,262 புகார்களில் வெறும் 11 புகார்களைத்தான் தேசிய மனித உரிமை கமிசன் விசாரித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 70 'மோதல்' கொலைகள் நடந்துள்ளன. மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் 600 'மோதல்' கொலைகள் நடந்துள்ளன. ஆந்திராவில் கடந்த பத்தாண்டுகளில் 1,800 'மோதல்' கொலைகள் நடந்துள்ளன. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த இருபதாண்டுகளில் 10,000-க்கும் அதிகமானோர் காணாமல் போயிருப்பதாகவும், இவர்களுள் பெரும்பாலோர் 'மோதல்' கொலைகளின் மூலம் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதற்கும் மேலாக, காஷ்மீரிலும், மணிப்பூர், நாகலாந்து, அசாம் ஆகிய மாநிலங்களிலும் மோதல் கொலைகளை நடத்தும் இராணுவச் சிப்பாய்களைக் காப்பாற்றுவதற்காக ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

இராணுவத்தினரால், போலீசாரால் 'மோதல்' கொலைகளின் மூலம் கொல்லப்படுபவர்கள் அனைவருமே சமூக விரோதிகள் கிடையாது. கொல்லப்பட்டிருப்பவர்களுள் பெரும்பாலோர் நக்சல்பாரி புரட்சியாளர்கள், தேசிய இன விடுதலைக்காகப் போராடும் போராளிகள், முசுலீம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் அப்பாவி முசுலீம்கள்தான்.

போலி மோதல் கொலைகளைத் தடுப்பதற்காக ஆயிரத்தெட்டு அறிவுரைகளை மாநில அரசுகளுக்கு அவ்வப்போது வழங்கி வரும் தேசிய மனித உரிமை கமிசன், அந்த அறிவுரைகளைத் தானே கடைப்பிடிப்பதில்லை என்பதுதான் உண்மை. குறிப்பாக, தலைநகர் டெல்லியில் பட்லா ஹவுஸ் என்ற இடத்தில் நடந்த போலி மோதல் கொலை விசாரணையில் போலீசாருக்குச் சாதகமாகவே தீர்ப்புச் சொன்னது, தேசிய மனித உரிமை கமிசன். சத்தீஸ்கர் மாநிலத்தில் அரசின் ஆதரவு பெற்ற சல்வா ஜூடும் என்ற கூலிப்படை நடத்திய படுகொலைகளையும் பாலியல் வன்முறைகளையும் விசாரிக்கும் பொறுப்பை போலீசாரிடமே ஒப்படைத்து, மனித உரிமை என்பதனையே கேலிக்கூத்தாக்கியது.

பொதுமக்கள்
போலி மோதல் கொலை தொடர்பாக
தேசிய மனித உரிமை கமிசனிடம்
அளித்துள்ள 1,262 புகார்களில்
வெறும் 11 புகார்களைத்தான்
அக்கமிசன் விசாரித்து,
பாதிக்கப்பட்டவர்களுக்கு
ஆதரவாகத் தீர்ப்பளித்துள்ளது.

தேசிய மனித உரிமை கமிசனைப் பொருத்தவரை சட்டப்படி நடக்கும் மோதல்கள் அனைத்தும் நியாயமானதுதான். ஆனால், மனித உரிமைகளுக்காகப் போராடி அமைப்புகளோ, போலி மோதல் கொலையைக்கூட போலீசார் சட்டப்படி நடந்த மோதலாகக் காட்டித் தப்பித்துக் கொள்ளும் அபாயத்தைச் சுட்டிக் காட்டி வருகின்றனர்.



காஷ்மீரில் போலி மோதலில் கொல்லப்பட்ட அப்துர் ரஹ்மான் பத்தேரியின் உடல் மறு பிரேதப் பரிசோதனைக்காகத் தோண்டி எடுக்கப்படுகிறது (கோப்புப் படம்).

'மோதல்' கொலைகள் நடக்கும்பொழுது, போலீசாரைத் தாக்க வந்ததாகக் கொல்லப்பட்டவர்களின் மீது வழக்கு பதிவு செய்து அப்பிரச்சினைக்கு மங்களம் பாடிவிடுகிறது, அரசு. இதற்குப் பதிலாக, 'மோதல்' கொலைகளை நடத்திய போலீசார் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் கோரி வருகின்றன.

ஆந்திராவில் மனித உரிமை அமைப்புகள் பல ஆண்டுகளாக நடத்தி வந்த சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, ஆந்திர மாநில உயர்நீதி மன்றம் கடந்த பிப்ரவரி மாதம் அளித்த தீர்ப்பில் மனித உரிமை அமைப்புகளின் இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டு தீர்ப்பளித்தது. ஆனால், ஆந்திர மாநில போலீசார் சங்கம், இத்தீர்ப்பினால் போலீசாரின் மனவுறுதி குறைந்துவிடும் எனக் கூறி உச்சநீதி மன்றத்தில் இத்தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ததையடுத்து, இத்தீர்ப்புக்கு உச்சநீதி மன்றம் தடை விதித்துவிட்டது.

போலீசாரின் சட்ட விரோதமான அத்துமீறல்களை எதிர்க்கும் முதலாளித்துவ அறிவுஜீவிகள் 'மோதல்' கொலைகளைத் தனிப்பட்ட போலீசு அதிகாரிகளின் தவறாகவும், ஆளும் ஓட்டுக்கட்சிகளைத் திருப்தி செய்வதற்காக சில தனிப்பட்ட போலீசார் ஈடுபடும் அவசரக்குடுக்கைத்தனமாகவும் சித்தரிக்கின்றனர். நீதிபதி தமங்கூட, தனது விசாரணை அறிக்கையில் அகமதாபாத் மோதல் கொலைகளைப் பதவி உயர்வுக்காகவும், குஜராத்தை ஆளுபவர்களைத் திருப்தி செய்வதற்காகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகத்தான் சித்தரிக்கிறார். இது முழு உண்மை கிடையாது.

மறுகாலனியாதிக்கத்திற்கு எதிராகவும், இந்து மதவெறி பாசிசத்திற்கு எதிராகவும் நாடெங்கிலும் போராட்டங்கள் வீறு கொண்டு எழத் தொடங்கியுள்ளன. அப்போராட்டங்களை, மக்களின் பிரச்சினைகளை நியாயமான முறையில், ஜனநாயக வழிகளில் தீர்க்க விரும்பாத அரசு, அப்பிரச்சினைகளைத் துப்பாக்கி முனையில்தான் சந்திக்கிறது. மக்களைப் பயமுறுத்தி, அவர்கள் போராடுவதைத் தடுப்பது என்ற வகையில்தான் போலி மோதல் கொலைகள் ஆளும் கும்பலின் ஆசிர்வாதத்தோடு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால், அரசு பாசிசமயமாகிவருவதன், போலீசு ராஜ்ஜியமாகி வருவதன் அறிகுறி தான் 'மோதல்' படுகொலைகள்.

● செல்வம்

## கோபாட் காந்தி கைது:

# சட்டவிரோதமானது! மனித உரிமைகளுக்கு எதிரானது!

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)யின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான தோழர் கோபாட் காந்தி, அண்மையில் தலைநகர் டெல்லியில் கைது செய்யப் பட்டுள்ளார். தலைமறைவாகப் பதுங்கியிருந்த அவரை உளவுத் துறை போலீசார் 21.9.09 அன்று கைது செய்ததாகவும், மிகக் கொடிய பயங்கரவாத இயக்கத்தின் மூளையாகச் செயல்பட்ட அவரைக் கைது செய்துள்ளதன் மூலம், இவ்வியக்கத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டதாகவும் பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகளை வெளியிட்டன.


ஆனால் தோழர் கோபாட் காந்தி, டெல்லியின் பிகாதிகாமா பகுதியில் மாலை 4 மணியளவில் 17.9.09 அன்றே உளவுப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். வெள்ளைநிற டாடா-சுமோ காரில் வந்த 5-6 பேர் கொண்ட உளவுப் படையினர் பேருந்துக் காகக் காத்திருந்த கோபாட் காந்தியை இழுத்துச் சென்று வாகனத்தினுள் தள்ளி, கடத்திச் சென்றுள்ளனர். சட்டவிரோதமாக அடைத்து வைத்து விசாரணை என்ற பெயரில் அவர் தொடர்ந்து நான்கு நாட்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இச்சட்டவிரோதச் செயலை எதிர்த்து, அவர் உண்ணாவிரதம் இருந்ததால், வேறு வழியின்றி 21.9.09 அன்று நீதிமன்றத்துக்கு அவரைக் கொண்டு வந்த உளவுப்படையினர், அன்றுதான் அவரைக் கைது செய்ததாகக் கதையளந்தனர்.

சிறுநீரகக் கோளாறினால் அவதிப்பட்டு வந்த கோபாட் காந்தி, டெல்லியிலுள்ள சீதா ராம் பாரதிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த 17.9.09 அன்று அம் மருத்துவமனையில் பரிசோதனை முடித்து விட்டு, பேருந்துக்காகக் காத்திருந்தபோதுதான் அவர் உளவுப்படையினரால் கடத்திச் செல்லப் பட்டுள்ளார். மருத்துவப் பரிசோதனையில், அவருக்குச் சிறுநீரக உறுப்புப் பகுதியில் புற்று நோய் தாக்கியிருப்பது தெரிய வந்துள்ளது. ஏற்கெனவே, கடந்த பத்தாண்டுகளாக அவர் இரத்தக் கொதிப்பு, மூட்டுவலி நோய் களினால் அவதிப்பட்டு வந்தார்.

கடந்த 21.9.09 அன்று, டெல்லி பெருநகர தலைமை நீதி மன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது, கடுமையான நெஞ்சு வலியால் அவர் துவண்டார். இதைக் கண்ட நீதிபதி, அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல உத்தரவிட் டதால், பாரா இந்து மருத்துவமனையில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு நெஞ்சுவலி நிவாரணியாக மாத்திரை களும் தரப்பட்டன. பின்னர் அவர் திஹார் மத்திய சிறையில், வரம்புக்கு அதிகமான எண்ணிக்கையில் விசாரணைக் கைதி கள் அடைக்கப்பட்டுள்ள கொட்டடியில் தள்ளப்பட்டுள்ளார்.

இக்கொட்டடியில் காற்றோட்டம் இல்லாமல் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்ட போதிலும், சிறை நிர்வாகம் அவருக்கு மருத்துவ உதவிகளைச் செய்யவில்லை. நெஞ்சு வலிக்கான மாத்திரையோ, ஏற்கெனவே பாவித்து வந்த இதர மருந்து-மாத்திரைகளோ அவருக்குத் தரப்படவில்லை. அடிப் படை மனித உரிமைகள் அறவே புறக்கணிக்கப்பட்டு, அவர் மெல்ல மெல்ல கொல்லப்பட்டு வருகிறார்.

அறுபத்து மூன்று வயதாகும் தோழர் கோபாட் காந்தி, டூன் பள்ளியிலும் பின்னர் லண்டனிலும் படித்தவர். மேட்டுக்குடி வர்க்கத்தில் பிறந்த போதிலும், அத்தகைய சுகபோக வாழ்வை உதறி எறிந்துவிட்டு, மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தை ஏற்று ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவே தன்னை அர்ப் பணித்துக் கொண்டவர். அன்றைய அவசரநிலை பாசிச ஆட்சியை எதிர்த்து, பிரபல மனித உரிமைக்கான முன்னோடி களான அஸ்கர் அலி என்ஜினியர், செபாஸ்டின் முதலானோரு டன் இணைந்து மும்பையில் ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் குழு (CPDR)வை நிறுவிப் போராடியவர். மார்க்சிய-லெனினிய அரசியல் - சித்தாந்தப் பத்திரிகைகளை நடத்தியவர்.



சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தோழர் கோபாட் காந்தி.

பின்னர், அவர் நாக்பூர் சென்று பழங்குடியின மக்களின் மீதான அடக்குமுறை - சுரண்டலுக்கெதிராக அமைப்புகளைக் கட்டிப் போராடினார். அதன்பிறகு, ஜார்கந்த்-சட்டிஸ்கர் மாநி லங்களில் பழங்குடி மக்களை அரசியல்படுத்தி போராட்டங் களை வழிநடத்தினார். கதீப் அன்சாரி, ஆசாத், அரவிந்த், கமல்

முதலான புனைபெயர்களில் அவர் அரசியல்-சித்தாந்த கட்டுரைகளை எழுதி வந்தார். மாவோயிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தபோதிலும், இதுவரை இவர் மீது எந்த வழக்கும் தொடரப்படவில்லை. மார்க்சிய-லெனினியக் கொள்கை உறுதியும், புரட்சியின் மீது மாளாக் காதலும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடுவதில் தணியாத தாகமும் கொண்ட இவரைத்தான் மிகக் கொடிய பயங்கரவாதியாக ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் கீழ்த்தரமாகச் சித்தரித்து வருகின்றன. ஆனால், இன்றுவரை இவர் மீது இக்கைதுக்கான முதல் தகவல் அறிக்கையோ, வழக்கோ கூடப் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், மனித உரிமை - ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகவும் சட்ட விரோதமான முறையிலும் அவர் மீது சித்திரவதைகள் ஏவப்பட்டு வருகின்றன.



கிரிமினல் குற்றவாளியைப் போலின்றி, அரசியல் கைதி என்ற முறையில் அவரைக் கண்ணியமாக நடத்தக் கோரியும், கொடிய பல நோய்களினால் அவதிப்படும் அவருக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கக் கோரியும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் குரலெழுப்பி வருகின்றன. மெக்கார்த்தேயிச பாணியில், தோழர் கோபாட் காந்தி மீது சட்டவிரோதமாக ஏவப்பட்டு வரும் இச்சித்திரவதைக் கொடுமைகளுக்கு எதிராக அணிதிரண்டு போராட வேண்டிய கடமை, புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் முன்னே காத்திருக்கிறது.

*(25.9.09 அன்று டெல்லியில், பத்திரிகையாளர் சந்திப்பில் ''அரசியல் கைதிகள் விடுதலைக்கான குழு (CRPP)'' வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து.)* •

# "தில்லை கோவில் மக்கள் சொத்து! தீட்சிதர் சொத்தல்ல!!"

## தீட்சிதர்-சு.சுவாமி கும்பலைக் கலங்கடித்த உயர்நீதி மன்றத் தீர்ப்பு!

கடந்த பிப்ரவரி 2, 2009 அன்று தில்லை நடராசர் கோயில் நிர்வாகத்தைத் தமிழக அரசின் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் உயர்நீதி மன்றத் தீர்ப்பு வெளியானது. இதை எதிர்த்துப் பார்ப்பனத் தீட்சிதர் கும்பல் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு, கடந்த 16.9.09 அன்று ''தில்லைக் கோயில் தீட்சிதர் சொத்தல்ல; மக்கள் சொத்து'' என்று சென்னை உயர்நீதி மன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியுள்ளது.

தில்லை தீட்சிதரை வென்றாரில்லை என்ற பார்ப்பன இறுமாப்பையும் ஆதிக்கத்தையும் இந்த இறுதித் தீர்ப்பு தகர்த்தெறிந்துவிட்டது. தீட்சிதப் பார்ப்பனக் கும்பலுக்கு எதிராகத் தமிழக மக்கள் அடைந்துள்ள இந்த வெற்றி, எளிதாகக் கிடைத்துவிடவில்லை. சிவனடியார் ஆறுமுகசாமியை முன்னிலைப்படுத்தி மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நீதிமன்றங்களில் நடத்திய போராட்டங்கள்; ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த ஐந்தாண்டுகளாக நடத்திய போராட்டங்கள்; அடக்குமுறை, கைதுகள், பொய்வழக்குகளைக் கண்டு அஞ்சாமல் இவ்வமைப்புகள் காட்டிய போராட்ட உறுதி, தமிழின உணர்வாளர்களும் பார்ப்பன எதிர்ப்புணர்வு கொண்ட பக்தர்களும் கொடுத்த பேராதரவு ஆகியவற்றினால்தான் இம்மகத்தான வெற்றி சாதிக்கப்பட்டுள்ளது.

16.9.09 அன்று மாலை உயர்நீதி மன்றத் தீர்ப்பு வெளியானதும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, இந்த வெற்றியை உற்சாகத்துடன் கொண்டாடின. விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த வி.வி.மு. தோழர்கள் அரசூர் சாலை சந்திப்பில் பட்டாசு வெடித்து, பார்ப்பனியத்துக்கு எதிராக முழக்கமிட்டு தெருமுனைக் கூட்டம் நடத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி இந்த வெற்றியைக் கொண்டாடினர். சென்னை-சேத்துப்பட்டில் ம.க.இ.க. தோழர்கள் 17.9.09 அன்று காலை, பறைகள் அதிர பார்ப்பனியத்துக்கு எதிராக முழக்கமிட்டபடியே ஊர்வலமாகச் சென்று, அம்பேத்கர் திடலில் உள்ள பெரியார், அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்து, தெருமுனைக் கூட்டம் நடத்தி மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, இந்த வெற்றியைக் கொண்டாடினர். இம்முதற்கட்ட வெற்றியோடு நில்லாமல், ''கொலை - கொள்ளை முதலான கிரிமினல் குற்றங்கள் புரிந்த தீட்சிதர்களைக் கைது செய்ய வேண்டும்; நந்தன் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்திருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிய வேண்டும்'' ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தைத் தொடர தமிழக மக்களை அறைகூவினர்.



**தில்லை தீட்சிதர்களுக்கு எதிரான வெற்றியைக் கொண்டாடும் விதமாக சென்னை-சேத்துப்பட்டில் நடத்தப்பட்ட தெருமுனைக்கூட்டம்.**

சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து பார்ப்பனக் கும்பல் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போகிறதாம். புரட்சிகர அமைப்புகளின் உறுதியான தொடர் போராட்டங்களால், அங்கேயும் தில்லை நடராசர் இப்பார்ப்பனக் கும்பலை இடது காலால் எட்டி உதைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

**— பு.ஜ.செய்தியாளர்கள்.**

### சி.பி.எம். இன் நில அபகரிப்பு:

# திருட்டுக் கும்பலின் கையில் செங்கொடி எதற்கு?

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு மாலைப் பொழுது அது. மே.வங்க சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறி, விவசாயிகளின் போராட்டத்தை வழிநடத்திய கமல் பத்ரா என்பவரின் பிணம் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. இதற்கு முன்பு கொன்று தொங்கவிடப்பட்ட மற்ற பிணங்களைப் போலத்தான் அதுவும் தொங்கவிடப்பட்டிருந்தது. கமல் பத்ராவின் சகோதரர்களும், மகனும் காணாமல் போகடிக்கப்பட்டிருந்தனர். போலீசு வழக்கம் போலவே, இதையும் தற்கொலை என்றுதான் கூறியது.

இக்கோரச் சாவுகள் தொடர்கதையாகிப் போன அந்தக் கிராமத்தையொட்டி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு நவீன கேளிக்கை நகரம் உள்ளது. வார இறுதியில் இருள்கவியத் தொடங்கிவிட்டால், அவ்விடத்தின் அமைதியைக் கிழிக்கும் வகையில் காதைப் பிளக்கும் மேற்கத்திய இசையும், கட்டவிழ்த்து விடப்படும் கேளிக்கைகளும், மேல்தட்டு விபச்சாரமும் அங்கே அரங்கேறத் தொடங்கி விடுகின்றன. அருகிலுள்ள பெருநகரத்து மேட்டுக்குடி இளசுகள், கப்பல் போன்ற நவீன ரகக் கார்களில் வந்து குவிகிறார்கள். இந்தக் கேளிக்கை நகரம் அந்தக் கிராம மக்களின் நிலங்களைப் பிடுங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்து உருவாக்கப்பட்டது.

குடியும் கூத்துமான அத்தகைய முன்னிரவுப் பொழுதில், வெறுப்பின் உச்சத்திலிருந்த அந்தக் கிராம மக்கள் அங்கே ஊடுருவித் தாக்க ஆரம்பிக்கின்றனர். கேளிக்கை விடுதி குண்டர்படைக்கும், கிராம மக்களுக்கும் இடையே பெரும் மோதல் வெடிக்கிறது. கேளிக்கை விடுதியின் ஒரு பகுதி முற்றிலும் உடைத்து நாசம் செய்யப்படுகிறது. மேற்கு வங்கத்தில் இருக்கும் ராஜர்காட் எனும் கிராமப் பகுதியில்தான் இவை அனைத்தும் கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் நடந்தன.

மேற்கு வங்கத்தைத் தொழில் வளமிக்க மாநிலமாக மாற்றுவது என்ற பெயரில் சிங்கூர், நந்திகிராம் போன்ற பகுதிகளில் புத்ததேவ் பாணியில், அடித்து உதைத்து நிலங்களைப் பறித்தெடுக்காமல், ராஜர்காட் பகுதியில் 'அமைதியான முறையில்' நிலம் கையகப்படுத்தப்பட்டதாம். இதுதான் மூத்த தலைவர் ஜோதி பாசுவின் பாணி!

இந்தப் பகுதியில் ''ராஜர்காட் புது நகரம்'' என்ற திட்டத்தின் பெயரில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. இவற்றுடன் சேர்ந்து கேளிக்கை விடுதிகளும், பூங்காக்களும், மேல்தட்டு விபச்சார விடுதிகளும் பெரிய அளவில் கட்டப்பட்டன. அப்படிப்பட்ட கேளிக்கை பூங்காக்களில் ஒன்றுதான் ''வேதிக் வில்லேஜ்''.

கிராம மக்களும், குண்டர்களும் வேதிக் வில்லேஜ் என்ற கேளிக்கைப் பூங்காவில் மோதிக் கொண்ட பிறகுதான், அம்மக்களிடம் நிலங்களைப் பறித்த அரசுக்கும் மாபியா கும்பலுக்குமிடையிலான வலைப்பின்னல்களும், அனைத்து ஓட்டுக் கட்சிகளும் கைநனைத்த மோசடிகளும், சி.பி.எம். கட்சியினர் இம்மோசடியில் முங்கிக் குளித்ததும் வெளி உலகிற்குத் தெரியத் தொடங்கின.

வேதிக் கிராம நிர்வாக அமைப்பின் துணை மேலாளரான பிப்லவ் பிஸ்வாஸ், குண்டர்களை கூலிக்கு அமர்த்திக் கொண்டு கிராம மக்கள் மீது தாக்குதலை ஏவியதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். இவரோடு, வேதிக் கிராம ஓய்வு விடுதி கம்பெனி (VRC)யின் நிர்வாக இயக்குனரான ராஜ்மோடி மற்றும் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிரிமினல் குண்டர்கள் துணையுடன் நிலமோசடிகளில் ஈடுபட்டு கோடிக்கணக்கில் கொள்ளையடித்துள்ளதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டுவரும் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளைப் பெரும்பான்மையாக கொண்ட ராஜர்காட் பகுதி, மேற்கு வங்கத்திலேயே மண்வளமிக்க பகுதிகளில் ஒன்று. வருடத்திற்கு மூன்று அல்லது நான்கு போகம் வரை விளையக்கூடிய அளவுக்கு மண்வளமும், நீர் வளமும் அபரிமிதமாக உள்ளது. அனைத்து பயிர் வகைகளும், தானியங்களும், காய்கனிகளும் இங்கு விளைவிக்கப்படுகின்றன. கொல்கத்தா மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி

**விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறித்து மே.வங்க அரசு உருவாக்கியுள்ள ராஜர்காட் தொழில்நுட்பப் பூங்கா நகரம்: ஊழல்-மோசடியின் அடையாளச் சின்னம்.**



களின் தேவையில் 20 முதல் 25% இந்தப் பகுதியில்தான் விளைவிக்கப்படுகிறது. இந்தப் பகுதியின் நீர்பாசனத்திற்கு மட்டும் ஐந்து கால்வாய்கள் உள்ளன. இந்த கால்வாய்களையும், பிற செயற்கை மீன்பிடிக் குட்டைகளையும் நம்பி மீன்பிடித் தொழிலும் வளமாக உள்ளது. பால் உற்பத்தியிலும் இந்தப் பகுதி முக்கியப் பங்கு வகிக்கிறது. இவையனைத்தும் வளமிக்க அந்த மண்ணை நம்பித்தான் உள்ளன.

இந்தப் பகுதியில் புதிய தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைப்பதற்கான வேலைகளும் அது சார்ந்த பிற உள்கட்டுமானங்கள், கேளிக்கை விடுதிகள், வீட்டுவசதிகள் போன்றவற்றை நிர்மாணிப்பது என்ற பெயரில் ரியல் எஸ்டேட் வியாபாரமும் 1999-க்குப் பிறகு சூடு பிடிக்கத் தொடங்கியது. டி.எல்.எப், கெப்பெல் லாண்ட், யுனிடெக் குரூப், சிங்கப்பூரைச் சேர்ந்த அஸென்டாஸ், வேதிக் ரியால்டி போன்ற ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் இங்கு பெரிய அளவில் முதலீடு செய்யத் தொடங்கின. 2005-இல் டி.எல்.எப்.-பின் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டி முடிக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்தது.

இவற்றுக்குத் தேவையான நிலங்களைத்தான் மிகக் கொடூரமான, விரிவான சதித் திட்டத்தின் மூலம், ஊழல் மோசடிகள் செய்து கொஞ்சம் கொஞ்சமாக விவசாயிகளிடமிருந்து பறித்துள்ளது சி.பி.எம். அரசு. 1995-லேயே இந்தப் பகுதி நிலங்களும், நீர்நிலைகளும் ''ராஜர்காட் நகர்ப்புறக் குடியிருப்பு'' என்ற திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட உள்ளதாக அரசு அறிவித்தது. இதையொட்டி சுமார் 7000 ஹெக்டேர் அளவிலான நிலமும், நீர்நிலைகளும் கையகப்படுத்தப்படுவது 1999-லிருந்து தொடங்கியது. இத்திட்டம் வரும் முன்னரே, காங்கிரசு கட்சியால் பாதுகாக்கப்பட்ட ரவுடியான ருய்தஸ் மண்டலை சுவீகரித்துக் கொண்ட சி.பி.எம். கட்சி, 1993-ல் நடந்த பஞ்சாயத்து தேர்தலில் அவனைக் களமிறக்கியது. தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் தில்லு முல்லுகள் செய்து, ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் இவனை வெற்றியடையச் செய்தது சி.பி.எம். இவனைப் போன்ற ஒரு ரவுடியை அதிகாரத்தில் வைப்பதன் மூலம் மக்களை மிரட்டி நிலங்களை அபகரிக்க முடியும் என்ற திட்டத்துடன்தான் சி.பி.எம். அரசு இதனைச் செய்தது.

ஆனால், இவற்றுக்கெல்லாம் முன்னரே மேற்கு வங்கத்தின் மிகப் பெரிய நில விற்பனைத் தரகு மாபியாவும், சி.பி.எம். கட்சியின் நெருங்கிய நண்பனுமான, கமல் காந்தியும் அவனது மார்வாரி நண்பர்களும் இந்தப் பகுதியில் நிலங்களை வாங்கிப் போடத் தொடங்கினர். சி.பி.எம். கட்சியில் தனக்கிருந்த செல்வாக்கின் மூலம் ராஜர்காட் பகுதியில் திட்டப் பணிகள் நடைபெற உள்ளதை முன்கூட்டியே அறிந்து கொண்டிருந்தான், கமல் காந்தி. நிலங்களைக் கொடுக்க மறுத்த விவசாயிகள் இவனால் கடுமையாக மிரட்டப்பட்டனர். சில கொலைகளும் விழுந்தன. நிலங்களை கைமாற்றியதில் சி.பி.எம். பிரமுகர்கள் பலரும் நேரடியாக லாபம் அடைந்தனர். போலீசு-சி.பி.எம்.கட்சி-ரவுடிகள் கூட்டணியுடன் விவசாயிகளிடமிருந்து நிலங்களை அபகரிக்கத் தொடங்கினான் கமல் காந்தி. வாங்கிய நிலங்களில் ஒரு பெரும் பகுதி சி.பி.எம். கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினரும், கமல் காந்தியின் உறவினருமான சரளா மகேஸ்வரிக்குச் சொந்தமாக்கப்பட்டது. இதன் காரணமாக சி.பி.ஐ. (மார்வாரி) கட்சி என்ற பெயரும் சி.பி.எம்.-முக்குக் கிடைத்தது.

1999-இல் அரசு நிர்ணய விலையே ஒரு காதா (மேற்கு வங்கத்தில் பயன்படுத்தப்படும் ஒரு நில அளவை)விற்கு ரூபாய் 40,000 லிருந்து 50,000 வரையாகும். ஆனால் ராஜர்காட் நிலங்களுக்கு அரசு தந்ததோ வெறும் 4000 முதல் 5000 ரூபாய் வரை மட்டுமே. இதனை ஏற்றுக் கொள்ளச் சொல்லி

**சி.பி.எம். தலைவர்கள்**
**நேரடியாகவே ராஜர்காட்**
**நில மோசடியில் ஈடுபட்டு**
**அம்பலமாகியுள்ளனர்.**
**கட்சியோ இந்த மோசடியில்**
**ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்குத்**
**தயாராக இல்லை.**

துப்பாக்கி முனையில் மக்கள் மிரட்டப்பட்டு நிலங்கள் அபகரிக்கப்பட்டன. இந்த அநியாயத்துக்குத் துணை போகுமாறு உள்ளூர் சி.பி.எம். கமிட்டிகளே கூட செயலிழக்கச் செய்யப்பட்டன. இவற்றைத் துணிச்சலோடு எதிர்த்தவர்கள் காணாமல் போயினர்; அல்லது கொடூரமாகக் கொல்லப்பட்டு, தற்கொலை என சோடிக்கும் வகையில் மரங்களில் தொங்கவிடப்பட்டனர். இது போலக் கொல்லப்பட்டவர்கள் 50 பேருக்கும் மேல் இருக்கும்.

சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரேனும் நில அபகரிப்பை எதிர்ப்பதில் ஈடுபாடு காட்டினால், அவர்கள் உடனடியாகத் தண்டிக்கப்பட்டனர். முன்னணியில் நின்று செயல்பட்ட இளைஞர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு நடைபிணமாக்கப்பட்டனர். நந்திகிராம் பாணியில், சிகப்பு நிற நெற்றிப் பட்டையைக் கட்டிக் கொண்டு நூற்றுக்கணக்கான சி.பி.எம். குண்டர்கள் கிராமங்களில் வலம் வந்து மக்களை மிரட்டினர். இந்நிலையில், நில அபகரிப்பை எதிர்த்த விவசாயிகள் ஒரு இயக்கம் கட்டினர். அதே போல, விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டதால் வேலை இழந்தோர் இன்னொரு இயக்கம் கட்டினர். இவ்விரண்டு இயக்கங்களின் தலைவர்களும் தனியே அழைத்து வரப்பட்டு சி.பி.எம். கட்சியின் எம்.எல்.ஏ.வான ராபின் மண்டல் முன்னிலையில், சி.பி.எம். குண்டர் படையினராலும் போலீசு குண்டர் படையினராலும் மிரட்டப்பட்டனர். குனி, ஜட்ராகச்சி மற்றும் சுலன்குரி போன்ற பகுதிகளில் மக்களின் போராட்டங்கள் சி.பி.எம். குண்டர் படையாலும், போலீசாலும் ஒடுக்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையிலான போலீசு படை, இப்பகுதியில் நிரந்தரமாக நிறுத்தப்பட்டது.

இன்னொரு பக்கம், மக்களின் எதிர்ப்பு நாளுக்குநாள் வலுத்து வந்த நிலையில், ராஜர்காட்டில் சி.பி.எம்.மிலிருந்து வெளியேறிய கமல் பத்ரா என்பவர் தலைமையில் ஒரு இயக்கம் உருவானது. சி.பி.எம். குண்டர் படை இவரைக் கடத்திச் சென்று கொன்று பிணத்தை மரத்திலே தொங்கவிட்டது. இவரது படுகொலை, ராஜர்காட் பகுதியின் எதிர்ப்பியக்கங்களுக்கு பேரிடியாக அமைந்தது. எதிர்ப்பியக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்தன.

ராஜர்காட்டில் நடந்த இந்த நிலப்பறிப்பு மோசடிகள் அனைத்திலும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களும், ரவுடிகளும் நேரடியாக லாபம் அடைந்தனர். எனவேதான், நந்திகிராமிலும் சிங்கூரிலும் விவசாயிகளுக்காகப் போராடுவதாக நாடகமாடிய மம்தாவின் திரிணாமுல் காங்கிரசு, ராஜர்காட் மோசடிக்கெதிராக ஒப்புக்குக் கூட பேசவில்லை. ஒருபடி மேலே சென்று, விவசாயிகளை நம்ப வைத்து அக்கட்சி கழுத்தறுத்தது.



**மேடைக்கு மார்க்சியம், பிழைப்புக்கு ஊழல்: வீட்டுமனை ஊழலில் அம்பலப்பட்டுள்ள சி.பி.எம். அமைச்சர்களான தேபஷிஷ்தாஸ், அப்துர் ரசாக் மொல்லா, பினாய் கோனார், நிருபம் சென்.**

கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் நில அபகரிப்பை எதிர்த்து விவசாயிகளின் இயக்கம் வழக்கு ஒன்றைத் தொடுத்திருந்தது. திரிணாமுல் காங்கிரசும் வழக்கு ஒன்றைத் தொடுத்தது. இந்நிலையில், ‘‘நாங்களே வழக்கு நடத்துகிறோம், எங்களால்தான் வழக்குக்கான பொருளாதாரச் சுமைகளை சமாளிக்க இயலும்’’ என்று கூறி விவசாயிகளின் வழக்கை அக்கட்சி வாபஸ் பெற வைத்தது. அதைத்தொடர்ந்து, உடனே திரிணாமுல் காங்கிரசும் வழக்கைத் திரும்பப் பெற்று கழுத்தறுத்தது.

அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் தான்மே மண்டல், ராஜர்காட்டில் எஞ்சியுள்ள நிலங்களைக் குறைந்த விலைக்கு அபகரித்து, அதிக விலைக்கு விற்று கோடிக்கணக்கில் சுருட்டியுள்ளான். எஞ்சியுள்ள நிலம் குறித்த விவரங்களை சி.பி.எம். கட்சிக்காரர்களின் உதவியுடன் ஹிட்கோ (HIDCO) அரசு அலுவலகத்தில் இருந்து இவன் பெற்றுள்ளான். இந்த சி.பி.எம். — திரிணாமுல் காங்கிரசு கூட்டணி ஒரு காதாவிற்கு ரூபாய் பத்தாயிரம் முதல் 15 ஆயிரம் வரை மட்டுமே கொடுத்துவிட்டு, அதனை ரூபாய் 5 முதல் 6 லட்சம் வரை விற்று கோடிக்கணக்கில் சுருட்டியது.

எதிர்ப்புகள் ஒடுக்கப்பட்ட நிலையில், ராஜர்காட்டின் வளமிக்க குளம், குட்டைகள், விவசாய நிலங்கள் அனைத்தும் நிரவப்பட்டு அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. சி.பி.எம்., காங்கிரசு, திரிணாமுல் கட்சியினர் இவற்றில் முதலீடு செய்து கொழுத்த லாபமடைந்தனர். மாநகராட்சி விதிமுறைகளில் தில்லுமுல்லுகள் செய்து பல கோடிகள் சுருட்டப்பட்டன. புற்றீசல் போல கேளிக்கை பூங்காக்கள் பெருகின. விபச்சாரமும், குடியும் கூத்தும் தலைவிரித்தாடின. இப்படிப்பட்ட கேளிக்கை விடுதிகளில் ஒன்று, சி.பி.எம். நாடாளுமன்ற உறுப்பினரும் விளையாட்டு வீராங்கனையுமான ஜோயிதிர்மயி சிக்தரின் கணவருக்குச் சொந்தமானதாகும். வேதிக் வில்லேஜ் கேளிக்கை விடுதியே சி.பி.எம்.மின் கூட்டாளியான மார்வாரி கமல் காந்தியின் நிலத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

ராஜர்காட்டில் இப்பொழுது மீதமிருக்கும் விவசாய நிலங்களையும் அபகரிப்பதற்காக இன்னொரு திட்டம் அங்கு செயல்படுத்தப்பட உள்ளது. பாங்கோட் ராஜர்காட் பகுதி மேம்பாட்டு நிறுவனம் (BRADA - Bhangot Rajarhat Area Development Authority) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் செயலாளராக இருப்பவர் சி.பி.எம். சட்டமன்ற உறுப்பினரான ராபின் மண்டல். இந்தத் திட்டத்திற்காக ஒரு காதாவிற்கு ரூபாய் எட்டாயிரம் முதல் பத்தாயிரம் வரை கொடுத்து வாங்கியுள்ள ராபின் மண்டல் கும்பல், அதனை ரூபாய் 2 லட்சம் முதல் 6 லட்சம் வரை விற்றுக் கொள்ளை லாபம் அடைந்துள்ளது.

சி.பி.எம்.-மின் நில மோசடி சந்தி சிரிக்கத் தொடங்கியவுடன், அந்தக் கட்சியின் மாநிலக் குழு தலையிட்டு ராஜர்காட் திட்டத்தைக் கைவிடச் சொல்லி அறிவுரை கூறியுள்ளது. சி.பி.எம். அரசோ தேனெடுத்த கையால் புறங்கையை நக்கிப் பழகிவிட்டது. எனவே, இந்தத் திட்டத்தைக் கைவிடத் தயங்கியது. சி.பி.எம். கட்சியின் நிலம் மற்றும் நிலச் சீரமைப்புத் துறை அமைச்சரான அப்துர் ரெசாக் மொல்லா பின்வருமாறு திமிராக கூறினார்: ‘‘பொழுதுபோக்கு மையத்திற்கும், கேளிக்கை விடுதிக்கும் நிலம் கொடுப்பதில் என்ன குறைந்துவிடப் போகிறது?’’ என்று. அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழுவில் உள்ள சீத்தாரம் யெச்சூரியோ ‘‘விப்ரோ, இன்போசிஸ் ஆகிய நிறுவனங்களுக்கு ராஜர்காட்டில் நிலம் ஒதுக்குவதை நிறுத்தக் கூடாது’’ என்கிறார்.

மம்தா பானர்ஜி ஆரம்பத்திலிருந்தே இந்த பிரச்சினையில் ஆழ்ந்த மௌனம் சாதித்தார். பின்னர் விவசாயிகளின் அதிருப்தியைத் தொடர்ந்து, எதிர்ப்பது போலப் பாசாங்கு செய்தார். இப்பொழுது சி.பி.எம். அரசே இந்தத் திட்டத்தைக் கைவிட்டு பின்வாங்கும் நிலையில், நிலங்களை மீண்டும் கைப்பற்றி விவசாயம் செய்யச் சொல்லி விவசாயிகளிடம் சவடால் அடிக்கிறார். ஆனால், விவசாயிகளால் மீண்டும் விவசாயம் செய்ய இயலாது. ஒருவனைக் குடிபோதையில் தள்ளிவிட்டு மீண்டும் குடிக்காதே என்று சொல்லுவது போல, நவீன நகரத்தை உருவாக்கி விவசாயிகளை உதிரிப் பாட்டாளிகளாக மாற்றிவிட்டு, அத்தகைய கலாச்சாரத்தில் தள்ளிவிட்டு, இப்பொழுது மீண்டும் விவசாயம் செய்யச் சொன்னால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. பழைய வாழ்க்கைக்கும், புதிய வாழ்க்கைக்கும் இடையிலான திரிசங்கு நிலையில் விவசாயிகள் சிக்கியுள்ளனர்.

சி.பி.எம். தலைவர்கள் நேரடியாகவே ராஜர்காட் நில மோசடியில் ஈடுபட்டு அம்பலமாகியுள்ளனர். கட்சியோ இந்த மோசடியில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்குத் தயாராக

இல்லை. ஊழல் பெருச்சாளிகளான உள்ளூர் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், மே.வங்கத்தில் சி.பி.எம். கட்சியே காணாமல் போய்விடும். எனவேதான், விசாரணை ஏதுமின்றி திட்டத்தைக் கைவிடச் சொல்லி சாமர்த்தியமாக களவாணித் தனத்தை மறைப்பதற்குக் கற்றுத் தருகிறது. இந்த ஞானோதயம் கூட சி.பி.எம். கட்சிக்கு நேர்மையின் மீதான தாக்கத்தின் அடிப் படையில் தோன்றவில்லை. ஏற்கெனவே நகர்ப்புறங்களில் கட் சிக்கு ஆதரவாக இருந்து வந்த நடுத்தர வர்க்கம், அறிவுஜீவி கள், தொழிலாளி வர்க்கம் போன்றவை, நாடாளுமன்றத் தேர் தலில் கட்சியைக் கைகழுவி விட்டன. அடுத்து வரப் போகும் சட்டமன்றத் தேர்தலில் விவசாயி வர்க்கமும் கைகழுவி விட்ட தென்றால், மண்ணைக் கவ்வ வேண்டியதுதான் எனும் அச்சத் தின் காரணமாகவே இந்த ஞானோதயமும் வந்துள்ளது.

சி.பி.எம். கட்சி, ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல்களின் கூடாரமாக மாறிவெகுகாலமாகிவிட்டது. அது, மக்களையே ஒடுக்கும் பாசிச கும்பலாக மாறி விட்டது. இப்படிச் சொன் னால், சி.பி.எம். கட்சியிலுள்ள அணிகளுக்கும் அக்கட்சியின் மீது இன்னமும் நம்பிக்கை வைத்துள்ள பலருக்கும் சந்தேக மும் வெறுப்பும் ஆத்திரமும் ஏற்படலாம். ஊழலையும் மோச டியையும் எதிர்த்துப் போராட உறுதி கொண்டவர்களும், புரட் சியின் மீது பற்று கொண்டவர்களும் ராஜர்கட் பகுதிக்குப் போய்ப் பாருங்கள். அல்லது, சி.பி.எம். தலைவர்களுக்கு எப் படி இவ்வளவு சொத்து வந்தது, உள்ளூர் தலைவர்களின் ஊழல் சந்தி சிரித்த பின்னரும் விசாரணை நடத்தாதது ஏன் என்ற கேள்விகளைக் கட்சித் தலைமையிடம் கேட்டுப் பாருங்கள். எச்சரிக்கை! கமல்பத்ராவுக்கு நேர்ந்த கதி உங்களுக்கும் ஏற் படலாம்.

● சுப்பு

# பெரியாரியக்கத்தின் முதுபெரும் தொண்டர் நாத்திகம் இராமசாமி அவர்களுக்கு அஞ்சலி!



மூடநம்பிக்கைக்கு எதிராகவும், சுயமரியாதைக்காகவும், மனிதகுல மேன்மைக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித் துக் கொண்ட நாத்திகம் இராமசாமி, தனது 77-வது வயதில் 24.09.2009 அன்று சென்னையில் காலமாகிவிட்டார்.

தனது 17 வயதில் சென்னைக்கு வந்த இராமசாமி, பெரி யாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரது இயக்கத்தில் சேர்ந்தார். பெரியார் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கு பெற்று சிறை சென்றிருக்கிறார். 1958 செப்டம்பர் 18-ஆம் தேதியன்று பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதற்காக ''நாத்திகம்'' பத்திரிகையைத் தொடங்கினார். ஆரம்பத்தில் தினசரியாகவும் பின்னர் வார இதழாகவும், தொடர்ந்து வந்த இவ்விதழ், அவர் மரணமடையும் வரை கடந்த 51 ஆண்டு களாக வெளிவந்திருக்கிறது.

இராமாயண கதாபாத்திரங்களின் யோக்கியதைகளை அம்பலப்படுத்தி அவர் எழுதியவை, தமிழக மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக, புட்டபர்த்தி சாய்பாபாவின் மோசடிகளை அவர் ஆதாரத்தோடு அம்பலப் படுத்தி எழுதிய காலத்தில், ''நாத்திகம்'' நாளேடு கடைகளில் கிடைக்காமல் போகுமளவுக்குப் பரபரப்பாக விற்பனையா கியது. பாம்பையும் கற்களையும் வீசிய போதிலும், புட்ட பர்த்தி சாய்பாபாவை பகிரங்கமாக மேடைதோறும் சவால் விட்டு அழைத்து, அம்மோசடிப் பேர்வழியைத் தமிழகமெங் கும் அவர் திரைகிழித்துக் காட்டினார்.

பெரியாரின் மறைவுக்குப்பிறகு வீரமணி-மணியம்மை கும்பல் திராவிடர் கழகத்தை கைப்பற்றியதையும், இக்கும்ப லின் முறைகேடுகளையும் ஆதாரப்பூர்வமாக தனது இதழில் இராமசாமி அம்பலப்படுத்தினார்.

''நாத்திகச் சிங்கம் பகத்சிங்'', ''ஆர்.எஸ்.எஸ். இந்து பாசி சம்'', ''சங்கரமடம் பற்றிய உண்மைகள்'', ''மடாதிபதி லீலை'', டி.ஜி.எஸ். தினகரன் மோசடிகளை அம்பலப்படுத்தும் ''இயேசு அழைக்கிறார்'', பாசிச ஜெயா கும்பலை அம்பலப் படுத்தி ''இதுதான் பார்ப்பன ஆட்சி'' முதலான அவருடைய பிரபலமான நூல்கள் மட்டுமின்றி, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, அனைத்து மதங்களின் பிற்போக்குத் தனத்தையும் மூடத்தனத்தையும் தொடர்ந்து அம்பலப்படுத் துதல், தமிழ்த் திரைப்படம் - தொலைக்காட்சிகளின் பண் பாட்டு சீரழிவுகளைச் சாடுதல் போன்றவற்றை உள்ளடக்கிய அவரது எழுத்துப்பணி அவர் இறக்கும் வரை இடைவெளி யில்லாமல் தொடர்ந்தது.

தள்ளாத வயதிலும் சமரசமின்றி நாத்திகப் பிரச்சாரத்தைச் செய்வதில் உறுதிப்பாடு கொண்டு இயங்கி வந்த மூத்த பத்திரிகையாளரான நாத்திகம் இராமசாமி அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

— ஆசிரியர் குழு

# விடுதலைச் சிறுத்தைகளின் ரவுடித்தனம்-கொலைவெறித் தாக்குதல்

**சென்னை-பு.ஜ.தொ.மு. தோழர்கள் மீது விடுதலைச் சிறுத்தைகள் நடத்திய தாக்குதல் அக்கட்சியின் சீரழிவைத்தான் நிரூபித்துக் காட்டுகிறது.**

புதிய ஜனநாயகம் செப்டம்பர் இதழில் விடுதலைச் சிறுத்தைகளின் பிழைப்புவாத - பொறுக்கி அரசியலை விமர்சித்து ஒரு கட்டுரை வெளியானதையொட்டி, ஆத்திரமடைந்த சென்னை - குரோம்பேட்டையை அடுத்துள்ள நாகல்கேணி பகுதியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் தலைவர் தோழர் முகுந்தன் மற்றும் பிற தோழர்கள் மீது கடந்த 7.9.09 அன்று நள்ளிரவில் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நாகல்கேணியில் குடியிருக்கும் இராமு என்ற பு.ஜ.தொ.மு. உறுப்பினர் வீட்டில், இப்பகுதியின் முன்னணியாளர்கள் பேசிக் கொண்டிருந்த போது, அதே பகுதியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ‘புரட்சி’ சேகர், ஷியாம், பிரபா, சசி, இளையராஜா, இளங்கோ ஆகியோர் அடங்கிய கும்பல் கையில் உருட்டுக் கட்டை - இரும்புத் தடிகளுடன் அவ் வீட்டை முற்றுகையிட்டது. ‘‘எங்க தலைவனைப் பத்தி யாடா எழுதுறீங்க? உங்கள உயிரோடு விட மாட்டோம்டா!’’ என்று வெறிக் கூச்சலிட்டபடியே வீடு புகுந்து தாக்கத் தொடங்கியது.

தொழிற்சங்கப் பணிகளையொட்டி, குரோம்பேட்டை வந்திருந்த பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன், தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்தார். ‘‘எதற்காக எங்கள் தோழர்களைத் தாக்குகிறீர்கள்? புதிய ஜனநாயகம் பத்திரிகையில் வந்துள்ள கட்டுரையில் தவறு இருந்தால், உங்கள் மறுப்பை பத்திரிகையிடம் தெரிவியுங்கள்’’ என்று அந்தக் கும்பலிடம் விளக்கிக் கொண்டிருந்தபோது, ‘‘நீ தான் தலைவனாடா?’’ என்று வெறிக் கூச்சலிட்டபடியே அவரது பின்மண்டையில் இரும்புத் தடியால் இக்கும்பல் கொலை வெறியோடு தாக்கியது. தோழர் முகுந்தன் மயங்கிக் கீழே சரிந்தார். ‘‘ஐயோ! எங்கள் தலைவரைக் கொல்றாங்க!’’ என்று தோழர்கள் கூச்சலிட்டதும், தோழர்களையும் இக்கும்பல் சுற்றி வளைத்துத் தாக்கியது. இதைக் கண்டு இப்பகுதிவாழ் மக்கள் திரளத் தொடங்கியதும், இக்கும்பல் தப்பியோடிவிட்டது.

பிடரியில் அடிபட்ட தோழர் முகுந்தனும் பிற தோழர்களும் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாக சேர்க்கப்பட்டனர். உடனடியாக, சங்கர் நகர் போலீசு நிலையத்தில் இந்த ரவுடிக் கும்பல் மீது புகார் கொடுக்கப்பட்டது. தமிழகமெங்கும் பு.ஜ.தொ.மு.வும் அதன் தோழமை அமைப்புகளும் இக்கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டன.

தோழர் முகுந்தனையும் பு.ஜ.தொ.மு. தோழர்களையும் தாக்கியதோ 6 பேர் கொண்ட போதையேறிய கும்பல். தாக்கப்பட்டவர்களோ 9 தோழர்கள். எண்ணிக்கையில் அதிகமாக இருந்த போதிலும், இத்தோழர்கள் திருப்பித் தாக்கவில்லை. அத்தகைய நோக்கமும் தோழர்களுக்குக் கிடையாது. இருப்பினும், தம்மை பு.ஜ.தொ.மு.வினர் தாக்கியதாக போலீசு நிலையத்தில் இக்கும்பல் எதிர்புகார் கொடுத்தது. அதன்பிறகு விடுதலைச் சிறுத்தைகள் கட்சிப் பிரமுகர்கள் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் போலீசு நிலையத்தில் நிர்பந்தம் கொடுத்துப் பார்த்தனர்.




பு.ஜ., திருமாவளவனின் பிழைப்புவாத அரசியலை அம்பலப்படுத்தியதைத் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரானதாகத் திரித்து அவதூறு செய்யும் விடுதலைச் சிறுத்தைகளின் சுவரொட்டி.

ஆனால், தோள்பட்டை மற்றும் பிடரியில் அடிபட்ட தோழர் முகுந்தன், படுகாயமடைந்த மற்ற 3 தோழர்கள் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாலும், இந்த ரவுடிக் கும்பல் தோழர்களைத் தாக்கியதற்கு வலுவான சாட்சியங்கள் இருந்ததாலும், இக்கொலைவெறித் தாக்குதலை எதிர்த்து பு.ஜ.தொ.மு.வும் புரட்சிகர அமைப்புகளும் போராட்டத்துக்கு ஆயத்தமானதாலும், போலீசார் இக்கும்பலின் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து, அவர்களில் மூவரைப் பிடித்துச் சிறையில் அடைத்தனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பிழைப்புவாத அரசியலை விமர்சித்து பு.ஜ.வில் கட்டுரை வெளியானதும், கடலூர் பு.ஜ. முகவரை தொலைபேசியில் கீழ்த்தரமாக வசைபாடியதோடு, உன்னைக் கொல்லப் போகிறோம் என்று அக்கட்சியின் ரவுடிகள் எச்சரித்தனர். தங்களது தலைவரை யாரும் விமர்சிக்கக் கூடாது; துதிபாடத்தான் வேண்டும். இல்லையேல், இந்தக் கதி தான் ஏற்படும் என்று எச்சரிப்பதாகவே தோழர் முகுந்தன் மீதும் பு.ஜ.தொ.மு. தோழர்கள் மீதும் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் திருமாவின் சந்தர்ப்பவாத - பிழைப்புவாத அரசியலை விமர்சித்து பு.ஜ.வில் எழுதப்பட்ட போதும் இதே பாணியில்தான் இக்கட்சியின் குண்டர்கள் எதிர்ப்பைக் காட்டினர். இவையனைத்தும் அக்கட்சியானது பிழைப்புவாத - குண்டர்படைக் கட்சியாகச் சீரழிந்து போயுள்ளதை நிரூபித்துக் காட்டுகின்றன.

புஜ.தொ.மு. தலைவர் தோழர் முகுந்தன் மற்றும் பிற தோழர்கள் மீதான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ரவுடிகள் நடத்திய இக்கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து தமிழகமெங்கும் பு.ஜ.தொ.மு.வும் புரட்சிகர அமைப்புகளும் சுவரொட்டிப் பிரச்சாரம் செய்தன. இதனால் மேலும் அம்பலப்பட்டுப் போன வி.சி. கட்சியின் பிழைப்புவாதிகள், ‘‘ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. பொறுக்கிகளே! தலித்துகளோடு மோதுவதுதான் புரட்சியா?’’ என்று நாகல்கேணி பகுதியில் எதிர்ப்பிரச்சார சுவரொட்டிகளை ஒட்டினர். சேத்துப்பட்டு பகுதியில் ‘‘வன்முறையைத் தூண்டும் ம.க.இ.க. ரவுடிகளைத் தடை செய்!’’ என்று சுவரொட்டிகளை ஒட்டினர்.

பாவம்! மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை இப்பிழைப்புவாத-ரவுடிக் கும்பலுக்குத் தெரியவில்லை. நாகல்கேணியில், வி.சி. கட்சியின் ரவுடிகள் கைதானதும், ‘‘இந்த ரவுடிப் பசங்களுக்கு இது வேணும்; அப்பதான் அடங்குவானுங்க’’ என்று இப்பகுதிவாழ் மக்களே வாழ்த்தி வரவேற்றனர். சேத்துப்பட்டு பகுதியில் இக்கும்பல் ஒட்டிய சுவரொட்டியைப் பார்த்து அப்பகுதி மக்களே அவர்களைக் கேள்வி கேட்கத் தொடங்கினர். சிலர், ‘‘டேய், யாரைப் பார்த்து ரவுடின்னு எழுதுற. இந்த ஊருல ரவுடியிசத்த ஒழிச்சவங்களே அவங்கதான். உங்கள மாதிரி மாமூல் வாங்கி, கட்டப் பஞ்சாயத்து பண்ணி பொறுக்கித் திங்கறாங்களாடா? ஒழுங்கா இரு! இல்லன்னா ஒருத்தனும் இருக்கமாட்டீங்க!’’ என்று முச்சந்தியில் நிறுத்தி அவர்களை எச்சரித்ததும், இக்கும்பல் பம்மிப் பதுங்கி விட்டது.

பு.ஜ.கட்டுரைக்கு மறுப்பு தெரிவிக்கவோ, தலித் என்ற மூடுதிரையின் பின்னே இத்தகைய பொறுக்கி அரசியலை நியாயப்படுத்தவோ திண்ணைப் பேச்சு புரட்சியாளர்கள்கூட இப்போது வி.சி. கட்சியினருக்குத் துணை நிற்பதில்லை. திருமா உள்ளிட்டு எந்தவொரு கிரிமினல் - பிழைப்புவாத - பொறுக்கி அரசியல் சக்திகளையும் அம்பலப்படுத்த பு.ஜ. என்றைக்குமே தயங்கியதில்லை. பு.ஜ.தொ.மு. உள்ளிட்டு புரட்சிகர அமைப்புகள் இப்பிழைப்புவாத ரவுடிக் கும்பலின் கோழைத்தனமான தாக்குதலுக்கு அஞ்சி அடிபணிந்ததாக வரலாறுமில்லை. தலித் என்பதாலேயே இத்தகைய ரவுடிக் கும்பல்களின் அட்டகாசத்தை உழைக்கும் மக்கள் அங்கீகரிப்பதுமில்லை.

— ஆசிரியர் குழு.

## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்:

# கூலித் தொழிலாளர்களைப் பலியிட்டுக் கொண்டாட்டமா?

கடந்த ஜூலை மாதத்தில், தில்லி மாநகரின் கட்டிடம் ஒன்றில், சரியாகக் கட்டி முடிக்கப்படாத எட்டாம் தளத்தில் வைக்கப்பட்டிருந்த கலவை இயந்திரம் ஒன்று கீழே விழுந்ததில், அதே கட்டிடத்தின் அடித்தளத்தில் வேலை செய்து கொண்டிருந்த சுனில் என்ற தொழிலாளி, இயந்திரத்தின் அடியில் சிக்கிப் பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு இதே போன்றதொரு சம்பவம், அதே கட்டிடத்தில் நடந்தது. அச்சம்பவத்தில் பொருட்களைக் கட்டிடத்தில் ஏற்ற உதவும் கிரேன் சரிந்து விழுந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். இறந்தவரது உடலைப் பார்க்கக்கூட மற்ற தொழிலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், ஒப்பந்த நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அவர்களிடம் பேச யாரும் முன்வராததால், அந்த அலுவலகத்தை அடித்து நொறுக்க ஆரம்பித்தனர். நிலைமையைக் கட்டுப்படுத்த போலீசார், தொழிலாளர்களை அடித்து விரட்டியதால் அந்தப் பகுதி முழுவதுமே போர்க்களம் போலக் காட்சியளித்தது.

இந்நிலையில் ஜூலை சம்பவத்திற்கு இரு வாரங்களுக்கு முன்புதான், தெற்கு தில்லியின் ஜம்ருத்பூர் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வந்த பாலம் ஒன்று சரிந்து விழுந்ததில் ஆறு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர், பதினைந்து பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்கள் அனைத்தும் அடுத்த ஆண்டு, தில்லியில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் போட்டிகளுக்காகக் கட்டப்படும் மிகப் பெரிய கட்டுமானங்களில் நடைபெற்றவை. பொதுவாக கட்டிடங்களைக் கட்டும் போது, சிமெண்ட் கலவை இயந்திரத்தை தரையில் வைத்துக் கொண்டு, கலவையை மேலே எடுத்துச் செல்வது வழக்கம். ஆனால் மிகப்பெரிய கட்டிடங்களைக் குறுகிய காலத்தில் கட்டி முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக, வேலையைத் துரிதப்படுத்த கலவை இயந்திரத்தையே ஒவ்வொரு தளமாக எடுத்துச் செல்கின்றனர். அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பு வசதிகளும் செய்து தரப்படாததால், இது போன்று விபத்துக்களில் உயிரிழக்கும், முடமாகிப் போகும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**பெருநகர வளர்ச்சியின் பின்னே நரபலி: கட்டுமான கூலித் தொழிலாளர்களைக் காவு கொண்ட டெல்லி மெட்ரோ ரயில் திட்டத்தின் கோரவிபத்து.**





**எவ்வித அடிப்படை வசதியுமின்றி பிளாஸ்டிக் கூடாரமே குடியிருப்பு:**
**காமன்வெல்த் விளையாட்டு அரங்கக் கட்டுமான கொத்தடிமைகளின் அவல வாழ்க்கை.**

காமன்வெல்த் போட்டிகளுக்கென 25 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சுரங்க ரயில் பாதைகள், நகரம் முழுக்க போக்குவரத்து சீரமைப்பு, அகலமான சாலைகள் — என தில்லி நகரை சர்வதேச நகரங்களுக்கு இணையாக மாற்றும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. நகரின் 'அழகைக் கெடுக்கும்' குடிசைகளை, வெளிநாட்டினரின் கண்களிலிருந்து திரை கட்டி மறைப்பதற்காக ஒரு லட்சம் மூங்கில் கழிகளை வாங்கவிருக்கிறார்கள். நகரில் சுற்றித்திரியும் பிச்சைக்காரர்களைப் பிடித்து நகருக்கு வெளியே விடுவதற்கு 12 லாரிகள் வாங்கப்பட்டுள்ளன. இதற்கென சிறப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இது போன்ற பல 'புரட்சிகரமான' திட்டங்களுடன், உலகத் தரம் வாய்ந்த புதிய விளையாட்டு அரங்கங்கள் கட்டுவது, பழைய விளையாட்டு அரங்கங்களைச் சீரமைப்பது போன்ற கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் தங்குவதற்கென்று, 200 கோடி ரூபாய் செலவில் காமன்வெல்த் கிராமம் ஒன்றும் உருவாக்கப்படுகின்றது. 118 ஏக்கரில் அமையவிருக்கும் இந்த கிராமத்தில், வீரர்கள் தங்குவதற்கென 1168 குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அது மட்டுமன்றி குளிரூட்டப்பட்ட அரங்கங்கள், சுகாதார மையங்கள், பொழுதுபோக்கு நிலையங்கள், வங்கிகள் — என சகல விதமான கட்டிடங்களும் கட்டப்படுகின்றன.

துபாயைச் சேர்ந்த எம்மார் என்ற கட்டுமான நிறுவனம், இந்தப் பணிகளை முடிக்க ஒப்பந்தம் செய்துள்ளது. வேலைகளைத் துரிதப்படுத்த, பீகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், உ.பி., மே.வங்கம் ஆகிய மாநிலங்களிலிருந்து, சுமார் 10 லட்சம் தொழிலாளர்கள், துணை ஒப்பந்தக்காரர்கள் மூலம் கொண்டு வரப்பட்டு தினக்கூலிகளாக வேலை செய்கின்றனர். இவர்களை முறையாகப் பதிவுசெய்து வேலைக்கு எடுப்பதில்லை. இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கருவியாக ஹெல்மெட் ஒன்று வழங்கப்படுகிறது. பார்ப்பதற்கு ஏதோ பாதுகாப்புக் கவசம் போலத்தோன்றும் இந்த ஹெல்மெட்டுகள், ஒரு செங்கல் விழுந்தால் கூட உடைந்து நொறுங்கிவிடும் தரத்தில்தான் இருக்கின்றன. உயரமான கட்டிடங்களில் முறையான பாதுகாப்புச் சாதனங்கள் ஏதுமின்றி உயிரைப் பணையம் வைத்துத்தான் இவர்கள் வேலை செய்தாக வேண்டும்.

வேலைநேரத்தில் விபத்து ஏற்பட்டு, யாரேனும் உயிரிழக்க நேரிட்டால், உடனே அவரது உடலை அப்புறப்படுத்தி விடுகின்றனர். விபத்து நடந்த கட்டிடத்தில் சில நாட்களுக்கு வேலை நிறுத்தப்படும், இறந்தவரது சக தொழிலாளர்களுக்குச் சிறிது பணம் கொடுத்து அவர்களை அனுப்பிவைத்து விட்டு, எதுவுமே நடக்காதது போல, அப்படி ஒருவர் இங்கு வேலை செய்யவே இல்லை என்பதுபோல, மீண்டும் வேலைகள் நடக்கத் தொடங்கிவிடும். இறந்தவரது உடலே உறவினர்களுக்குக் கிடைக்காத போது, நிவாரணம் மட்டும் எப்படிக் கிடைக்கும்? நிவாரணத்தைப் பற்றிய பேச்சுக்கே அங்கு இடமில்லை.

கட்டிடத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை நிர்ணயிக்கும் 1996-ஆம் ஆண்டின் சட்டமானது, வாரத்திற்கு 48 மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால் இங்கோ, வெகு விரைவாகக் கட்டிடங்களைக் கட்டி முடிப்பதற்காகத் தொழிலாளர்களை நாளொன்றுக்கு 12 மணி நேரம் என வாரத்திற்கு 72 மணி நேரம் வரை வேலை செய்யச் சொல்லிக் கசக்கிப் பிழிகின்றனர். இதனை நிர்மான் மஸ்தூர் பஞ்சாயத் சங்கம் என்ற கட்டிடத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சுபாஸ் பட்னாகர் உறுதிசெய்கிறார். இப்படிக் கடுமையாக வேலை வாங்கப்படும் தொழிலாளர்களுக்குச் சம்பளம்

முறையாகத் தரப்படுவதில்லை. அப்படியே தந்தாலும் அதனை மொத்தமாகத் தராமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரித்துத் தருகிறார்கள். சில சமயங்களில் மூன்று மாதங்கள் வரை கூட சம்பளம் தராமல் இழுத்தடிக்கிறார்கள்.

தொழிலாளர்கள் தங்குவதற்குச் சரியான வீடுகளும், கழிப்பிடங்களும் கட்டித் தரப்படுவதில்லை. பெரும்பாலும் பிளாஸ்டிக்-தார்ப்பாய்களைக் கூரைகளாகக் கொண்டோ அல்லது தகரக் கொட்டகையிலோதான் தொழிலாளர்களது வீடுகள் உள்ளன. அவர்களுக்கு குடிநீர் வசதிகூடச் செய்து கொடுப்பதில்லை. இங்கு நிலவும் சுகாதாரக் கேட்டின் காரணமாக மெனிங்டிஸ் என்ற நோய் தாக்கி இதுவரை நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்கள் இறந்துள்ளனர். கட்டுமானப் பணி நடக்கும் பகுதிக்கு அருகிலேயே கம்பி வேலிகளுக்குள் அமைக்கப்பட்டுள்ள இது போன்ற குடியிருப்புகள் திறந்தவெளிச் சிறைச்சாலை போன்றே உள்ளன.

> "கட்டுமான வேலை என்றால் உயிரிழப்புகள் இருக்கத்தான் செய்யும், வேலை ஒழுங்காக நடக்கிறதா என்பதை மட்டும் பாருங்கள்" எனத் தொழிலாளர்களைப் புழுக்களைவிடக் கேவலமாகக் கருதிப் பேசியிருக்கிறார், டெல்லி மெட்ரோ ரயில் நிர்வாகத் தலைவர் சிறீதரன்.

இந்தக் குடியிருப்புக்குள் வெளியாட்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் சங்கம் (PUDR) என்ற அமைப்பினர், தொழிலாளர்களிடம் அவர்களின் வேலையிடம், வாழ்க்கை முறை போன்றவற்றைக் குறித்து கருத்துக் கணிப்பு நடத்தச் சென்ற போதும் கூட, உள்ளே அனுமதிக்கப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். இதே அமைப்பினர் 1982-இல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றபோது தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை வெளிக்கொண்டு வந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கட்டுமானக் கம்பெனிகள், தனியாக குண்டர்களை வைத்துக் கொண்டு தொழிலாளர்களை மிரட்டி வருகின்றனர். தொடர்ச்சியான தொழிலாளர்களின் மரணம் குறித்து விசாரிக்கச் சென்ற உண்மை கண்டறியும் குழுவினரை, இந்த நிறுவனத்தினர் இதே குண்டர்களை வைத்து மிரட்டியுள்ளனர்.

நாடு முழுவதும் கொத்தடிமைத் தொழிலாளர்களை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அரசு, நாட்டின் தலைநகரிலேயே இப்படிப்பட்ட கொத்தடிமைக் கூடாரங்கள் இருப்பதைக் கண்டும் காணாமல் அனுமதித்துள்ளது. இதனால் விபத்துகளில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெளியே தெரியவருவதில்லை. கடந்த ஓராண்டில், போலீசின் கணக்குப்படியே, காமன்வெல்த் கிராமத்தில் மட்டும் 48 தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 98 பேர் படுகாயமடைந்து முடமாகிப் போயுள்ளனர். தில்லி மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 90 தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என மெட்ரோ நிர்வாகத் தலைவர் சிறீதரன் ஒப்புக் கொள்கிறார். மெட்ரோ ரயில் திட்டத்தைக் குறுகிய காலத்திற்குள் முடித்ததற்காக, முதலாளித்துவ ஊடகங்களால், நாயகனாகப் போற்றப்படும் இதே சிறீதரன் தான், ''கட்டுமான வேலை என்றால் உயிரிழப்புகள் இருக்கத்தான் செய்யும், வேலை ஒழுங்காக நடக்கிறதா என்பதை மட்டும் பாருங்கள்'' எனத் தொழிலாளர்களைப் புழுக்களைவிடக் கேவலமாகக் கருதிப் பேசியிருக்கிறார்.

இருக்கிற பிரச்சினைகள் போதாதென்று, தற்போது காமன்வெல்த் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பென்னல், கட்டுமானப் பணிகள் சரியான வேகத்தில் நடைபெறவில்லை என்றும், குறிப்பிட்ட தேதிக்குள் அவற்றை முடிக்க இந்தியாவால் முடியுமா என்பது சந்தேகம்தான் என்றும் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். விரைவாக வேலைகளை முடிப்பது என்ற பெயரால், இன்னும் பல கொடிய விபத்துகள் நடக்கப் போவதையும் தொழிலாளர்களின் உயிர்ப்பலிகள் கேள்விமுறையின்றித் தொடரப் போவதையுமே இது அபாயச் சங்காக எதிரொலிக்கிறது.

இந்நிலையில், உலக நாடுகளுக்கு மத்தியில் தனது போலி கவுரவத்தை நிலைநாட்ட, இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பையும் இரத்தத்தையும் உறிஞ்சி, அவர்களில் பலரை நரபலிகொடுத்து, இந்திய அரசு உருவாக்கிவரும் காமன்வெல்த் விளையாட்டுப்போட்டி எனும் பிரம்மாண்டமான கேளிக்கையை நம்மால் இரசிக்க முடியுமா? கட்டுமானத் துறை ஏகபோக முதலாளிகளின் கொழுத்த ஆதாயத்துக்காக, நமது வரிப்பணத்தை வாரியிறைத்து நடத்தப்படும் இந்த வக்கிரமான கூத்தையும், அதற்காக கூலித் தொழிலாளர்கள் பலியிடப்படுவதையும் இனியும் சகித்துக் கொண்டிருக்கத் தான் முடியுமா?

கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பராமரிப்பு இல்லங்கள்கூட இல்லாத அவலம்: அரசின் அலட்சியத்தால் நாயினும் கீழான வாழ்க்கை.



• அழகு

# “ஆயுத வழிபாடு விடுதலையைத் தராது!”

**ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் குறித்து, இலங்கையைச் சேர்ந்த மார்க்சிய இலக்கிய விமர்சகர் தோழர் சிவசேகரம் அளித்த நேர்காணல்.**

***தோழர் சிவசேகரம், இலங்கையைச் சேர்ந்த மார்க்சிய இலக்கிய விமர்சகர்களுள் குறிப்பிடத்தக்கவர். தற்கால இலக்கிய விமர்சனம் குறித்த அவரது கட்டுரைகள், ‘‘விமர்சனங்கள்’’ என்ற பெயரில் நூலாக வெளிவந்திருக்கிறது. தற்பொழுது இலங்கைத் தலைநகர் கொழும்புவில் வசித்து வரும் தோழர் சிவசேகரம், இலங்கையைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளராகச் செயல்பட்டு வருகிறார்.***


***ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் பின்னடைவுக்குள்ளாகியிருக்கும் இந்தச் சமயத்தில், அவரைப் பேட்டி காணும் வாய்ப்பு பு.ஜ.விற்குக் கிடைத்தது. அந்நேர்காணலில், ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் கடந்த கால வரலாறு, அதன் எதிர்காலம், விடுதலைப் புலிகளின் தோல்விக்கான காரணம் உள்ளிட்டு பல அடிப்படையான கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள பதில்கள், பு.ஜ. வாசகர்களும், தமிழக மக்களும் இப்பிரச்சினையை இன்னும் ஆழமாக, மார்க்சிய-லெனினியக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறோம். அவரது நேர்காணலின் முதல் பகுதி இவ்விதழில் வெளியிடப்படுகிறது.***

- ஆசிரியர் குழு.

***பு.ஜ.:** வான்படை வைத்திருக்கும் அளவிற்கு வலிமையான இராணுவ அமைப்பாகக் கட்டமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் இப்போது ஏறத்தாழ ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டுவிட்டது; இதன் விளைவாக ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டமும் மாபெரும் பின்னடைவுக்குள்ளாகிவிட்டது. இதற்கான புற மற்றும் அகக் காரணங்கள் என்ன?*

**சிவசேகரம்:** மூன்று சிறிய விமானங்கள் புலிகள் வைத்திருந்தது பெரிய விசயம்தான். ஆனாலும், இதை வைத்தே அதை வான்படை என்று சொல்ல இயலாது. இதைவிட வலிமையான விமானப்படை இலங்கை அரசிடம் இருந்தது. மற்றபடி வலிமையான கடற்படை, இன்னபிற ஆயுதங்கள் புலிகளிடம் இருந்தது உண்மைதான். இப்படி இந்த ஆயுத வலிமையை நம்பியதே புலிகளின் தோல்விக்கு முக்கியக் காரணம். ஆரம்பத்தில் மக்களின் பேச்சைக் கொஞ்சம் கேட்டவர்கள், ஆயுத வலிமை வந்த பிறகு மக்கள் பேச்சைக் கேட்பதில்லை. இது புலிகளுக்கு மட்டுமல்ல, ஆரம்பத்தில் இருந்து எல்லா இயக்கங்களுக்கும் பொருந்தும்.

மக்களை விடுத்து ஆயுத வழிபாடு செய்த இந்தத் தவறு, தமிழ் தேசியத்தின் முக்கியமான பலவீனமாக இருந்தது. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேற வேண்டும் என புலிகள் உத்தரவிட்டபோது, அதற்கு மக்கள் சம்மதம் இல்லாமலேயே அமல்படுத்தினார்கள். தற்போது கிளிநொச்சியிலும் இதேதான் நடந்தது. இப்படி விடுதலைப் போராட்டத்தில் எந்த அம்சத்திலும் மக்களின் பங்களிப்பு இல்லாமலே இருந்தது. புலிகள் ஆணையிட்டால் மக்கள் நிதி தரவேண்டும், ஆர்ப்பாட்டங்களுக்கு வரவேண்டும், தேர்தலைப் புறக்கணிப்பதோ, பங்கேற்பதோ செய்யவேண்டும். எந்த பிரச்சினையிலும் மக்களின் கருத்து - விருப்பம் கேட்டு நடப்பதில்லை. தாங்கள் ஈழத்தைப் பெற்றுத்தரும் சக்தி எனவும், அதற்கு மக்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதே புலிகளின் செயல்பாடாக இருந்தது.


தோழர் சிவசேகரம்

இதனால்தான் மக்களிடமிருந்து போராட்டம் அன்னியப்படத் துவங்கியது. பிரபாகரன் முடிவெடுத்தால் சரியாக இருக்கும், அவர் என்றைக்குமே தோல்வியடையமாட்டார் என்பதே புலிகள் மக்களிடம் உருவாக்கிய சிந்தனையாகும். புறக் காரணங்களைப் பொருத்தவரை சீனாவும், இந்தியாவும் ஆயுதங்களை வழங்கியதைக் குறிப்பிடலாம். மேலும், சீனாவின் பெயரைச் சொல்லி இந்தியாவின் பாவத்தை கழுவும் போக்கும் இங்கு இருக்கிறது.

கருணாவின் துரோகத்தை பொருத்தவரை, அதை ஒரு தனி மனித நிகழ்வாகப் பார்க்க இயலாது. ஏற்கெனவே வடக்கு, கிழக்கு குறித்த முரண்பாடுகள் மக்களிடம் நிலவியிருந்தது. யாழ்ப்பாணத்து மக்கள் மட்டக்களப்பு மக்களைக் கீழாக பார்க்

கும் மனோபாவம் நிலவியது. இன்றைக்கு இது மாறியிருந்தாலும், சாதி ரீதியாகவும் இன்னும் பல விசயங்களில் இது நீடிக்கவே செய்கிறது. இந்த முரண்பாட்டிற்குத் தீர்வு காணும் வண்ணம் புலிகள் முயலவில்லை. மாறாக, இந்த முரண்பாட்டை வைத்துப் புலிகளை அழிப்பதற்கு இலங்கை இராணுவம் கருணாவை நன்கு பயன்படுத்திக்கொண்டது. கருணா மட்டும் பிரியவில்லை, அவருடன் ஒரு கூட்டமே விலகிச் சென்றது. இராணுவத்தின் உதவியுடன் கிழக்கிலிருந்த புலித் தலைவர்களை கருணா கும்பல் கொலை செய்தது. மேலும், புலிகளின் போர் உத்திகள், இரகசியங்கள் அனைத்தும் கருணா மூலம் சிங்கள இராணுவத்திற்குச் சென்றன.



ஈழத் தமிழர்களின் இந்தத் துயரத்திற்கு, புலிகளின் ஆயுத வழிபாடு அரசியலுக்கும் பங்குண்டு.

எனவே, இதை கருணா என்ற தனிமனிதரை வைத்துப் பார்க்காமல், வடக்கு-கிழக்கு முரண்பாட்டின் அடிப்படையிலேயே இந்தத் துரோகத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். புறக்காரணங்கள் எவ்வளவு பாதகமாக இருந்தாலும், அகக்காரணங்களே போரின் முடிவைத் தீர்மானிக்கின்றன. சீனப் புரட்சியில்கூட எதிரி வலிமையாக இருந்த போது, செஞ்சேனை பல இடங்களில் பின்வாங்கியது. இது தோல்வி அல்ல; மாறாக, தனது சக்திகளைப் பாதுகாத்து எதிரிக்குப் பாதகமான சூழ்நிலையில் தாக்குவது என்ற தந்திரம்தான். புலிகளைப் பொருத்தவரை எதிரியைக் குறைத்தும், தமது வலிமையைக் கூட்டியும் மதிப்பிட்டார்கள். கிழக்கு மாகாணம் முற்றிலும் வீழ்ந்த பிறகாவது அவர்கள் தங்களது நிலையைப் புரிந்து கொண்டு, தற்காப்பு நிலைக்கு பின்வாங்கியிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால், இந்தத் தோல்வியையும் மக்கள் அழிவையும் தவிர்த்திருக்கலாம். புலிகளின் சுத்த இராணுவவாதக் கண்ணோட்டமே இந்த அழிவைத் தேடிக்கொண்டது.

**பு.ஜ.:** ***கிளிநொச்சி வீழ்ந்த பிறகு புலிகள் கெரில்லா போர் முறைக்கு மாறியிருந்தால், இத்தனை இழப்புகள் ஏற்பட்டிருக்காது எனப் பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள். ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த புலிகள் இந்த மாற்றுப் போர் உத்திக்கு ஏன் மாறிச் செல்லவில்லை? அவர்கள் எதை நம்பி, யாரை நம்பி மரபுவழிப் போரை இறுதிவரை நடத்தி வந்தார்கள்?***

**சிவசேகரம்:** இதற்கான ஒரு பகுதி பதிலை ஏற்கனவே கூறியிருக்கிறேன். மரபு வழிப் போரோ, இல்லை, கெரில்லா போரோ அது மக்கள் யுத்தமாக இருந்தால்தான் வெற்றி பெற முடியும். மக்களைச் சாராமல் கெரில்லா போர் முறைக்கு மாறியிருந்தாலும் புலிகளுக்கு எதிரான சக்திகளால் அவர்கள் காட்டிக் கொடுக்கப்படும் அபாயம் உள்ளது.

மக்கள் போராட்டம் தீவிரமாக நடக்கும்போதுதான் கெரில்லா யுத்தமும் நடத்த முடியும். ஒருவேளை இப்படி மக்களின் பங்கேற்பு இல்லாமல் இருந்திருந்தாலும், கெரில்லா போர் முறைக்கு மாறியிருந்தால்கூட இந்த இழப்புகளை கணிசமாகத் தவிர்த்திருக்கலாம். கூடவே, தமது பாதையை புலிகள் சுயவிமரிசனம் செய்து கொண்டு அப்படி மாறியிருந்தால், இந்த போரின் போக்கு மாறியிருக்கக் கூடும்.

இப்படி அவர்கள் போர் முறையை மாற்றிக் கொள்ளாததற்கு இன்னொரு காரணம், அவர்கள் மேற்கு நாடுகளிலும், தமிழ்நாட்டிலும் உள்ள தங்கள் ஆதரவாளர்களின் போராட்டம், தேர்தல் காரணமாக ஒரு கவுரவமான பேச்சுவார்த்தை மூலம் போரை நிறுத்த முடியும், அதன் மூலம் புலித் தலைமையைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று தவறாக நம்பியதும் ஆகும். அமெரிக்கப் புதிய அதிபர் ஒபாமாவைக்கூட அவர்கள் நம்பினார்கள். இறுதிக் காலத்தில் நார்வேயேயையும் அவர்கள் அளவுக்கதிகமாக நம்பினார்கள். இந்தத் தவறான முடிவுகளாலும் அவர்கள் பெரும் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

**பு.ஜ.:** *பிரபாகரன் உள்ளிட்ட புலித்தலைவர்கள் போரிட்டு மரணமடைந்தார்களா? அல்லது சரணடைந்த பின் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்களா? இறுதி நாட்களில் போர் முனையில் நடந்தது என்ன?*

**சிவசேகரம்:** அவர்கள் போரிட்டு இறந்ததற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. போரிட்டு இறந்தவர்களெல்லாம் கடைசி இரண்டு வாரத்திற்கு முன்பாகக் கொல்லப்பட்டவர்கள். இறுதி நாட்களில் பலரும் சரணடைந்தே கொல்லப்பட்டிருக்கிறார்கள். புலிகள் எதிரிகளிடம் சிக்காமல் இருப்பதற்கு சயனைடு கடிப்பது பழக்கம். இவர்கள் அப்படியும் சாகவில்லை. பிரபாகரனது உடல் காயங்களைப் பார்க்கும் போது, குறிப்பாக அவரது தலை வெட்டப்பட்டதைப் பார்த்தால், இது போர்க் காயம்போலத் தெரியவில்லை. அவர் பிடிபட்டு கொடூரமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்றே தெரிகிறது. இதே போல சரணடையச் சென்ற நடேசனும் அவரது மனைவியுடன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

**பு.ஜ.:** *வைகோ, நெடுமாறன் போன்ற தமிழினவாதிகள் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் எனக் கூறுவதன் பின்னணி என்ன?*

**சிவசேகரம்:** இவர்கள் புலிகளின் முகவர்களாக, குரலாகத்தான் தமிழ்நாட்டில் செயல்படுகிறார்கள். வெளிநாடுகளில் இருக்கும் புலிகளின் ஒரு பிரிவினர் இன்னமும் பிரபாகரன் இறக்கவில்லை என்று கூறுவதை இவர்கள் ஏற்கிறார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டில் இருக்கும் புலி ஆதரவு மக்களின் நம்பிக்கையைப் பெற்று, அரசியல் இலாபம் கருதி இப்படிப் பிரச்சாரம் செய்கிறார்கள் எனக் கருதுகிறேன்.

பிரபாகரன் உடல் பல கோணங்களில் வெளியிடப்பட்டும் அதை நம்பமுடியாதவர்கள் யார் இருக்க முடியும்? இவர்கள்

பிரபாகரன் இறந்ததை அறிவிப்பதற்கு ஏன் அஞ்சுகிறார்கள்? வெளிநாடுகளில் புலிகள் திரட்டியிருக்கும் கோடிக்கணக்கான டாலர் பணம் இப்போது பிரபாகரன் உயிரோடு உள்ளதாகக் கூறும் பிரிவினரிடம் உள்ளது. பிரபாகரன் இறந்து விட்டார் என்று சொன்னால், இந்தப் பணத்தை என்ன செய்யப் போகிறீர்கள் என மக்கள் கேட்பார்கள். அதை தவிர்க்கவே இவர்கள் பிரபாகரன் இறந்ததை மறுக்கிறார்கள். பிரபாகரன் மீண்டும் வரும்போது போர் செய்வதற்கு இந்தப் பணம் தேவைப்படும் என்று சொல்லலாமல்லவா? அரசியலுக்கு அப்பாற்பட்டு இப்படியும் ஒரு காரணம் உள்ளது. இதனால் இறந்து போன பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்துவதைக் கூட இவர்கள் தடுக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

***பு.ஜ.:*** ***ஈழத்தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் சந்தித்திருக்கும் இப்பின்னடைவு பற்றி ஈழத்தில் வாழும் தமிழர்களும், புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களும் ஒரே மாதிரியான கருத்தினைக் கொண்டுள்ளார்களா?***



**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதற்கு ஆதாரமாக வெளிவந்துள்ள புகைப்படம்** (கோப்புப் படம்)

**சிவசேகரம்:** இல்லை என்றுதான் நினைக்கிறேன். புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தனி ஈழம் என்ற கருத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை சுயநிர்ணயத்திற்குக் கொடுக்கவில்லை. சமாதான பேச்சுவார்த்தை காலத்தில் அவர்கள் சமஷ்டி என்று பேசியிருந்தாலும், அடிப்படையில் தனி ஈழம் என்ற கண்ணோட்டத்தில்தான் சிந்தித்து வந்தார்கள். இலங்கையைப் பொருத்தவரை சுயநிர்ணயம் பற்றிய பேச்சு கூடுதலாக இருந்து வந்தது. குறிப்பாக, புலிகளின் கட்டுப்பாட்டுக்கு வெளியே இருக்கும் மக்கள் மத்தியில் தனி ஈழம் குறித்த கருத்து வலுவாக இருந்தது என நான் நம்பமாட்டேன். அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை என்பதன் பொருள் தெரியாவிட்டாலும், ஏதோ ஒரு சுயாட்சி அதிகாரம் என்பதை தெரிந்து வைத்திருந்தார்கள். இதுதான் அவர்களுடைய யதார்த்தமாக இருந்தது. இரண்டு பிரிவினருக்கும் இந்தப் போரின் முடிவு அதிர்ச்சியாக இருந்தது.

புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அவர்கள் எதிர்பார்த்திருந்த ஈழம் தோல்வியடைந்து விட்டபடியால் அவர்களுடைய சிந்தனை அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதாக இருந்தது. ஈழத்தில் இருந்த மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை வேறு. அவர்களுக்கு அடிப்படை மனித உரிமை, வாழும் உரிமை, அரசியல் உரிமை, இவையெல்லாம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதை வெளிப்படுத்துவதற்கான ஊடகச் சுதந்திரம்கூட இல்லை. புலம் பெயர்ந்தவர்கள் ஒரு கற்பனை உலகத்தில் வாழ்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சமாதானப் பேச்சுவார்த்தையின் போது புலிகள் சமஷ்டி அதிகாரத்திற்கு உடன்பட்டார்கள் என்றதும் ஈழத்திலுள்ள மக்கள் அதை ஏற்றார்கள். ஆனால், புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் இதற்கு எதிர்ப்பு இருந்தது.

***பு.ஜ.:*** ***நாடு கடந்த தமிழ் ஈழம் என்றெல்லாம் அறிவிக்கப்படும் சூழ்நிலையில், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தமிழ் தேசியவாதத்தினைக் கட்டியெழுப்பும் வாய்ப்புகள் உள்ளனவா?***

**சிவசேகரம்:** முன்பு சொன்னதைப்போல பிரபாகரன் இறந்துவிட்டார், இறக்கவில்லை என்று இறந்த கட்சி, இறவாத கட்சி என்று இரு பிரிவுகளாக புலம் பெயர்ந்த புலி ஆதரவாளர்களிடம் பிளவு உள்ளது. இதில் இறந்து விட்டார் என்ற பிரிவு தனது அரசியல் சுயலாபத்திற்காக இந்த நாடு கடந்த ஈழத்தை அறிவித்திருக்கிறது என்றுதான் நான் பார்க்கிறேன். இப்படி ஒரு முன்மாதிரி வேறு எந்த விடுதலை இயக்கத்தாலோ, அல்லது ஆக்கிரமிப்புக்குட்பட்ட நாடோ செய்ததில்லை. 1970-ஆம் ஆண்டு கம்போடியாவில் ஒரு இராணுவப் புரட்சி மூலம் சிகாணுக் ஆட்சி பறிக்கப்படுகிறது. அதை அடுத்து அவர் சீனாவில் தனது நாடு கடந்த அரசை அறிவிக்கிறார். அப்போது கம்போடியாவில் அவருக்கென்று விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் இருந்தன. ஆனால், இலங்கையில் அப்படி ஒரு சதுர அங்குலம்கூட இல்லாமல் புலம்பெயர்ந்தவர்கள், அதுவும் மேலைநாடுகளின் குடியுரிமை பெற்றவர்கள் இப்படி அறிவிப்பதை நான் ஒரு கேலிக் கூத்தாகத்தான் பார்க்கிறேன். இதனை எந்த முக்கியத்துவமும் இல்லாத அரசாங்கங்கள் கூட அங்கீகரிக்காது என்பதே என் கருத்து. மேலும் தற்போது கே.பி. கைது செய்யப்பட்ட பிறகு, இதன் நம்பகத்தன்மைக் கேள்விக்குறியாக இருக்கிறது.

இப்படிப்பட்ட கருத்து புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள படித்தவர்கள், வழக்கறிஞர்கள், செல்வந்தர்கள் ஊடாக பரப்பப்படுகிறது. இங்கே வை.கோ., நெடுமாறன் ஆடும் நாடகத்தைப் போன்றே, இதுவும் ஒரு நாடகமாகத்தான் எனக்குத் தெரிகிறது.

***பு.ஜ.:*** ***மலையகத் தமிழர்கள், முசுலீம்கள், சிங்கள மக்கள் ஆகியோர் 25 ஆண்டு கால ஆயுதப் போராட்டத்தையும், அதன் முடிவையும் எப்படிப் பார்க்கிறார்கள்?***

**சிவசேகரம்:** மலையகத் தமிழர்களைப் பொருத்தவரை புலிகளின் போராட்டத்தோடு பெரிய முரண்பாடு இல்லை. பொதுவில் இந்தப் போராட்டத்தை அவர்கள் அனுதாபத்தோடுதான் பார்த்தார்கள். அந்த அளவில் இந்த தோல்வி அவர்களிடம் ஒரு ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது எனலாம்.

தென்னிலங்கையில் வாழும் முசுலீம்களைப் பொருத்தவரை, புலிகள் போராடுவது தமக்கு பாதுகாப்பானது என்றே கருதினார்கள். தற்போது புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு சிங்களப் பேரினவாதத்தால் தமக்கு அபாயம் ஏற்படலாம் என்று அஞ்சுகிறார்கள். வடக்கு, கிழக்கு முசுலீம்களின் ஒரு பகுதியினர் புலிகள் மற்றும் இதர விடுதலை இயக்கங்களின் அராஜகங்களால் பாதிக்கப்பட்டவர்கள். பள்ளி வாசல் படுகொலை, கிராமங்களில் படுகொலை, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றம் எனப் பல விசயங்களைச் சொல்லலாம். இவர்கள் புலிகள் தோற்றது நல்லதே என்று நினைக்கக்கூடும். ஆனால், சற்று நிதானமாக சிந்தித்துப் பார்த்தால், இது தமிழ் தேசிய இனத்தின் மீதான சிங்கள பேரினவாதத்தின் வெற்றி என்று அவர்க

ளில் சிலர் உணர்கிறார்கள். அப்படி சில தலைவர்கள் பேசவும் செய்கிறார்கள். அவர்களில் சந்தர்ப்பவாதிகளும் உண்டு.

மலையகம், முசுலீம், மற்றும் வடக்கு கிழக்கு கட்சிகளை அரசாங்கம் தனது நோக்கத்திற்காகப் பிளப்பதும், பேரம் பேசுவதும் கூட நடக்கிறது. சிங்கள மக்களைப் பொருத்தவரை இந்தப் போர் ஒரு கவுரவப் பிரச்சினை. இது வரை தங்கள் மீது செய்யப்பட்ட அவமானங்கள் இப்போது கழுவப்பட்டதாக அவர்கள் உணர்கிறார்கள். தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத விளைவு இது. ராஜபக்சவும் இதை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார். தமிழ் மக்கள் மீது தாங்கள் வெற்றிபெற்றதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். இதை வைத்து அரசாங்கம் பல அடக்குமுறைச் சட்டங்களை அமல்படுத்தி வருகிறது. இறுதியில், இந்த போக்கு சிங்கள மக்களுக்கே எதிராக வரும். அப்போது சிங்கள மக்களும் இந்த அரசின் பாசிசப் போக்கை உணரக் கூடும். சிங்கள் மக்கள் மத்தியில் தமிழர் பிரச்சினைகளைப் பேசினாலே அவர்களைச் சிங்களப் புலி என அவதூறு செய்யும் வழக்கம் இருந்தாலும், ஒரு சிலர் அப்படி வேலைசெய்கின்றனர். அதனால் சிறையும் சென்றிருக்கின்றனர். தற்போது தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்படும் காட்சி கூட, சிங்களப் பத்திரிகையாளரால்தான் வெளியிடப்பட்டது. இத்தகைய சக்திகளை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஆனால், தமிழ் தேசிய இனவாதத் தலைவர்கள் இப்படிப்பட்ட முயற்சிகளைக் கண்டுகொள்வது கிடையாது.

**பு.ஜ.:** ***சிங்கள மக்கள், ஈழத்தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையை ஏற்றுக் கொண்டதற்கு சிங்களப் பேரினவாத மனோபாவத்தைக் காரணமாகக் கூறலாம். ஆனால் சிங்கள மக்கள், சிங்கள இராணுவத்தால் பத்தாயிரக் கணக்கில் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைக்கூட எதிர்த்துக் கலகத்தில் இறங்கவில்லையே ஏன்?***

**சிவசேகரம்:** இந்த இனப்படுகொலையைச் சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டார்களா என்பதிலேயே எனக்கு ஐயம் இருக்கிறது. ஏனென்றால், பெரும்பாலான சிங்கள மக்களுக்கு இப்படி ஒரு இனப்படுகொலை நடந்ததே தெரியாது. இறுதி நாளில் 20,000 பேர் கொல்லப்பட்டதை மறுத்துதான் சிங்கள ஊடகங்கள் எழுதின. ஆனால், இந்த அரசாங்கம் சிங்கள பேரினவாதப் பிரச்சாரத்தைச் செய்வதை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. முள்கம்பி முகாமில் தமிழ் மக்களை வைத்திருப்பதற்கு கண்ணி வெடிதான் காரணம் என்ற அரசின் பிரச்சாரத்தைக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதனாலேயே சிங்கள மக்கள், தமிழ் மக்களை வெறுக்கிறார்கள் என்று சொல்ல இயலாது என்று நினைக்கிறேன். அப்படி இருந்தால் கொழும்பில் இரு பிரிவு மக்களும் சேர்ந்து வாழ முடியாது. அந்த நிலை வரவில்லை.

ஆனால், சிங்கள மக்கள் பேரினப் பெருமிதத்தில் இருக்கிறார்கள் என்னும் அதே சமயம், அது இன வெறுப்பாக மாறவில்லை. புலிகள், சிங்கள மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதம் கூட இந்தப் பெருமித உணர்வுக்குக் காரணமாக இருக்கலாம். சிங்கள மக்கள் புலிகளால் கொல்லப்பட்டபோது, எந்த தமிழினத் தலைவரும் அதைக் கண்டிக்கவில்லை என்பதையும் இங்கே பார்க்க வேண்டும். தமிழ் மக்கள் மீதான தாக்குதலைச் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் சக்திகள் சிறுபான்மை என்றாலும், அவை இருக்கத்தான் செய்கின்றன. இவர்களைச் சிங்களப்புலிகள் என அரசு கைது செய்வதும் நடக்கிறது.

சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டது குறித்து பார்த்தோமானால், அது மக்களிடையே ஒரு எதிர்ப்பை தோற்றுவிக்காததற்கு காரணம் ஜே.வி.பி.யின் பயங்கரவாதம். அரசாங்கம் ஜே.வி.பி.யின் பயங்கரவாதத்தை முறியடித்து விட்டது என்றே மக்கள் பார்த்தார்கள். அந்தக் காலத்தில் ஜே.வி.பி. மிக மோசமாக நடந்து கொண்டது. அப்போது ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டார்கள் என்றால், அதில் 25 சதம் ஜே.வி.பி. செய்த கொலைகளாகும். ஜனநாயகவாதிகள், இடதுசாரிகள், இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் தமிழர்களின் உரிமைகளை ஆதரித்தவர்கள் போன்றோரைத்தான் அரசியல் எதிரிகள் என்று ஜே.வி.பி. கொலை செய்தது. கொல்லப்பட்டவர்ளெல்லாம் அரசு ஆதரவாளர்கள் அல்ல. அரசு நடத்திய கொலைகள் முடிந்த பிறகு இந்தப் பிரச்சினை மனித உரிமை மீறல் என்று மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. அதில் இப்போதைய அதிபர் ராஜபக்சவும் உண்டு.

> மரபு வழிப் போரோ, இல்லை
> கெரில்லா போரோ, அது மக்கள் யுத்தமாக
> இருந்தால்தான் வெற்றி பெற முடியும்.
> மக்களைச் சாராமல்
> கெரில்லா போர் முறைக்கு மாறியிருந்தாலும்
> புலிகளுக்கு எதிரான சக்திகளால்
> அவர்கள் காட்டிக் கொடுக்கப்படும்
> அபாயம் உள்ளது.

1994-இல் யு.என்.பி அரசு கவிழ்ந்தற்கு இந்தப் படுகொலைகள் ஒரு காரணமாகும். 1971 ஜே.வி.பி. கலவரத்தை அரசு ஒடுக்கியபோது குத்து மதிப்பாக சுமார் 10,000 பேர் கொலை செய்யப்பட்டார்கள். அதைக் கண்டித்து அப்போது கவிதை, கதை, நாடகம் என இலக்கியத்தில் பரவலாக வெளிப்பட்டது. அந்த நிலை 90'களில் இல்லை. அதற்கு அரசியல் கருத்துக்களைப் பேசமுடியாது என்ற அச்சநிலையே காரணம். அதையும் மீறி ஒரு சிங்களப் பாடகி தனது பாடல்களில் அரசு கொலைகளைக் கண்டித்துப் பாடியிருக்கிறார்.

**பு.ஜ.:** ***இந்தியாவில் காசுமீர், மணிப்பூர், அசாம், நாகலாந்து ஆகிய மாநிலங்களில் விடுதலைப் போராட்டங்கள் பல்வேறு குழுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. அத்தேசிய இன மக்கள், ஈழ மக்களின் போராட்டத்தில் இருந்து கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகள் பற்றிக் கூற முடியுமா?***

**சிவசேகரம்:** அவர்கள் எல்லாரும் பிரிவினைக்காகத்தான் போராடுகின்றனர் என்று என்னால் சொல்ல இயலாது. ஏதோ ஒரு சுயநிர்ணய உரிமைக்காகத்தான் போராடுகின்றனர். நாகலாந்தில்கூட பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயாட்சியை வழங்கினால், இந்தப் பிரிவினை விசயம் ஒரு காலத்தில் இல்லாமல்கூடப் போகலாம். நாகலாந்து பிரியவேண்டுமா, இல்லையா என்பது அம் மக்கள் எடுக்கவேண்டிய முடிவு. பிரிவினைக்காகப் போராடுகிறார்களா என்பதல்ல பிரச்சினை, அது மக்கள் போராட்டமாக இருக்கிறதா என்பதே முக்கியமானது. மாறாக, அது ஆயுதம் ஏந்திய சில குழுக்களின் போராட்டமாக மட்டும் இருந்தால், புலிகளுக்கு நடந்தது அவர்களுக்கும் நடக்கும்.

**பு.ஜ.:** ***நாட்டினை மேலும் தீவிரமாக மறுகாலனியாக்குவதற்கும், அரசினைப் பாசிசமயமாக்குவதற்கும் சிங்கள ஆளும்***

*வர்க்கமும், சிங்களப் பேரினவாத ஓட்டுக்கட்சிகளும் இந்தப் போரையும், தமிழினப் படுகொலைகளையும் எப்படிப் பயன் படுத்தி வருகின்றன?*

**சிவசேகரம்:** இந்தப் போருக்குப் பிறகு இலங்கை அரசுக்கும் ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவிற்கும் இடையே சில முரண் பாடுகள் உள்ளன போலத் தோன்றும். ஏனென்றால் மேலை நாடுகள் சடங்குக்காக மனித உரிமை, தமிழ் மக்கள் விடுவிக் கப்படவேண்டுமென்று பேசுகிறார்கள். இந்த விமரிசனங்களை ஏற்றுக் கொண்டால், சிங்களப் பேரினவாத உணர்வு புண்படு மென்பதால், அரசாங்க அதிகாரிகள் மிகவும் திமிரோடு ஐ.நா. சபையோ அமெரிக்காவோ இதில் தலையிடுவதற்கு உரிமை யில்லை என்றெல்லாம் பேசுகிறார்கள். வெளித்தோற்றத்தில் முரண்பாடுகள் இருப்பது போலத் தோன்றினாலும், நடைமுறை யில் 180 கோடி டாலர் கடன் கேட்கப்பட்டதற்கு, 250 கோடி டாலர் சர்வதேச நல நிதியத்திடமிருந்து கடன் கிடைக்கிறது. இந்தப்போர் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித் துள்ள நிலையில், ஏகாதிபத்தியங்கள் இலங்கையை மேலும் தன் பிடிக்குள் கொண்டு வரும் எல்லா நடவடிக்கைகளையும் செய்து வருகின்றன. அதே நேரம் இலங்கை அரசு புலிகளை அடக்கிவிட்டதோடு நின்று விடாமல் இராணுவத்தை மேலும் பலப்படுத்தப் போகிறது. புலிகள் இல்லாத நிலையில் இந்த இராணுவம் யாரை எதிர்த்துப் போரிடப் போகிறது?

நாளை பாசிச அரசுக்கு எதிராக வரும் எழுச்சியை அடக் கவே இந்த இராணுவம் பயன்படப் போகிறது. இந்த அரசு, அரசு எந்திரத்தை மேலும் பலப்படுத்தி வருகிறது. அது ஏகாதி பத்திய நலன்களுக்காகவும் பயன்படப்போகிறது.

***பு.ஜ.:** வடக்கின் வசந்தம், கிழக்கின் விடியல் என்ற பெயரில், ராஜபக்ச அரசால் முன் வைக்கப்படும் திட்டங்கள் எவ்வகையில் ஈழத் தமிழர்களின் நலனுக்கு, உரிமைகளுக்கு எதிராக உள்ளன?*

**சிவசேகரம்:** எல்லா அரசியல் கட்சிகளையும் சிதைத்து அரசாங் கக் கூட்டணியின் கீழ் கொண்டு வருவதற்காகவே இவை உதவு கின்றன. கிழக்கில் பிள்ளையானும், வடக்கில் டக்ளசும் அர சாங்கத்தின் சின்னத்தில் போட்டியிட்டு வெல்கிறார்கள். இதன் மூலம் இனம், மதம் முதலானவற்றின் பெயரில் எந்தக் கட்சி யும் இருப்பதை ஒழிக்கவே இந்த அரசு முயல்கிறது. தமிழ் மக்கள், முசுலீம்கள், மலையக மக்கள் தங்களது நலனுக்காக கட்சி நடத்த முடியாது என்பதே அரசின் நோக்கமாக இருக் கிறது. வடக்கின் வசந்தமோ, கிழக்கின் விடியலோ மக்களுக்கு எந்த நலனையும் கொண்டுவரப்போவதில்லை. இவை அரசு எந்திரத்தைப் பலப்படுத்துவதற்குத்தானே ஒழிய, மக்களுக்கா னதல்ல.

(தொடரும்)

# "ஆவின் பாலை மலிவு விலையில் வழங்கு!"

## –பால் விலை உயர்வுக்கெதிராக பெ.வி.மு.வின் ஆர்ப்பாட்டம்.

''மாடு வளர்த்தவனுக்கு வயித்துல அடுப்பு! பாலு வாங்குறவனுக்கு வயித்திலே நெருப்பு! சந்தையிலே தனியார் பால் ஏகபோகம் இருக்கு! 'ஆவின்' பாலை மலிவா மக்க ளுக்கு வழங்காம எதுக்குடா அரசாங்கம் கோட்டையிலே கெடக்கு?''

பால் விலையேற்றத்தைக் கண்டித்து கடந்த 07.09.09 அன்று சென்னை குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகே, பெண்கள் விடுதலை முன்னணியினர் நடத்திய கண் டன ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்ட இம்முழக்கங்கள், பேருந்தில் செல்வோரையும், அப்பேருந்து நிலையத்தைக் கடந்து செல்வோரையும் ஒருகணம் திரும்பிப் பார்க்க வைத்தது!

''தாராளமயத்திற்கு பின் விவசாயத்தை, குறிப்பாக உணவுப் பொருள் விவசாயத்தை அரசு திட்டமிட்டுப் புறக் கணித்து வருவதால், உணவுப் பொருள் சாகுபடியாகும்




விளைநிலங்கள் மெல்லச் சுருங்கி வருவதும்; உணவுப் பொருள் வர்த்தகத்தில் அரசின் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டு அதனை முற்றிலும் தரகு முதலாளிகளிடமும் பன்னாட்டு உணவுக் கழகங்களிடமும் விட்டு விடுவது என்ற அரசின் கொள்கையும்தான், தாறுமாறான இத்தகைய விலையேற்றங் களுக்கு காரணம்!

அதுபோலவே, மேய்ச்சல நிலங்களின்றி மாட்டுத்தீவ னத்தை மட்டுமே நம்பி கால்நடைகளை வளர்க்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட விவசாயிகளின் மீது இடியாய் இறங்கியிருக்கிறது, மாட்டுத் தீவனங்களின் விலையேற்றம்!

மேய்ச்சல் நிலங்கள் அழிந்தது குறித்தோ, மாட்டுத் தீவன கம்பெனிகள் அறிவித்த தடாலடி விலையேற்றம் குறித்தோ வாய் திறக்காத தமிழக அரசு, பால் கொள்முதல் விலையை உயர்த்திக் கேட்கும் விவசாயிகளையே நம் எதிரியாய் நிறுத்தி பால் விலையை உயர்த்தியிருக்கிறது!'' — என, இந்த விலையேற்றங்களுக்குப் பின்னுள்ள சதிகளை அம்பலப் படுத்தி கண்டன உரையாற்றினார், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் மாநிலத் தலைவர் தோழர் அ. முகுந்தன்.

பால் விலையேற்றம் உள்ளிட்டு, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்காக எந்த ஓட்டுக் கட்சியும் போராட முன் வராத நிலையில், பெ.வி.மு. சென்னை மாவட்ட செயலர் தோழர் உஷா தலைமையில் பெருந்திரளாக பெண்கள் தம் கைக்குழந்தைகளோடு கலந்து கொண்டு நடத்திய இந்த ஆர்ப் பாட்டம், மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

— பு.ஜ. செய்தியாளர்.

### முதலாளித்துவ இலாபவெறி:

# பன்றிக் காய்ச்சலை விட கொடிய கிருமி!

**முதலாளித்துவ நிறுவனங்கள், பன்றிக் காய்ச்சல் குறித்த பீதியைத் தங்கள் கல்லாப்பெட்டியை நிரப்பிக் கொள்ளப் பயன்படுத்தி வருகின்றன.**

**வ**யிற்று பிழைப்புக்காக சவூதி சென்றிருந்த சலீம், தன் குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழிக்க கடந்த ஆகஸ்ட் மாதம் பெங்களூர் திரும்பினார். வந்திறங்கிய மூன்று நாட்களில் அவர் காய்ச்சல் மற்றும் தலைவலிக்கு ஆளானார். இதேநேரத்தில் பெங்களூரில் பன்றிக் காய்ச்சல் பற்றிய செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டுக் கொண்டிருந்தன. இந்தப் பின்னணியில், சலீம் குடும்பத்தினரும் உறவினர்களும் தொலைக்காட்சியில் சொல்லப்படும் பன்றிக் காய்ச்சலாக இருக்குமா என்று சந்தேகிக்க ஆரம்பித்தனர். இதை கேட்ட சலீமும் சற்றே நிலை குலைந்தார்.

அவர் குடும்பத்தினர், சலீமை உடனே பெங்களூரில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அம்மருத்துவமனை, ஆரம்ப பரிசோதனை செய்துவிட்டு சலீமை உள் நோயாளியாகச் சேர்த்தது. பன்றிக் காய்ச்சல் பரிசோதனைக்காக இரத்த மாதிரியும் எடுக்கப்பட்டது. பரிசோதனை முடிவுக்கு முன் ''முன்னெச்சரிக்கை'' நடவடிக்கை என்ற பெயரில் பன்றிக் காய்ச்சலுக்கான சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. அவரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கு இடையே நோய் பரவாமலிருக்க கிருமி நாசினிகள், முகமூடிகள், சோப்புகள், துப்புரவுக் கைக்குட்டைகள் மற்றும் வைட்டமின் மருந்துகள் ஆகியவற்றை மருத்துவமனை பரிந்துரைத்தது.

இறுதியாக, நான்காவது நாளில் பன்றிக் காய்ச்சல் இல்லை; சாதாரண காய்ச்சல்தான் என்று பரிசோதனை ஆய்வகம் கூறியது. சலீம் குடும்பத்தினர் இதை கேட்டு ''அப்பாடா'' என்று பெருமூச்சு விடுவதற்குள், நான்கு நாளுக்கான படுக்கை மற்றும் சிகிச்சை செலவிற்கு 15,000 ரூபாய் பில்லை நீட்டி அம்மருத்துவமனை ''அதிர்ச்சி'' வைத்தியம் கொடுத்தது. சவூதியிலிருந்து சலீம் கொண்டு வந்த சேமிப்பை பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளும் மருத்துவமனையும் ருசி பார்த்தன.

இது ஏதோ சலீமுக்கு மட்டுமே நடந்ததாகக் கருதவேண்டாம். கடந்த 3 மாதங்களாக செய்தி ஊடகங்கள், பொதுமக்கள் மத்தியில் பன்றிக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு மாறாக, ஒவ்வொரு ஊடகமும் பன்றிக் காய்ச்சல் பற்றிய பீதியை உருவாக்கிக் கொண்டு வருகின்றன. கிரிக்கெட் ஸ்கோர் போல் உடனுக்குடன் தொடர்ச்சியாக இறப்புகளை அறிவித்து பரபரப்பை ஏற்படுத்துதல்; ஒவ்வொரு நோயாளியையும் நோயாளி குடும்பத்தினரையும் பின் தொடர்ந்து நேரடியாக செய்தி வெளியிடுவது; நேர்காணல்கள்; விவாதம் முதலான பெயர்களில் பயத்தையும் பீதியையும் பொதுமக்கள் மத்தியில் உருவாக்கின.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் கைப்பாவையான உலக சுகாதார அமைப்பின் (WHO) அறிக்கைகள் அடித்தளமாக இருந்தன. உலகில் 391 கொடிய தொற்று நோய்கள் உள்ளன என்றும், இவற்றில் 247 தொற்று நோய்கள் மரணத்தை விளைவிக்கும் என்றும் 2008-இல் இந்நிறுவனத்தின் அறிக்கை எச்சரித்தது. இதன் விளைவாக, இந்தியா மற்றும் உலக அரங்கில் மக்களிடையே பன்றிக் காய்ச்சல் பற்றிய பயபீதி நிலைகொண்டு வினை ஆற்ற ஆரம்பித்தது.

பன்றிக் காய்ச்சல் மற்றும் பறவைக் காய்ச்சலுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளில் ஒன்றான டாமிபுளூவை, ரோஷ் என்ற பன்னாட்டு நிறுவனம் உற்பத்தி செய்கிறது. மற்றொரு மருந்தான ரிலின்ஜாவை, கிளாக்சோ நிறுவனம் உற்பத்தி செய்கிறது. பன்றிக் காய்ச்சல் பீதியைத் தொடர்ந்து, இவ்விரு நிறுவனங்களின் மருந்து விற்பனை சூடு பிடிக்க ஆரம்பித்தது. ரோஷ் நிறுவனத்தின் டாமிபுளூ விற்பனை, கடந்த ஜனவரி முதல் ஜூன் 2009-க்குள் 200 மடங்கு உயர்ந்துள்ளது. அதாவது, சுமார் 4685 கோடி ரூபாய்க்கு இம்மாத்திரை விற்பனையாகியுள்ளது. இது, இந்த ஆண்டு இறுதிக்குள் 10,000 கோடி ரூபாயை எட்டி விடும் என்று வணிக இதழ்கள் கூறுகின்றன. மேலும், 2006-இல் பறவைக் காய்ச்சல் நோய் பரவி கொண்டிருக்கும் போது, டாமிபுளூ விற்பனை மூலம் 2005-ஆம் ஆண்டில் பெற்ற இலாபத்தை விட, இந்நிறுவனம் 17 சதம் கூடுதல் இலாபம் (900 கோடி ஸ்விஸ்ஃபிராங்க்) பெற்றது. இம்முறை இது பன்மடங்கு கூடும் என்று வணிக வல்லுனர்கள் கூறுகின்றனர்.




**''முகக் கவசம் அணிந்து கொள்வது பாதுகாப்பானது'' என்ற பிரச்சாரம், பன்றிக் காய்ச்சல் தொற்றுவதைத் தடுத்ததோ இல்லையோ, அக்கவசம் தயாரிக்கும் முதலாளிகளின் கல்லாப் பெட்டியை நிரப்பிக்கொள்ளப் பயன்பட்டது.**

இன்னொரு பக்கம், கிளாக்சோவின் ரிலின்ஜா மருந்து விற்பனை 1900 சதம் அதிகரித்துள்ளது. கடந்த ஏப்ரல் முதல் ஜூன் 2009-க்குள் அந்நிறுவனம் 492 கோடி ரூபாயைக் கல்லா

கட்டியுள்ளது. மேலும், இந்த ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தித் திறனை மூன்று மடங்காக உயர்த்தி, 60 நாடுகளுக்கு 19 கோடி விழுங்களவு (doses) மருந்துகளை விற்பனை செய்ய உள்ளது.

பன்றிக் காய்ச்சலுக்கான தடுப்பூசி உற்பத்தியில் ஈடுபட 25 நிறுவனங்கள் ஆய்வுகளை முடுக்கி விட்டுள்ளன. இதில் சனோபி - பாஸ்டர், அஸ்டராஜெனிக்கா, கிளாக்சோ, பேக்டர், நோவாத்திரிஸ் ஆகிய ஐந்து நிறுவனங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் தடுப்பூசியை சந்தைப்படுத்தி 80 சதவீத தேவையை நிறைவு செய்யும் என கூறப்படுகிறது. கிளாக்சோ நிறுவனம் 16 நாடுகளில் 19.5 கோடி தடுப்பூசி மருந்துக் குடுவைக்கு முன்பதிவு (ஆர்டர்) பெற்றுள்ளது. மேலும் 50 நாடுகளிலில் முன்பதிவைப் பெற அரசுகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்நிறுவனம், ரிலின்ஜா மாத்திரை மற்றும் தடுப்பூசி விற்பனை மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் 24,000 கோடி ரூபாயை ஈட்ட உள்ளது. உலகப் பொருளாதார மந்தத்தின் விளைவாக, திவால் நோட்டீசு கொடுக்கப் போன புரோட்டின் சயின்ஸ் கார்ப்பரேஷன் என்ற தடுப்பூசி மருந்து நிறுவனம், இப்போது அமெரிக்க அரசிடமிருந்து பன்றிக் காய்ச்சலுக்கான தடுப்பூசி மருந்துக்கான ஆர்டர்களைப் பெற்று மீண்டெழுந்துள்ளது.




உலக மக்கள் பன்றிக் காய்ச்சல் பயபீதியில் உள்ள பின்னணியில், மருந்து மற்றும் தடுப்பூசி நிறுவனங்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்ட இலாபம் கிடைப்பதோடு, அது பலமடங்கு பெருகத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக, மேற்குறிப்பிட்ட மருந்து நிறுவனங்களின் பங்குகள், பங்கு சந்தையில் விரைவான ஏற்றத்தைக் கண்டு வருகின்றன. உதாரணமாக, நோவாவெக்ஸ் என்ற மருந்து கம்பெனியின் பங்கு விலை 79 சதம் உயர்ந்துள்ளது.

பயபீதியும் அதன் மூலம் அடைந்த கொள்ளை லாபமும் மருந்து கம்பெனிகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சோப்பு, கிருமி-நாசினி, டானிக்குகள், லேகியங்கள், துப்புரவுக்கான கைக்குட்டைகள், முகமூடிகள், வைட்டமின் மாத்திரைகள் மற்றும் வெப்பமானி உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் கோடி கோடியாய் கல்லா கட்டி வருகின்றன. மேற்குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், தங்களுடைய பொருட்களின் விளம்பரத்தில் பன்றிக் காய்ச்சலை மையப்படுத்தி புதிய விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றன. உதாரணத்திற்கு, யூனிலிவர் நிறுவனம் லைப்பாய் சோப்புக்கு ''பன்றிக் காய்ச்சல் கிருமியை அப்புறப்படுத்தும்'' என்ற வாசகத்துடன் மோசடியாக விளம்பரம் செய்கிறது.

நாள் ஒன்றுக்கு, ஒரு மருந்து கடையில் 10 வரை விற்றுக் கொண்டிருந்த ''டெட்டால்'' என்ற கிருமி நாசினி, இப்பொழுது 100, 200 என்ற அளவில் விற்பனை ஆகிறது. இந்த பன்றிக் காய்ச்சல் பயபீதியால், டெட்டால் மருந்தின் இந்திய சந்தை 1000 கோடி ரூபாயாகப் பெருகியுள்ளது. ஜான்சன் நிறுவனத்தின் ''ப்யூர்ல்'' என்ற கிருமி நாசினியின் விற்பனையோ, 210 கோடி ரூபாயிலிருந்து 452 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக ஹிமாலயா மருந்து கம்பெனியினால் அறிமுகப்படுத்தப்பட்டு, அவ்வளவாக எடுபடாமல் போன ''ஃப்யூர் ஹேண்ட்ஸ்'' என்ற கை சுத்தம் செய்யும் கிருமி நாசினியின் விற்பனை தற்போது 5 மடங்காக அதிகரித்துள்ளது. முகமூடி கம்பெனியான ரெலிகேர் பல கோடிகளை இலாபமாக அள்ளியுள்ளது. இன்னொரு பக்கம் சில்லரை மருந்து விற்பனையில் ஈடுபடும் பெரும் வர்த்தகர்கள், மருந்துகள் மற்றும் முகமூடிகளை பதுக்கியும் விலையேற்றியும் விற்று கணிசமாக சம்பாதித்துள்ளனர். இப்படி தரகு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களான யூனிலிவர், டாபர், ஜான்சன், ரிலிகேர், ஐடிசி, கோத்ரேஜ், ஹிமாலயா போன்றவை பன்றிக் காய்ச்சல் பீதியை பயன்படுத்தி நடுத்தர மக்களை மொட்டையடித்து வருகின்றன. ஏறத்தாழ 200 ஆயிரம் கோடி டாலர் அளவுக்கு மனித இனம் பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சலுக்கான மருந்து-மாத்திரை மற்றும் சிகிச்சைகளுக்குச் செலவிட்டுள்ளதாக உலக வங்கி கூறுகிறது.

மருந்துகளைப் பயன்படுத்தியோ அல்லது கிருமி நாசினிகள், முகமூடிகள் மட்டுமே கொண்டு பன்றிக் காய்ச்சலை கட்டுப்படுத்த முடியுமா? இது நுனிப்புல் மேய்ந்த கதையாகத்தான் இருக்கும். பறவை மற்றும் பன்றிக் காய்ச்சல் போன்ற புதிய நோய்களின் ஊற்றுக் கண்களை அடையாளம் கண்டு களைய வேண்டும். இந்நோய்களுக்கு ஊற்றுக் கண்ணாய் இருப்பது, மேலைநாடுகளில் நிலவும் முதலாளித்துவ விவசாய-கால்நடை உற்பத்தி முறையே ஆகும்.

பரவலாக இருந்த பல ஆயிரக்கணக்கான சிறு கால்நடை விவசாயிகளை ஒழித்துகட்டி, ஒரு குறிப்பிட்ட புவியமைப்பு பகுதிகளில் குவிமையமாக குறிப்பிட்ட சில நிறுவனங்கள் இலட்சக்கணக்கான கால்நடைகளை அதிதீவிர முறையில் தொழிற்சாலை போல் வளர்ப்பதே முதலாளித்துவப் பாணியிலான கால்நடைப் பண்ணை உற்பத்தி முறையாகும். இப்படிப்பட்ட உற்பத்தி முறையினால்தான் பன்றிகள், பறவைகள் மற்றும் இதர கால்நடைகளுக்கும் மனிதர்களும் இடையில் நோய்கள் விரைவாகப் பரவுகின்றன. மேலும், இப்பண்ணைகள், நோய் கிருமிகள் தன்னை மரபுரீதியாக மாற்றியமைத்து கொள்ள ஏற்ற இடமாகவும் உள்ளது. ஆகையால், முதலாளிகளின் இலாபவெறியும் பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களும் ஒன்றுக்கொன்று நேரடியாகத் தொடர்பு உள்ளதாகும். இலாபவெறி பெருகப் பெருக பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களும் பெருகுகின்றன. இப்படி ஒரு பிரிவு முதலாளித்துவத்தால்

உருவாக்கப்பட்ட நோயை, மற்றொரு பிரிவு முதலாளித்துவம் பயன்படுத்தி, பீதியூட்டி மேலும் கொழித்துக் கொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம், பன்னாட்டு மற்றும் தரகு முதலாளித்துவ மருந்து கம்பெனிகள் ஏகபோகமாக மக்களை சுரண்ட, சுகாதார துறையானது எந்த ஒரு விதிவிலக்கும் இன்றி தனியார்மயமாக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு, சுகாதார துறைக்கு என்று ஒதுக்கும் நிதி மிக அற்பமானது. கடந்த பல ஆண்டுகளாக ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.12 சதமே சுகாதார துறைக்கு ஒதுக்கப்படுகிறது. (தற்சமயம் சீன அரசு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதத்தை ஒதுக்கியது. இதை 6 சதமாகவும் உயர்த்தத் தீர்மானித்துள்ளது). மேலும், ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் என்ற விதிப்படிப் பார்த்தால், 6 லட்சம் மருத்துவர்கள் நம் நாட்டில் பற்றாக்குறையாக உள்ளனர். இதற்கு மேல் செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்களின் பற்றாக்குறையும் உள்ளது. பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களை ஆய்வு செய்து உறுதி செய்யக் கூடிய அரசு ஆய்வகங்கள் வெறும் 18 மட்டுமே உள்ளது.

பொது மருத்துவச் சேவையை வலுப்படுத்துவதற்கு மாறாக, இருக்கும் அற்ப சேவைகளையும் தனியார்மயமாக்கப்பட்டு வருவதன் விளைவாக, ஆண்டுதோறும் 4 லட்சம் பேர் காச நோயால் இறக்க நேரிடுகிறது; 30 முதல் 40 லட்சம் பேர் மலேரியா நோய்க்கு ஆளாகிறார்கள். 80 சதத்திற்கும் மேலான மருத்துவ சேவையை பெற, தனியாரிடம் கைகட்டி நிற்க வேண்டிய அவலம் நேரிடுகிறது. பன்றிக் காய்ச்சல் பரிசோதனைக்காக பலமணி நேரம் காக்க வேண்டி இருக்கிறது. அல்லது தனியார் ஆய்வகத்திடம் 1500 முதல் 4000 ரூபாய் வரை அழ வேண்டியுள்ளது. பன்றிக் காய்ச்சலைப் பயன்படுத்தி பீதியூட்டி, தனியார் மருந்து கம்பெனிகள் முதல் மருத்துவமனைகள் வரை கொள்ளையடிக்க இவை மேலும் வாய்ப்பளிக்கின்றன. பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு மூலக்காரணமாக இருந்து, பன்றிக் காய்ச்சலைப் பயன்படுத்திச் சுரண்டும் முதலாளித்துவத்தை ஒழிக்காமல், மருத்துவ - சுகாதாரத் துறையைத் தனியார்மயமாக்கி நாட்டு மக்களின் உயிரையே காவு கொண்டு வரும் இன்றைய ஆட்சியாளர்களை வீழ்த்தாமல், நோய் நொடியற்ற சமுதாயத்தைக் கட்டியமைக்கவே முடியாது.


● சுடர்

# கள்ளச் சாராயத்திற்குக் காவடி! அதை எதிர்த்தவருக்கு குண்டாந்தடி!!

**–வீராணம் போலீசின் திருவிளையாடல்கள்**

கள்ளச் சாராயத்துக்கு எதிராகப் போராடிய மனித உரிமைப் பாதுகாப்பு மைய (HRPC)த்தின், சேலம் மாவட்டப் பொருளாளர் அய்யனார் மீது, பொய் வழக்குப் பதிந்து கொலைவெறித் தாக்குதலை தொடுத்திருக்கிறது, வீராணம் போலீசு!

வீராணம் ஸ்டீல் பிளாண்ட் போலீசு நிலைய ஆய்வாளர் ரவிக்குமார், உதவி ஆய்வாளர்கள் விநாயகம், ஜீவானந்தம்; ஆட்டையாம்பட்டி போலீசு நிலைய ஆய்வாளர் ராஜாராணவீரன் மற்றும் இவ்விரு போலீசு நிலையங்களைச் சேர்ந்த 14 போலீசு அடங்கிய இக்கும்பல், கடந்த 9.8.09 அன்று காலை 7.00 மணியளவில் பொதுமக்கள் முன்னிலையிலேயே அய்யனாரை வீடு புகுந்து தாக்கி, கையை முறித்திருக்கிறது.



‘‘கள்ளச் சாராயத்துக்கு எதிராகவா போராடுற... பொய்யாகவே கேசு போடுறோம்; உன்னால என்னடா புடுங்க முடியும்?’’, ‘‘மனித உரிமை அமைப்புல கூட்டமா போடுற, இப்ப எந்த மனித உரிமை அமைப்பு உன்னைக் காப்பாத்தும்; பாக்கலாம்’’, ‘‘வீராணம் ஸ்டேஷனுக்கு வர்றதுக்கு ஒரு இலட்ச ரூபாய் கடன் வாங்கி லஞ்சம் கொடுத்து வந்தேண்டா, என் பொழப்புல மண்ணப் போட்டுட்டியேடா’’ — அய்யனாரைத் தாக்கியபோது போலீசு உதிர்த்த வார்த்தைகள் இவை; அய்யனார் மீது கொலைவெறித் தாக்குதலைக் தொடுப்பதற்கான முகாந்திரமும் இதுதான்!

கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதியில் இயங்கி வரும் மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC), மக்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகவும்; நியாயவிலைக் கடைகளில் நடைபெறும் அநியாயங்களில் தொடங்கி, போலீசு நிலையங்களில் நடைபெறும் கட்டப் பஞ்சாயத்துகள் வரைக்கும் அதிகார வர்க்கத்தின் அடாவடித்தனத்திற்கு எதிராகவும்; களத்தில் நின்று தொடர்ந்து போராடி வந்திருக்கிறது. குறிப்பாக, கள்ளச்சாராயத்துக்கு எதிரான உறுதியான போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறது.

இதனால் தனது ‘வருவாய்க்கு’ வழியின்றி போன ஆத்திரத்தை அடக்கி வைத்திருந்த இக்கும்பல், தருணம் பார்த்து தாக்குதல் தொடுத்திருக்கிறது.

ஏற்கெனவே இப்பகுதி மக்கள் மத்தியில், கட்டப் பஞ்சாயத்து, கள்ளச் சாராய கும்பலுக்கு விசுவாசமாக இப்போலீசு மிருகங்கள் செயல்படுவது அம்பலமாகிப் போன நிலையில், இது ‘‘சட்டப்பூர்வ கிரிமினல் கும்பல்தான்’’ என்பதை தன் நடைமுறை மூலம் மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

இக்கும்பலின் இத்தகைய மிரட்டல்களுக்கு அஞ்சாத இவ்வமைப்பினர், இதனை ஓர் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, இக்கும்பலின் கொட்டத்தை ஒடுக்கும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

— பு.ஜ. செய்தியாளர், சேலம்.

# அணுகுண்டு சோதனைகள் புஸ்வாணமானதா?

**இந்தியா நடத்திய ஹைட்ரஜன் குண்டு சோதனையின் வெற்றி, இந்திய விஞ்ஞானிகளாலேயே கேள்விக்குள்ளாக்கப்படுகிறது.**

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம், அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம் ஆகிய இரண்டு சர்வதேச ஒப்பந் தங்களிலும் இந்தியா கையெழுத்திட வேண்டும் என அமெ ரிக்கா நெருக்குதல் கொடுத்துவரும் இந்த நேரத்தில், 1998-ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா நடத்திய ஐந்து விதமான அணுகுண்டு சோதனைகளுள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் ஹைட்ரஜன் குண்டு சோதனை முழுத்தோல்விய டைந்துவிட்ட ஒன்று என சங்கு ஊதியிருக்கிறார், அணுசக்தி அறிவியலாளர் கே.சந்தானம். ஏறத்தாழ பத்தாண்டு காலம் கழித்து வெளியில் வந்துள்ள இந்தப் 'பூனைக்குட்டியை'ப் பத்தோடு பதினொன்றாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால், அந்த இரகசியத்தை தற்பொழுது அம்பலப்படுத் தியுள்ள கே.சந்தானம், அணுகுண்டு சோதனை நடத்தப்பட்ட சமயத்தில் இந்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் தலைமை ஆலோசகராகப் பணியாற்றி வந்ததோடு, போக்ரான்-2 அணுகுண்டு சோதனைத் திட்டத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

கே.சந்தானம் மட்டுமின்றி, இந்திரா காந்தி பிரதமராக இருந்தபொழுது நடத்தப்பட்ட அணுகுண்டு சோதனைத் திட்டத் தில் பங்குகொண்ட அசோக் பார்த்தசாரதி, அணுசக்தி அறிவி யலாளார் பி.கே.ஐயங்கார், முன்னாள் இந்தியக் கடற்படையின் தளபதியும், அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் கட்டும் திட்டத்தில் பங்கு கொண்டவருமான டாக்டர்.புத்தி கோடா சுப்பாராவ் போன்றோரும் ஹைட்ரஜன் குண்டு சோதனையின் வெற்றியை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

ஹைட்ரஜன் குண்டு சோதனை தோல்வியடைந்து விட்டதாகக் குறிப்பிடும் கே.சந்தானம், அதற்கான அறிவியல் காரணங்களை மட்டுமின்றி, பாமர மக்கள் புரிந்து கொள்ளும் விதமாக சில எளிய விளக்கங்களையும் அளித்துள்ளார். மே 1998-இல் நடத்தப்பட்ட ஹைட்ரஜன் குண்டு சோதனை வெற்றி யடைந்திருந்தால், ''சோதனை நடத்தப்பட்ட இடத்தில் ஏறத்தாழ 70 மீட்டர் விட்டமுள்ள பள்ளம் உருவாகியிருக்க வேண்டும்; பூமிக்கடியில் அக்குண்டினைத் தாங்கி நின்ற 'ஷாப்ட்' (shaft) உடைந்திருக்க வேண்டும்; குறிப்படத்தக்க அளவு நில அதிர்வு ஏற்பட்டிருக்க வேண்டும்'' எனக் குறிப்பிடும் அவர், இந்த மூன் றும் ஏற்படாததால், அச்சோதனையில் ஈடுபட்ட அப்துல் கலாம் உள்ளிட்ட அனைவருக்கும் இச்சோதனை தோல்வியடைந்து விட்ட கதை உடனடியாகத் தெரிந்துவிட்டது எனக் கூறி வரு கிறார், அவர்.

ஆனால், அச்சோதனையில் பங்கு கொண்ட முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாம், தற்பொழுது பிரதம மந்திரி யின் முதன்மை அறிவியல் ஆலோசகராக இருக்கும் ஆர்.சிதம் பரம், அணுசக்தி கமிசனின் தலைவராக இருக்கும் அனில் ககோத்கர் ஆகியோர் ஹைட்ரஜன் குண்டு சோதனை வெற்றி யடைந்து விட்டதாகவே கூறி வருகின்றனர். மேலும், ''கடந்த பத்தாண்டுகளாக இச்சோதனை பற்றி மாற்றுக் கருத்துக் கூறாத கே.சந்தானம், இப்பொழுது மாற்றிப் பேச வேண்டிய அவசியம் என்ன?'' எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அணுகுண்டு சோதனைகள் முடிந்தவுடனேயே, அச்சோ தனை குறித்த நில அதிர்வுப் பதிவுகளை ஆராய்ந்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியைத் துறையைச் சேர்ந்த அறிவிய லாளர்கள் ஹைட்ரஜன் குண்டு சோதனை எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தவில்லை என அரசுக்கு அறிக்கை அளித்ததாகவும், இம்முடிவினை மும்பயில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் இக்குற்றச்சாட்டுக்குப் பதில் அளித் துள்ளார், கே.சந்தானம். அப்பொழுது பிரதமர் வாஜ்பாயின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரஜேஷ் மிஸ்ராவின் தலைமையில் இம்முரண்பாட்டினை விவாதிக்க ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், அதில் அப்பொழுது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் இயக்குநர் ஜெனரலாக இருந்த அப்துல் கலாம் உள்ளிட்ட பல அணுசக்தி அறிவியலாளர்கள் கலந்து கொண்டதாகவும் குறிப்பிடுகிறார், அவர்.



**இந்தியாவின் ஹைட்ரஜன் குண்டு சோதனை வெற்றியடைந்து விட்டதாகக் கூறப்படுவதைக் கேள்விக்குள்ளாக்கிவரும் கே.சந்தானம்.**

''இக்கூட்டத்தில் ஹைட்ரஜன் குண்டு சோதனையின் வெற்றி குறித்து ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இப்படிப்பட்ட தருணங்களில், ஒரு தனிப்பட்ட சுதந்திரமான குழுவொன்றை அமைத்து இப்பிரச் சினை பற்றி ஆராய்ந்து அதன் பின் முடிவை அறிவிப்பதுதான் வழக்கம். ஆனால், இவ்வழக்கத்திற்கு மாறாக, பிரஜேஷ் மிஸ்ரா குரல் ஓட்டெடுப்பு போல ஒன்றை நடத்தி, பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் பக்கமாகச் சாய்ந்தார். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் இயக்குநர் ஜெனரல் அப்துல் கலாமும் அணுசக்தி கமிசனின் தலைவர் ஆர்.சிதம் பரமும் இணைந்து ஹைட்ரஜன் குண்டு சோதனை வெற்றிய டைந்துவிட்டதாகப் பத்திரிகைகள் மூலம் அறிவித்தனர்'' என நடந்த சம்பவங்களை விளக்கியிருக்கிறார், கே.சந்தானம்.

ஹைட்ரஜன் குண்டு சோதனை வெற்றிய டைந்துவிட்டதாகக் கூறிவரும் அப்துல் கலாம், ஆர்.சிதம்பரம், அனில் ககோத்கர் ஆகியோர் பாதுகாப்பு ஆராய்ச்சித் துறைக்கும் பாபா அணு ஆராய்ச்சி மையத்திற்கும் இடையே முரண் பாடு நிலவியதையோ, அது தொடர்பாக கூட்டம் நடந்ததையோ மறுக்காதது மட்டுமல்ல, எதிர்பார்த்த அளவிற்கு நில அதிர்வு பதிவா காததையும் ஏற்றுக் கொள்கிறார்கள். நில அதிர்வு பதிவாகாததற்கு, நில அதிர்வைப் பதிவு செய்வதற்கு தயாரிக்கப்பட்டிருந்த பாது காப்பு ஆராய்ச்சித் துறையின் சாதனங்கள் துல்லியமாக இயங்கவில்லை என மட்டையடி யாகப் பதில் அளிக்கின்றனர். இது உண்மை யென்றால், பாதுகாப்பு ஆராய்ச்சித் துறை வெறும் கொல்லன் பட்டறை வேலையைத்தான் செய்து வருகிறதா என்ற கேள்வி நமக்குள் எழுந்து விடுகிறது.




பாதுகாப்பு ஆராய்ச்சித் துறையின் பதிவுகள் மட்டுமல்ல, பல்வேறு நாடுகளில் இச்சோதனை குறித்துப் பதிவாகியுள்ள நில அதிர்வுகள்கூட எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு இல்லை. இதற்கு வேறொரு சப்பைக்கட்டை முன்வைக்கிறது, இந்திய அரசு. சோதனை நடத்தப்பட்ட இடத்தின் பூகோள அமைப்பு வித்தியாசமாக இருப்பதால்தான், பல்வேறு நாடுகளில் நில அதிர்வுகள் எதிர்பார்த்த அளவிற்குப் பதிவாகவில்லை எனச் சமாளிக்க முயலுகிறது. இந்தக் காரணங்களை முற்றிலுமாக நிராகரிக்கிறார், கே.சந்தானம்.

சோதனை நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் அமைந்துள்ள கிராமங்கள் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ப தற்காகவே ஹைட்ரஜன் குண்டின் வெடிப்புத் திறனைக் குறைத் துச் சோதனை நடத்தியதாகவும், அதனால்கூட நில அதிர்வுகள் எதிர்பார்த்த அளவிற்குப் பதிவாகியிருக்காது என்றும் காரணம் கூறப்படுகிறது. பொது மக்களின் எதிர்ப்பையெல்லாம் மீறி ஊருக்குள்ளேயே அணு மின்சார நிலையங்களைக் கட்டி, அணுக்கழிவுகளை அங்கேயே கொட்டிப் பாதுகாத்து வரும் இந்திய அரசிடமிருந்து இப்படிபட்ட காரணத்தைக் கேட்கும் பொழுது, நமது மேனி சிலிர்த்துதான் போகிறது.

நில அதிர்வு குறித்து மட்டுமின்றி, பல்வேறு அறிவியல் காரணங்களை முன்வைத்தும் ஹைட்ரஜன் குண்டு சோதனை யின் வெற்றி-தோல்வி குறித்து வாதப் பிரதிவாதங்கள் நடந்து வருகின்றன. இப்பொழுதுகூட இப்பிரச்சினை குறித்து முடிவு சொல்ல ஒரு சுதந்திரமான நிபுணர்கள் குழுவொன்றை அமைப் பதற்கு இந்திய அரசு தயாராக இல்லை. மாறாக, பத்திரிகை கள் மூலம் லாவணி பாடியே, இப்பிரச்சினைக்கு மங்களம் பாடி விட முயலுகிறது.

மே 1998-இல் அணுகுண்டு சோதனைகளை நடத்தி முடித் தவுடன், அமெரிக்கா இந்தியா மீது சில பொருளாதாரத் தடை களை விதித்தது. அமெரிக்காவைத் தாஜா செய்து இப்பொருளா தாரத் தடைகளை நீக்குமாறு செய்ய, ''இந்தியா இனி அணு குண்டு சோதனைகளை நடத்தாது'' எனத் தன்னிச்சையாக இந்திய அரசு அறிவித்தது. இதனைத் தொடர்ந்துதான், இந்தியா, அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் அடிப்படையில்தான், யுரேனியம் இறக்குமதி தொடர்பாக அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகள் கூட்டமைப்புடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இப்படிபட்ட சூழ்நிலையில் ஹைட்ரஜன் குண்டு சோதனை எதிர்பார்த்த விளைவுகளைக் கொடுக்கவில்லை என ஒப்புக் கொண்டால், சீன அபாயத்தைச் சமாளிக்க இந்தியா மீண்டும் அணுகுண்டு சோதனைகளை நடத்த வேண்டும் என்ற நெருக் குதலுக்கு இந்திய அரசு மட்டுமின்றி, காங்கிரசு, பா.ஜ.க., போன்ற ஆளும் வர்க்கக் கட்சிகளும் முகம் கொடுக்க நேரி டும். இந்த நெருக்குதலுக்குப் பணிந்து மீண்டும் அணுகுண்டு சோதனைகள் நடத்தினால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளைப் பகைத்துக் கொள்ள நேரிடும். இந்திய ஆளும் கும்பலைப் பொருத்தவரை, தற்பொழுது நிலவிவரும் பொருளாதார நெருக்கடியில் மேற்குலக ஏகாதி பத்திய நாடுகளைப் பகைத்துக் கொள்வது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமானது. எனவே, உண்மை எப்படியிருந் தாலும், ஹைட்ரஜன் குண்டு சோதனை வெற்றி எனக் கூறிக் கொள்வதைத்தான் அவர்கள் விரும்புவார்கள்.

இதுவொருபுறமிருக்க, இந்தியா தன்னை வல்லரசாகக் காட்டிக் கொள்ளும் முகமாக, அறிவியல்-தொழில்நுட்ப ஜாம் பவானாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் சுயதம்பட்டத் தில் இறங்கி வருகிறது. இந்தியாவால் சந்திரனுக்கு அனுப்பப் பட்ட செயற்கைக் கோள், அதனின் ஆயுள் காலத்திற்கு முன்பே செயல் இழந்துவிட்டது. அதற்கான காரணங்களை மக்கள் முன் வைத்து விளக்குவதைவிட, அத்திட்டம் 95 சதவீதம் வெற்றிய டைந்துவிட்டது எனத் தம்பட்டம் அடித்துக் கொள்வதில்தான் இந்திய அறிவியலாளர்கள் குறியாக இருந்தார்கள்.

சந்திரனில் தண்ணீர் இருப்பதை இந்திய செயற்கை கோளில் பொருத்தப்பட்டிருந்த அமெரிக்காவுக்குச் சொந்தமான கருவி தான் கண்டுபிடித்ததாக முதல்நாள் செய்தி வெளியாகிறது. மறுநாளே, நமது விஞ்ஞானிகள் அதற்கு முன்பாகவே சந்தி ரனில் தண்ணீர் மூலக்கூறுகள் இருப்பதைக் கண்டுபிடித்து விட் டதாக இந்திய அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டது.

இந்திய அரசு சமீபத்தில் அணுசக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பலொன்றைத் தயாரித்து வெள்ளோட்டம் விட்டது. இந்தக் கப்பல் உள்நாட்டிலேயே கட்டப்பட்டதைக் காட்டி, இந் தியா அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் கட்டும் தொழில்நுட்பத்தைத் தனது சொந்த முயற்சியில் பெற்றுவிட்டதாகத் தம்பட்டம் அடித் துக் கொள்ளப்பட்டது. ஆனால், அக்கப்பலுக்குள் இருக்கும் சிறிய அணு உலையை வடிவமைத்துக் கட்டுவதில் இந்திய அறிவியலாளர்கள் திணறிப் போனதும், அதற்கு ரசிய நாட்டைச் சேர்ந்த வல்லுநர்கள்தான் உதவினார்கள் என்பதும் திட்டமிட்டே மறைக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல, 1975-இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் 2009-இல்தான் முடிக்கப்பட்டது; 1,000 கோடி ரூபாய் என்ற ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், இதுநாள் வரை 30,000 கோடி ரூபாயை முழுங்கியிருக்கிறது என்பதில் இருந்து நமது நாட்டு அணுசக்தி ஆராய்ச்சியாளர்களின் திறனை மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

இந்தியாவின் அணுசக்தித் துறையும், பாதுகாப்புத் துறையும் 'தேசப் பாதுகாப்பு' என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு, அத்துறைகளில் நடக்கும் ''ஆராய்ச்சி'' குறித்த விவரங்களைக் கேட்கும் உரிமை மக்களுக்குக் கிடையாது என மறுத்து வருகின்றனர். ஹைட்ரஜன் அணுகுண்டு சோதனை வெற்றியா, இல்லை தோல்வியா என்பதை அறிந்து கொள்ள மட்டுமல்ல, பொதுமக்களின் வரிப்பணம் தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் விரயமாக்கப்படுவதையும், ஆராய்ச்சி என்ற பெயரில் அதிகார வர்க்கம் தின்று கொழுப்பதையும் தடுப்பதற்கும்கூட, அத்துறைகள் வெளிப்படையான தன்மையுடன் இயங்க வேண்டும் எனக் கோருவது அவசியமாகிறது.

இதைவிட முக்கியமானது எதுவென்றால், ஹைட்ரஜன் குண்டு சோதனை குறித்து முட்டிக் கொள்ளும் இரு தரப்புமே இந்தியாவின் மேலாதிக்க நோக்கத்தில் இருந்துதான் இப்பிரச்சினையை அணுகி வருகின்றன. ''3,000 கி.மீட்டருக்கு மேல் பறந்து சென்று தாக்கவல்ல ஏவுகணைகளைக் கொண்டுள்ள இந்தியா, அதிக அழிவு ஏற்படுத்தக்கூடிய அணு ஆயுதங்களைப் பெற வேண்டியது அவசியம்; சீனாவின் முன் நாம் அம்மணமாக நிற்கிறோம்'' என வாதிடுகிறார், கே.சந்தானம். இவரது குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்துள்ள தேசியப் பாதுகாப்புச் செயலர் எம்.கே.நாராயணன், ''தற்பொழுது இந்தியாவிடம் உள்ள அணு ஆயுதங்களைக் கொண்டு 50,000 முதல் 1,00,000 வரையிலான மக்களைக் கொன்றொழிக்க முடியும்'' எனப் பதிலடி கொடுக்கிறார்.(தி ஹிந்து, 21.09.2009, பக்.12)

இந்த இரண்டு தரப்பில் எத்தரப்பை நாம் ஆதரித்தாலும், அது இந்தியா-சீனா-பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப் போட்டி தீவிரமடையத் தூபம் போடுவதாகவே அமையும். எனவே, இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களையும், அதனின் போர் வெறி மற்றும் தேசிய வெறியையும் எதிர்த்துப் போராடுவதே இந்திய உழைக்கும் மக்களின் முன்னுள்ள முதற்கடமையாகும்.

● குப்பன்

# ஒன்பது ஆண்டுகால இழுத்தடிப்புக்கு முற்றுப்புள்ளி! அடிபணிந்தது அதிகார வர்க்கம்!!

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அருகே உள்ளது சுந்தரவாண்டி கிராமம். இக்கிராமத்தை சேர்ந்த 59 பேருக்கு 2000-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாவிற்கு கடந்த ஒன்பது ஆண்டுகளாக நிலத்தைப் பிரித்துக் கொடுக்காமல், இம்மக்களை அலைக்கழித்து வந்தது, அதிகார வர்க்கக் கும்பல்!

வீட்டு மனைப் பட்டா ஒன்றிற்கு தலா ரூ.5000/- வரை ஏற்கெனவே 'வசூலித்து' விட்ட இக்கும்பல், உள்ளூர் ஓட்டுக் கட்சி பிரமுகர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு, மேலும் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென மிரட்டி வந்தது.

தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரசு என்று கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும், கிராம நிர்வாக அதிகாரி தொடங்கி வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் வரையிலான அதிகார வர்க்கக் கும்பலும் கொண்ட இக்கூட்டு களவாணிகளின் கொள்ளையை ''வீதியிலிறங்கிப் போராடுவதன் மூலம் மட்டுமே முறியடிக்க முடியும்'' என்ற அறைகூவலோடு களமிறங்கியது, பு.மா.இ.மு.

முதற்கட்டமாக, பாதிக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி, கடந்த 14.9.09 அன்று கடலூர் ஆட்சியர் அலுவலகம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது, பு.மா.இ.மு. இதனைக் கண்டு, பீதியுற்ற மாவட்ட ஆட்சியர் நேரில் வந்து மனுவைப் பெற்றுக் கொண்டதுடன், தனிப்பட்ட விசாரணைக்கும் உத்தரவிட்டார். எனினும், இரண்டு வாரங்கள் கடந்த பின்னரும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், பகுதி மக்களை அணி திரட்டிய பு.மா.இ.மு.வினர், கடந்த 01.10.09 அன்று காலை பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இச்செய்தியறிந்து உள்ளூர் செய்தியாளர்களும், தொலைக்காட்சி நிருபர்களும் குவிந்தனர்.

இதனைச் சற்றும் எதிர்பார்க்காத மாவட்ட நிர்வாகம், ''அரசு அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்து பணி செய்ய விடாமல் தடுத்து மிரட்டியதாக'' வழக்குப் போடுவோம் என முன்னணியாளர்களை மிரட்டிப் பார்த்தது. முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொண்ட பகுதி மக்களோ, ''அப்படியானால் எங்கள் எல்லோர் மீதும் அதே வழக்கைப் போட்டு எங்களையும் சிறையிலடை'' என உறுதியாய் நின்று அதிகார வர்க்கத்திற்குச் சவால் விட்டனர்.

நிலைமை கைமீறிப் போனதையடுத்து, உடனே நிலத்தைப் பிரித்து கொடுப்பதாக வாக்குறுதி தந்து, பகுதி மக்களிடம் அதிகாரிகள் சமரசம் பேசினர். அதன்படி அக்.2 காந்தி ஜெயந்தி அன்று, அரசு விடுமுறை என்றும் பாராது,




**வீட்டுமனைப் பட்டாவைத் தாமதிக்காமல் வழங்கக் கோரி, கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.**

வட்டாட்சியர் தலைமையில் வந்த அதிகாரிகள் 59 குடும்பங்களுக்கும் நிலத்தைப் பிரித்துக் கொடுத்தனர்.

''அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்'' என்பதற்கிணங்க, புரட்சிகர அமைப்பினரின் தொடர்ச்சியான போராட்டங்களால் கிடைக்கப் பெற்றுள்ள இவ்வெற்றி இப்பகுதி மக்களிடம் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**— பு.ஜ. செய்தியாளர், கடலூர்.**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11



அரசு பங்களாவில் தங்குவதையும் விமானத்தில் சாதாரண வகுப்பில் பயணம் செய்வதையும் கேவலமாகக் கருதும் எஸ்.எம்.கிருஷ்ணா மற்றும் சசிதரூர் (வலது): மந்திரிகளா? மகாராஜாக்களா?

# காங்கிரசின் 'சிக்கனம்': ஊரை ஏய்க்கும் வக்கிரம்!

பிர்லா மாளிகையில் தங்கிக் கொண்டு காந்தி எளிமையாகக் காட்சியளித்ததும்; 'மகாத்மா'வை எளிமையானவராகக் காட்டுவதற்கு காங்கிரசுக்கு ஏற்பட்ட செலவு குறித்து காங்கிரசு கட்சித் தலைவர்களுள் ஒருவரான சரோஜினி நாயுடு அங்கலாய்த்துக் கொண்டதும் நமது நினைவில் உறைந்திருக்கும் பழைய வரலாறு. ''காங்கிரசு கட்சி எம்.பி.க்கள் தங்கள் சம்பளத்தில் 20 சதவீதத்தைக் குறைத்துக் கொள்வார்கள்'' எனக் கட்டளையிட்டிருப்பதன் மூலம், காங்கிரசுக்கே உரித்தான அந்தப் போலித்தனத்தை மீண்டும் நமக்கு நினைவூட்டியிருக்கிறார், காங்கிரசு தலைவி சோனியா காந்தி.

இந்தக் கட்டளைக்கு அடிபணிந்து, அதுவரை ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கியிருந்து கொண்டு ''மக்கள் சேவை'' ஆற்றிவந்த வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும், அத்துறையின் துணை அமைச்சர் சசிதரூரும், தங்களின் ஜாகையை அரசு பங்களாக்களுக்கு மாற்றிக் கொண்டுவிட்டார்கள். அமைச்சர் வந்து தங்கப் போவது தெரிந்து அரசு பங்களாக்கள் ஐந்து நட்சத்திர விடுதி அறைகளைப் போல பளபளவென அரசு செலவில் மாற்றப்பட்டிருக்கலாம். அடடா, எப்பேர்பட்ட எளிமை! எப்பேர்பட்ட சிக்கனம்!

- ★ இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்திர சம்பளம் **ரூ.16,000.**
- ★ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகுதிப்படி **ரூ.20,000.**
- ★ நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் பொழுது வழங்கப்படும் தினப்படி **ரூ.1,000.**
- ★ நாடாளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் செலவுகளுக்காக மாதந்தோறும் வழங்கப்படும் அஞ்சல் படி **ரூ.5,000.**
- ★ அமைச்சர்களின் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு -வெளிநாட்டுப் பயணங்களுக்காக இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை **ரூ.160.76 கோடி.**
- ★ அமைச்சர்களின் பங்களாக்களைப் பளபளவென மாற்றியமைப்பதற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை **ரூ.93.5 கோடி.**
- ★ சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களுக்கு வழங்கப் பட்டுள்ள பாதுகாப்பிற்காக 2006-07 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை **ரூ.154.32 கோடி.**
- ★ தமிழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மாதந்தோறும் பெறும் சம்பளம் மற்றும் படிகள் **ரூ.50,000.**

இந்திய மக்களில் 70 சதவீதம் பேர் அன்றாடம் பெறும் தினக்கூலியே வெறும் இருபது ரூபாய்தான். அவர்கள் அரைப்பட்டினியாய் - முழுப்பட்டினியாய் வாழ்க்கையை ஓட்டும்பொழுது, நமது 'மக்கள் பிரதிநிதிகள்' பொதுப் பணத்தில் மகாராஜாக்களைப் போல பவனி வருவதை மேலேயுள்ள பட்டியலைப் பார்த்தே புரிந்து கொள்ளலாம்.

வறட்சியாலும் வறுமையாலும் அன்றாடச் சோற்றுக்கே வழியின்றித் திண்டாடும் உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த ஏழைத்தாய்.



இந்திய மக்கள் இப்படி வறுமையில் உழல்வது இப்பொழுதுதான் தெரிய வந்தது போல மன்மோகன் சிங்கும், சோனியாவும் சிக்கனமாக நடந்து கொள்ளும்படி கட்டளை போடுகிறார்கள். அக்கட்டளையை அவரது கட்சியைச் சேர்ந்த அமைச்சரே (சசிதரூர்) நக்கல் செய்கிறார்.

நாய் வாலை நிமிர்த்தினாலும், ஆளும் கும்பலும் ஓட்டுப்பொறுக்கி அரசியல்வாதிகளும் பொதுப் பணத்தில் மஞ்சள் குளிப்பதை மாற்றிவிட முடியுமா?